Registered as a Newspaper

# உதயன்

சஞ்சீவி

விலை ரூ. 60

பக்கங்கள் 32

சுடர் : 38
கதிர் : 50

ஞாயிற்றுக்கிழமை 15 ஜனவரி 2023

தை 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




## புதிய கூட்டணியாயினும் ஒன்றாகவே பயணிப்போம்

தமிழரசின் தலைவர் மாவை தெரிவிப்பு

விரிவு:- பக்.05

# நாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; 5 கட்சிகள் இணைந்து பிரகடனம்!

## யாழில் நேற்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

**யாழ்ப்பாணம், ஜனவரி 15**

**தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 5 தமிழ்க் கட்சிகளும் இணைந்து புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் நேற்று சனிக்கிழமை கைச்சாத்திட்டுள்ளன. 5 தமிழ்க் கட்சிகளும் 'ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி' எனும் பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளன.**

»30




## வலி. வடக்கிலுள்ள காணிகளை விடுவிக்குமாறு அன்ரனிபுரத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 15

வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி பலாலி அன்ரனிபுரம் பகுதியில் நேற்றுப் போராட்டமொன்று இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அன்ரனிபுரம் பகுதியிலுள்ள

»27

## யாழ். மாவட்டச் செயலராக சிவபாலசுந்தரன் நியமனம்?

### அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதியாகும் எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாண மாவட்டச் செயலராக அ.சிவபாலசுந்தரன் நியமிக்கப்படவுள்ளார் என்று அறிய முடிகின்றது.

»31

## கூட்டமைப்பின் பெயரை பயன்படுத்த முடியாது!

### சுமந்திரன் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரை வேறு தரப்புக்கள் பயன்படுத்த முடியாது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

»31

## சீன ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்!

கொழும்பு, ஜன. 15

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதி அமைச்சர் சென் சாவோவால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அந்தக் கடிதம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறையின் பிரதி அமைச்சர் சென் சாவோ உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்தபோதே இந்தக் கடிதம் வழங்கப்பட்டது. (அ-ம)

## ரணில் இன்று யாழ்.வருகை; காணி விடுவிப்புக்கு ஆலோசனை

- மாவட்டச் செயலகத்தில் இன்று கூட்டம்
- பாதுகாப்புச் செயலர், படைத்தளபதிகள் பங்கேற்பு
- நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணத்துக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணி விடுவிப்புத் தொடர்பிலான அறிவிப்பு எதையும் விடுக்கமாட்டார் என்று தெரியவருகின்றது. பொங்கல் நிகழ்வுகள் முடிவடைந்த பின்னர் இன்று மாலை 5.30 மணிக்கு, யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் உயர்மட்டக் கலந்துரையாடலிலேயே காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட

»27



## மின்வெட்டு கிடையாது

கொழும்பு, ஜன. 15

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்றையதினம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (அ-ம)

## தமிழகக் கிரிக்கெட் அணி யாழில் நட்புறவு ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 15

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நிலையில் அதன் ஓர் அங்கமாக தமிழகக் கிரிக்கெட் அணியுடனான நட்புறவு ரி-20 கிரிக்கெட் ஆட்டம் இடம்பெறவுள்ளது.

»31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாவிகளிடம்

# கொரோனாத் தடுப்பூசி அட்டை கட்டாயம்!



கொழும்பு, ஜன. 15

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பணிகள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி அட்டை வைத்திருப்பது கட்டாயம் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

உலக நாடுகள் பலவற்றில் கொரோனா பரவல் மீண்டும் வேகமாக பரவிவருகின்றது.

இலங்கையிலும் தற்போது சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலாவிகளுக்கு கொரோனாத் தடுப்பூசி அட்டை வைத்திருத்தல் கட்டாயமாக்கப்படுகிறது.

தடுப்பூசி அட்டை இல்லாதவர்கள் 72 மணிநேரத்துக்குள் பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பறவைக்காய்ச்சல் எதிரொலி முட்டைகள் இறக்குமதி இரத்து

கொழும்பு, ஜன. 15

முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு கால்நடை சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்க மறுத்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள முட்டைக்கான தட்டுப்பாடு காரணமாக இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

எனினும் இந்தியாவின் சில மாநிலங்களில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் காரணமாக முட்டைகளை நாட்டுக்கு இறக்குமதி செய்வது ஆபத்தானது.

பறவைக்காய்ச்சல் இல்லாத நாடுகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்யமுடியும்.

முட்டை ஏற்றுமதியில் ஈடுபடும் பிரதான நாடுகளில் நெதர்லாந்து, துருக்கி, போலந்து, அமெரிக்கா, மலேசியா, ஜேர்மனி, சீனா, ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முதன்மை வகிக்கின்றன.

ஆயினும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் கண்டறியப் பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் நாட்டுக்கு முட்டையை இறக்குமதி செய்யும் மற்றுமொரு நாட்டைக் கண்டறிவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது என அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (ச-இ)

இறக்குமதி செய்யப்படும்

## சில பொருள்களுக்கு கட்டுப்பாடுகள் தளர்வு

கொழும்பு, ஜன. 15

இறக்குமதி செய்யப்படும் சில பொருள்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்த அனுமதியளித்துள்ளது.

விளையாட்டுப் பொருள்கள், புகையிரத உதிரி பாகங்கள், அழகுக்கலை தொழில்துறையில் சில பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு விசேட வர்த்தமானி நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட விதிகளை தளர்த்துமாறு அரசாங்க நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இல்லையெனில் கறுப்புச் சந்தை வியாபாரத்தை தடுக்க முடியாது என குழுவில் விவாதிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் உள்ள உத்தரவுகளுக்கமைய குறிப் பிட்ட பொருள்களின் இறக்குமதிக் கட்டுப்பாட்டை தளர்த்துவதற்கு குழு ஒப்புதல் அளித்துள்ளது. (ச-இ)

## பூநகரி கௌதாரிமுனையில் 200 கோடி ரூபா செலவில் அடிப்படைத் தேவைகள் திட்டம்

கிளிநொச்சி, ஜன. 15

பூநகரி கௌதாரிமுனை, மண்ணித்தலை பிரதான வீதி புனரமைப்பு, பாடசாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மீனவர்களுக்கான இறங்குதுறை, முன்பள்ளிகளுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைத் தேவைகள் சுமார் 200 கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று நிலைபெறு தகு வலுசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபால உறுதியளித்துள்ளார்.

பூநகரிகௌதாரிமுனைப் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி செயற்றிட்டம் முன்னெடுப்பது தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டும் கருத்தமர்வு, கௌதாரிமுனை கிராம அலுவலர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய வகையில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் அமையும். இந்தத் திட்டத்தின் மூலம் 240 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கௌதாரிமுனை மண்ணித்தலை பிரதான வீதி மற்றும் உபவீதி உள்ளிட்ட 25 கிலோமீற்றர் வரையான வீதி புனரமைக்கப்படுவதுடன் குறித்த பகுதியில் உள்ள பாடசாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மீனவர்களுக்கான இறங்குதுறை,முன்பள்ளிகளுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் என பல்வேறு செயற்றிட்டங்கள் சுமார் 200 கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (ஒ-14,113)

## கைலாசாவை நாடாக ஏற்றதா அமெரிக்கா?

கொழும்பு, ஜன.15

நித்தியானந்தாவின் கைலாசா நாட்டுக்கும், ஐக்கிய அமெரிக்காவின் நிர்வாக மாகாணம் ஒன்றுக்கும் இடையே கடந்த ஜனவரி 11ஆம் திகதி இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் கைலாசாவை ஒரு நாடாக அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய கைலாசா மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாகாணத்திலுள்ள நெவார்க் சிட்டியும் "இருதரப்பு நெறிமுறை ஒப்பந்தத்தில்" கையெழுத்திடும் விழா நெவார்க் நகர அரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில் ஐ.நா.வுக்கான கைலாசாவின் நிரந்தர தூதர் விஜயப்ரியா நித்யானந்தா, மேயர் பராகா, துணை மேயர் டிஃப்பீராஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். நியூ ஜெர்சியிலிருந்து கைலாசாவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் நெவார்க் நகரத்துடனான ஒப்பந்தத்தில், ஒரு தரப்பு மக்களின் மேம்பாட்டுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக ஒப்பந்தம் செய்யப்பட்டது.

பேரிடர், காலநிலை மாற்றம் போன்றவற்றின் தாக்கங்களை பரஸ்பர உதவியுடன் எதிர்கொள்வது, மனநலப் பிரச்சினைகள், வன்முறை, வறுமை, கல்வியறிவின்மை போன்ற மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளில் பரஸ்பர உதவி சார்ந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. (எ-இ)

## கழுத்தில் வாளை வைத்து மோ.சைக்கிள் கொள்ளை

### இருபாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 15

கழுத்தில் வாள் வைத்து மிரட்டி மோட்டார் சைக்கிள் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலை பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இருபாலை டச்சு வீதியில் இரவு வேலை பயணித்த நபரொருவரை, அந்த வழியால் இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நபர்கள் வழிமறித்து வாளைக் கழுத்தில் வைத்து மிரட்டி மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,26)

## கட்டுப்பணத்தை செலுத்தியது ஜே.வி.பி.

கிளிநொச்சி, ஜன. 15

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) இரு பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணத்தை கிளிநொச்சி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை செலுத்தியது.

கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரண்டு பிரதேசசபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (ஒ-14,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம், ஜன. 15
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா கிருஷ்ணபிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-14,159)

### கரியாலை நாகபடுவான்குள

# நீர்வரவு குறைவால் சிறுபோகம் பாதிக்கும்

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜன. 15
கிளிநொச்சி பூநகரி கரியாலைநாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் குறைவாகக் காணப்படுவதால் எதிர்வரும் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக கரியாலைநாகபடுவான் குளம் காணப்படுகிறது. இந்தக் குளத்தின் கீழ் தற்போது சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் மேலான நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. சிறுபோகம் 600 ஏக்கரில் மேற்கொள்ளப்படுவது வழமை.
வழமையாக இந்தக் காலப்பகுதியில் 10 அடி 10 அங்குலமாக நீர்மட்டம் உயர்ந்து வான் பாயும். ஆனால் இம்முறை குளத்துக்கான நீர் வரவு இடம்பெறவில்லை.
நீர் மட்டம் தற்போது ஐந்தடிக்கு குறைவாகக் காணப்படுவதனால் எதிர்வரும் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரிடும்
எனவே குளத்துக்கான நீர்வரவை அதிகரிப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-13)

## தைப்பொங்கலையொட்டி எகிறியது மரக்கறி விலை

யாழ்ப்பாணம், ஜன. 15
தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகள் வழமையை விட நேற்று அதிகரித்துக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவற்றுக்கு தட்டுப்பாடு நிலவியது என நுகர்வோர் தெரிவித்தனர்.
திருநெல்வேலி சந்தையில் கத்தரிக்காய் கிலோ 700 ரூபாவும் பாவற்காய் கிலோ 500 ரூபாவுக்கும் பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவுக்கும் கரட் கிலோ 400 ரூபாவுக்கும் பூசணிக்காய் கிலோ 150 ரூபாவுக்கும் வெங்காயம் கிலோ 600 ரூபாவுக்கும் கீரை ஒருபிடி 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டன. (ச)

## கிணற்றில் தவறி வீழ்ந்து மூதாட்டி சாவு


சாவகச்சேரி, ஜன. 15
கிணற்றில் தவறி வீழ்ந்து மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நுணாவில் மேற்கு விளைவேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
தைப்பொங்கலுக்காகவளவை துப்புரவு செய்த பின்னர் கிணற்றடிக்குச் சென்ற வேளை இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
கந்தசாமி லக்ஸ்மி (வயது-66) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.
சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் மாதிரிப் பொங்கல் விழா, பாடசாலை முதல்வர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் பெற்றோரின் முழுமையான பங்குபற்றுதலுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ஒ-14,13)



கிளிநொச்சி மாவட்டத்தில் தைப்பொங்கல் வியாபாரம் களைகட்டியது. கடந்த இரண்டு வருடங்கள் கொரோனாத் தொற்றுக் காரணமாக பண்டிகைகள் நடைபெறவில்லை.
இதனால் இந்த ஆண்டு தைப்பொங்கல் அனைத்து இடங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதனை முன்னிட்டே பொங்கல் வியாபார நடவடிக்கைகள் களைகட்டின. (ஒ-14,113)





இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளிச் சிறார்களின் மாதிரி பொங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-14,159)

## பொங்கல் பொருள்களின் விலைகள் அதிகரித்தன

சாவகச்சேரி, ஜன. 15
தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு சாவகச்சேரி பொதுச்சந்தையில் பொங்கல் வியாபாரம் நேற்று சனிக்கிழமை களைகட்டியது. பொங்கலை முன்னிட்டு பொங்கலுக்கான பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. பொங்கல் பானைகள், பழ வகைகள், மரக்கறி வகைகள் உள்ளிட்ட பல பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று நுகர்வோர் தெரிவித்தனர். (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மின்கட்டணத் திருத்தம் மக்களிடம் கருத்துக்கணிப்பு

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 15

புதிய மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துக்கணிப்பை பெறுவதற்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபை, மின்சாரக் கட்டணத்தில் மீளவும் திருத்தம் மேற்கொள்வதற்கான வேண்டுகோளை கடந்த 5 ஆம் திகதி பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு முன்வைத்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 7ஆம் திகதி வரை மக்கள் கருத்துக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக மக்கள் தமது கருத்துக்களை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவிக்க முடியும்.

அதன்பின்னர் மக்களிடம் நேரடியாக கருத்துக்கள் கேட்டறியப்படவுள்ளன என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்தது.

இதேவேளை அமைச்சரவையின் அனுமதிக்கமைய புதிய மின்கட்டண திருத்தம் அடுத்தமாதம் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# மன்னார் மனிதப் புதைகுழி

## காபன் பரிசோதனைக்கான எலும்பு எச்சம் பிரித்தெடுப்பு

மன்னார், ஜன.15

மன்னார், திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி எலும்பு எச்சங்கள் மாதிரிப் பகுப்பாய்வுக்குப் பிரித்தெடுக்கப்படவுள்ளது.

திருக்கேதீஸ்வரம் பகுதியில் 2013ஆம் ஆண்டு மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து மாந்தை பகுதிக்கு நிலத்தடியின் ஊடாக குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தில் ஆலய வீதிக்கு அருகாமையில் 2013 ஆம் ஆண்டு நீர் வழங்கல் சபையால் குழாய்கள் பதித்துச் சென்றபோதே மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது. அங்கிருந்து மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்களை அமெரிக்கா புளோரிடாவில் உள்ள நிறுவனம் ஒன்றுக்குக் காபன் பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் தற்போது அநுராதபுரம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனித எலும்பு எச்சங்களில் சீ14 காபன் பரிசோனைக்காக அமெரிக்கா கொண்டு செல்லும் மாதிரிகளைத் தெரிவு செய்வதற்கான கட்டளை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மனித எலும்பு எச்சங்களிலிருந்து மாதிரிகளை தெரிவு செய்வதற்கான நடைமுறைகளை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் மேற்பார்வை செய்து அதற்கான மாதிரிகளை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் முன்பாகப் பாரப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாகவே இந்த வழக்கு அநுராதபுரம் நீதிமன்றில் அழைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அநுராதபுரம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள மனித எச்சங்களின் மாதிரிகளை அமெரிக்காவுக்கு காபன் பரிசோதனைப் பகுப்பாய்வுக்கு எடுத்துச் செல்வதற்காக கடந்த திங்கட்கிழமை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி நாணயக்க ஜெயசூரிய முன்னிலையில் மாதிரிகள் தெரிவு இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி அகழ்வுப் பணிக்குத் தலைமைதாங்கிய மருத்துவ நிபுணர் எல்.பி.வைத்தியரத்தின, மருத்துவ கலாநிதி ஹேவகே, பொலிஸ் அதிகாரி லக்ஷரி, மருத்துவ குழாம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்த விஜயரத்தின மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இந்த வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் ஆகியோரின் பிரசன்னத்தோடு மனித எலும்பு எச்சங்களைப் பிரித்தெடுக்கும் பணிகள் நடைபெற்றன.

மருத்துவ நிபுணர் வைத்தியரத்தின அங்கு வைக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் மற்றும் தடயப் பொருள்கள் அடங்கிய பெட்டிகளிலிருந்து ஆறு பெட்டிகளிலுள்ள எச்சங்களை மாதிரியாக தெரிவு செய்வதற்கு நீதிபதியிடம் தெரிவித்த நிலையில் 46, 42, 16, 66, 28 மற்றும் 56 இலக்கமிடப்பட்டிருந்த பெட்டிகள் வெளியே எடுக்கப்பட்டன.

அதில் 16ஆவது பெட்டியைத் திறந்தபொழுது அதற்குள் சந்தேகத்துக்குரிய மாறுபட்ட இலக்கங்கள் கொண்ட பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும், அதனால் இந்தப் பெட்டியிலிருந்து மாதிரிக்காக எடுக்கக்கூடாது என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இந்த வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் அங்கு நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அதன்பின்னர் ஆறு பெட்டிகளுக்குப் பதிலாக ஐந்து பெட்டிகளிலிருந்து தலா ஒரு மனித எலும்பு எச்சம் கொண்ட பல்லும், பல்லின் 15 சென்றி மீற்றர் கொண்ட ஓர் எலும்புத் துண்டும் பிரித்தெடுத்து ஐந்து பெட்டிகளில் பொதி செய்யப்பட்டன. அநுராதபுர நீதிவான் என்.ஜெயசூரிய முன்னிலையில் பிரித்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பகுப்பாய்வுக்காக மன்னார் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கின்றது என சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

இந்த மாதிரிகளை தெரிவு செய்வதற்கான காலம், திகதி, நேரம் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இந்த வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணியாகிய தனக்கோ மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக சட்டத்தரணிகளுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ-213)

# மாணவர் பசியாற்றும் திட்டம் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

கோண்டாவில் கிழக்கு அபிவிருத்திச் சங்கத்தின் "உயிர்ப்பு" செயற்றிட்டம் ஊடாக ஐக்கிய இராச்சியத்தின் நிதிப்பங்களிப்பில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான "மாணவர் பசியாற்றும் திட்டம்" கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் வி.இ.ஹஸ்ரன் றோய் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பதில் மாவட்டச்செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு ஆரம்பமான செயற்றிட்டத்துக்கு முதற்கட்டமாக 5 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-14,66)





கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் முத்தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை முதல்வர் எ.சூசைநாதர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்துகொண்டார். (ஒ-14,13)

# மன்னிப்புக் கோரினார் ஹபுஹின்னே

கொழும்பு, ஜன.15

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்னே, தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணத்தை பெற வேண்டாம் என அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதத்தால் ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால், தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மன்னிப்புக் கோருகின்றேன் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்னே தெரிவித்துள்ளார். (எ-இ)

# உண்மையை வெளிப்படுத்தியதால் தேசபந்து தென்னக்கோன் மிரட்டல்!

## விசேட புலனாய்வு மூத்த பொலிஸ்மா அதிபர் குற்றச்சாட்டு

கொழும்பு. ஜன. 15

ஜனாதிபதி மாளிகையில் போராட்டக்காரர்களால் மீட்கப்பட்ட பணம் தொடர்பில் உண்மைகளை நீதிமன்றில் வெளிப்படுத்தியமைக்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தன்னை அச்சுறுத்தினார் என விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விக்ரமசிங்க நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி மாளிகைக்குள் பலவந்தமாக பிரவேசித்தோருக்கு எதிரான வழக்கு கொழும்பு கோட்டை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் தகவல் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது:-

ஜனாதிபதி மாளிகையில் மீட்கப்பட்ட பணத்தை நீதிமன்ற காவலில் வைக்காது அமைச்சர் ஒருவரிடம் கையளிக்க பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் தேவையற்ற செல்வாக்குச் செலுத்தினார். இதுதொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தியமையை அடுத்து தொலைபேசி அழைப்புகள் மூலம் எதிர்காலம் குறித்து கவனித்துக்கொள்வதாக கூறி அச்சுறுத்தல் விடுத்தார்.

இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தீர்மானித்துள்ளேன் - என்றார்.

தேசபந்து தென்னக்கோன் விடுத்ததாகக் கூறப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பான தொலைபேசி உரையாடல் விவரங்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் நீதிமன்றம் உரிய உத்தரவை பிறப்பிக்கும் என நீதவான் திலின கமகே தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளொரு நல்வார்த்தை**


"அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்தே தீரும்" –சுவாமி விவேகானந்தர்

## நம்பிக்கை நிலைக்குமா?

**தை** பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஆனால் இன்று தைமகளை இன்முகத்துடன் தமிழ் மக்கள் வரவேற்றாலும், நன்றியுணர்வுடன் சூரியனுக்கு பொங்கலிட்டாலும், அவர்கள் வாழ்வில் ஏற்றங்களைத் தராதா என்ற ஏக்கங்கள் மட்டுமே நிறைந்திருக்கின்றன. தமிழ் அரசியல் என்றுமில்லாதவாறு சுழன்றடித்துக் கொண்டிருக்கின்றது. நூல் அறுந்த பட்டம்போல வானில் அந்தரித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் ஒற்றுமை என்ற கோஷத்தை முன்வைத்து மக்களின் வாக்குகளை திரட்சியாக அள்ளியவர்கள், இப்போது எல்லாவற்றையும் உடைத்து – மக்களின் மனங்களை சிதைத்திருக்கின்றார்கள். கடந்த காலங்களில் தமிழ் அரசியல் தலைமைகளின் இவ்வாறான நடவடிக்கைக்கு மக்கள் தங்கள் 'வாக்குகளால்' குட்டுப்போட்டாலும் அவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை. மக்களை முன்னிறுத்திய அரசியல் என்று கூறிக்கொண்டாலும், தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான தளமாகவே அரசியலைப் பயன்படுத்துகின்றனர் என்ற உண்மையை எரிச்சலுடன் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.

புதிய கூட்டுத் தொடர்பில் பேச்சின்போது, எவ்வித சமரசத்துக்கும் செல்லாமல் 'சின்னம் அல்லது செயலாளர்' என்ற உடும்புப்பிடியில் விக்னேஸ்வரன் நின்றதால் மிகப்பலமான கூட்டணி என்ற நிலையில் விரிசல் விழுந்துவிட்டது. அவர் கூட்டணியில் ஓர் அங்கமாக இருப்பதை விடவும், அந்தக் கூட்டின் பிடியை தன்னகத்தை வைத்திருப்பதற்கே அதிகம் விரும்பினார் என்பதை அவரே பத்திரிகையாளர் சந்திப்பில் ஒப்புக்கொண்டிருந்தார். இந்த இணக்கத்துக்கான கூட்டத்தின்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரனைநோக்கிகூறிய சிலவிடயங்கள்முக்கியமானவை. 'நாங்கள் ஒரு கூட்டணி (கடந்த பொதுத் தேர்தலை எதிர்கொண்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி) அமைத்து, அதிலுள்ள அனைவரின் வாக்குகளின் மூலமே நீங்கள் வெற்றியடைந்தீர்கள். அதனால் எனக்கு இதைச் சொல்ல உரிமையுள்ளது. ஒரு கூட்டணி அமைக்க வேண்டுமென்றபோது, நான் எவ்வளவு விட்டுக்கொடுப்புச்செய்தேன். எமது கட்சியின்பெயரை மாற்றி, சின்னத்தை மாற்றி அதற்காக வழங்கினேன். அந்தச்சின்னத்தில் போட்டியிட்டு, கூட்டணியிலுள்ள ஏனையவர்களின் ஒத்தாசையுடனும் வெற்றியடைந்துவிட்டு, இப்பொழுது பொறுப்பின்றி நடக்கக்கூடாது. கொஞ்சமாவது விட்டுக்கொடுப்புடன் நடந்தால் என்ன?' என்று கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால் இவை எவற்றையும் கணக்கில் எடுக்காமல் புதிய கூட்டுக்கு ஒத்துழைக்க விக்னேஸ்வரன் மறுத்து, புதிய கூட்டில் இருந்து வெளியேறி, மான்சின்னத்தில் தனித்து தேர்தலில் நிற்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அதன்பின்னர் ஒரு வழியாக முன்னாள் போராளிக் குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசியல் கூட்டணி அமைத்துள்ளன. ஒரு காலத்தில் தமிழ் மக்களின் விடிவுக்காக ஆயுதம் ஏந்திய அந்தத் தரப்புக்களில் பெரும்பாலானவை அதே மக்களுக்கு எதிராக ஆயுதங்களைத் திருப்பியதும் கடந்தகால வரலாறுதான். ஆனால் அவற்றையெல்லாம் கடந்துதான், தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்படும்போது அந்தத் தரப்புக்கள் (புளொட்டைத் தவிர) உள்வாங்கப்பட்டிருந்தன. இப்போது காலத்தின் கட்டாயத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டணியாவது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுமா? இல்லை ஏனைய கூட்டுகளைப் போன்று இவர்களும் பத்தோடு பதினொன்றாகத் தேர்தலுக்குப் பின்னர் சிதறிவிடுவார்களா? என்பது உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளுடன் வெளிச்சத்துக்கு வந்துவிடும்.



# புதிய கூட்டணியாயினும் ஒன்றாகவே பயணிப்போம்

## தமிழரசின் தலைவர் மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில் புதிய கூட்டணிகள் உருவானாலும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளுடன் ஒன்றாகவே பயணிப்போம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் வைத்து ஐந்து கட்சிகள் நேற்று ஆரம்பித்துள்ள புதிய கூட்டணி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கின்ற தேசியம் சார்ந்த கட்சிகள் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில் இணைந்து பணியாற்றுகின்றன.

தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. குறித்த தீர்மானத்தை எடுத்ததால் நாங்கள் சக கட்சிகளுடனோ அல்லது அவர்கள் எங்களுடனோ இணைந்து பணியாற்றாமல் விடுவதென்று அர்த்தம் அல்ல. நாங்கள் கொழும்பில் தமிழ்க் கூட்டமைப்பு பங்காளிகளுடன் குறித்த முடிவை எடுத்த



பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஒன்றாகவே சென்று சந்தித்தோம். அதுமட்டும் அல்லாது தமிழ் மக்களுடைய நீண்டகால அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமது சக தமிழ்க் கட்சிகளுடன் நாங்கள் அனைவரும் ஒன்றாகவே பயணித்திருக்கிறோம்.

ஆகவே தற்போதைய நிலைப்பாட்டில் தமிழரசுக் கட்சி தனியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் அதன் பெறுபேறுகள் அடுத்தகட்டத்துக்கு எம்மை அழைத்துச் செல்லும். ஆகவே கூட்டணிகள் புதிதாக இணைக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம் என்ற நம்பிக்கை இருக்கின்றது - என்றார்.

(அ-ம-27)

## பலூன் சின்னத்தில் அரகலய குழுவினர் தேர்தலில்

கொழும்பு, ஜன.15

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 'அரகலய' மக்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று 'பலூன்' சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

கொழும்பில் முதலில் அதிகாரத்தை நிலைநாட்டுவதும், அதன் பின்னர் அமைப்பை மாற்றுவதும் குழுவின் நோக்கம் என்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த சமூக ஆர்வலர் தனீஷ் அலி தெரிவித்தார். (எ -இ)

**நாளை** 16.01.2023 திங்கட்கிழமை தை 02

சுபநேரம் : 12.34 - 02.04
ராகுகாலம் : 08.04 - 09.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கலே நீ பொங்கி வா

ஏர் பூட்டி உழுது பயிர் நாட்டி
கண்கண்ட தெய்வம் கதிரவனின் துணையாலே
உலகம் முழுவதற்கும் உணவளித்திடும்
உழைக்கும் வர்க்கத்தைப் போற்றி மகிழ்வோம்
கதிரவனுக்கு நன்றிக் கடன் செய்றாம் பொன்நாள்
உழவர் திருநாள் மட்டுமல்ல
உறவினர் மகிழந்திடும் திருநாள்
புதிய  பானை தனில் அறுவடை நெல் அரிசியிட்டு
 பால் சக்கரை பயிரிட்டு
பொங்கி மகிழ்ந்திடும் நன்நாள்
உறவினர்களுடன் பொங்கல் கொடுத்து
பகிர்ந்து உண்ணாம் நன்நாள்
தமிழ் தலைமைகள் இனியாவது ஒன்றுபட
காணமல் ஆக்கப்பட்ட உறவுகளின்
கண்ணீருக்கு ஒரு முடிவுகாலம் வந்திட
கைதிகள் விடுதலை, காணி அபகரிப்புக்கு
நல்ல முடிவு கிடைத்திட
தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்திட
பொங்கலே நீ பொங்கி வா'

நயினை விசு- இராசநாயகம்

## பொங்குகவே பொங்கல்...!

எங்கும் விளங்கும்
எங்கள் பண்பாட்டின்
ஏற்றத்தை நிலை நிறுத்தி
பொங்குகவே பொங்கல்!

நேரிய வாழ்வு தரும்
சூரியப் பெருமானின்
வீரிய சக்தி  பொற்றி
பொங்குகவே பொங்கல்!

நல்லவர் வாழவும்
நன்மைகள் பெருகவும்
தீமைகள் அகலவும்
பொங்குகவே பொங்கல்!

சைவமும் தமிழும்
உலகினை உய்விக்க
உரிமையுடன் அமைதி வர
பொங்குகவே பொங்கல்!

இரா.ஜெயக்குமார்



## பாலே பொங்கு...

உழவுத் தொழிலை உறுதியாய் ஆற்றி
உலகுக்கு உணவு அளித்திடும் பணியில்
உழவன் பயனுற உதவிடும் பரிதிக்கு
உள்ளம் நிறைந்த நன்றிப் பொங்கல்
எங்கும் நலமே விளைந்திடும் வண்ணம்
எல்லோர் வாழ்வும் ஏற்றம் பெறவே
பொங்கிப் படைத்துப் போற்றி வணங்கிடப்
பானையில் இட்ட பாலே நீ பொங்கு

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்




வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



செல்வி
நகைஅகம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.
தங்கப்பவுண் நகை வியாபாரம். Manufacturers of Gold Jewels
CHELVI Nakai Agam
T.P: 021 222 9441
205/1, K.K.S வீதி,
குளப்பிட்டி.

வாயுபுத்ரா
போன் சொப்
Vayuputhra
Phone Shop, Oppo & Vivo Distributors




அனைத்து விதமான கட்டணங்களையும்
இங்கு மேற்கொள்ளலாம்.
All Types of Recharge Available Here
தைப்பொங்கலை முன்னிட்டு
Basic Phone 3900 இருந்து
❖E-tel ❖Greentel ❖ITEL ❖KGTEL
No.364, Hospital Road, Jaffna. Mob:077 364 4246

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
சசிகா
லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
Reg.No: DS882
உரிமையாளரின் தொடர்புக்கு
0777 226 247 / 077 614 0361
email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7578 / 7678
070 301 3011

கிளைக் காரியாலயங்கள்:

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 |
| யாழ் மத்தி (Town) | நெல்லியடி | புன்னாலைக்கட்டுவன் | காரைநகர் |
| T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 226 0999<br>071 775 0999<br>077 261 2446 | T.P: 021 224 5001<br>076 384 0684 | T.P: 021 225 2454<br>070 510 2484 |

வேலணை :
T.P: 021 221 5472, 070 301 3012,
077 3689 319


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்கைதிகளின் விடிவுக்காக பொங்கல் நாளில் பிரார்த்திப்போம்

## ஆறு. திருமுருகன் அழைப்பு



தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையாம் பொங்கல் பண்டிகையில், அரசியல்கைதிகளின் விடுதலைக்காகவும், விடுதலை செய்யப்பட்ட உறவுகள் தமது உறவுகளுடன் இன்புற்று இருக்க வேண்டுமென்றும் பிரார்த்திப்போம் இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவர் அனுப்பிவைத்துள்ள பொங்கல் வாழ்த்துச்செய்தியில் மேலும் உள்ளதாவது:

பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களின் திருநாள் தைப்பொங்கல். இந்து மக்கள் நித்தமும் விடிவுதரும் பகலவனைப் போற்றி வழிபடும் நன்நாள் தைப்பொங்கல்.

தைத்திங்கள் திருநாளில் தரணியெல்லாம் பொங்கிப்படைத்து இயற்கைத் தெய்வங்களுக்கு நன்றிகூறி இன்புறுவர் எம் முன்னோர்.

அவர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நாம் எங்கு வாழ்ந்தாலும் பேணிக்காக்க வேண்டியது எம் தலையாய கடமையாகும்.

அன்பர்களே! தைப்பொங்கல் நாளில் வீட்டு முற்றத்தில் தவறாது பொங்கி வழிபாடு செய்யுங்கள். மூத்தோரை வணங்கி ஆசி பெறுங்கள். அயலவர்களுடன் உணவைப் பகிர்ந்து உறவின் வலிமையைப் பெருக்குங்கள். புதிய சிந்தனைகளை உருவாக்கி நல்லன செய்யத் திட்டமிடுங்கள். பகையை மறந்து அன்பைப் பெருக்குங்கள்

ஆலயங்களுக்குச் சென்று அனைவருக்குமாகப் பிரார்த்தியுங்கள்.

எங்கள் தலைமுறையை இன்று துன்புறுத்தும் போதை நஞ்சு ஒழிய வேண்டுதல் செய்யுங்கள்.

எம் மண்ணில் நாம் மகிழ்வாய் வாழ, நீதி நிலைக்க, இறையருளை மன்றாடுங்கள்.

விடுதலை செய்யப்பட்ட, சிறைவாசம் அனுபவித்த உறவுகள் தம் உறவுகளுடன் மகிழ்வாக வாழ உறுதுணை செய்யுங்கள். ஏனையவர்களின் விடுதலை விரைவாகக் கைகூட துதியுங்கள். வைத்தியசாலைகளில் வாடும் உறவுகள் நலமாகத் திரும்ப அகத்தால் வேண்டுங்கள் - என்றுள்ளது.

# துன்பங்கள் நீங்கட்டும்!

இற்றைநாள் வரை பட்ட துன்பங்கள் யாவும் நீங்கப்பெற்று அனைவரும் மகிழ்ச்சியும் மங்களமும் பொங்க இல்வாழ்க்கை சிறந்திருக்க சூரிய பகவான் வழிகாட்ட வேண்டும் இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் ஆன்மிக எழுத்தாளரான இராசையா ஸ்ரீதரன்.

அவர் அனுப்பிவைத்துள்ள பொங்கல் வாழ்த்துரையில் மேலும் உள்ளதாவது:

இன்று தைத்திருநாள். இது தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் பொன்னான நன்னாள். நெல் வயலிலே நெல் விளைய உதவிய சூரிய பகவானுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாக இனிப்பான பொங்கல் பொங்கிப் படைத்து வழிபாடியற்றும் இனியதொரு நன்னாள். துன்பம் என்பது துளியும் இல்லாமல் சந்தோசமாக இனிய பொங்கலை உண்டு மகிழ வேண்டும். நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்து நிம்மதியான நல்வாழ்வில் மகிழ்ந்திருக்க இறைவன் அருள்பாலிக்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம் - என்றுள்ளது. (ம)


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய தரம் குன்றாத தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்யவும் 22 கரட் தங்க நகைகள் ஓடருக்கும் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்

சிறி மீனாட்சி
நகை அகம்
Sree Meenachchi
Nagai Aham

Dealers in
22 Kt.
Solid Gold
Jewellery



இல. 183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Tel : 021 222 6109



அன்பர்கள், நண்பர்கள நல் ஆதரவாளர்கள்
அனைருக்கும் எம் இடை பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
வாழ்க வளமுடன்



CHENNAI
FASHION WORLD

திருமண பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப், புரோக் மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்

சென்னை
பெஷன் வேல்ட்

63, Grand Bazaar, Jaffna.
Tel : 021 221 5464

Sivakanesan
Textiles



Wholesale & Retail
Dealers in Textiles
Specialist in
Wedding Sarees

#41, Grand Bazaar, Jaffna.
Tel : 021 222 2063



மலரும் தைத்திருநாள் அனைவருக்கும் சுபீட்சத்தை வழங்க பிரார்த்திப்போம்...



யாழ் மண்ணில் பிரமாண்டமான தயாரிப்பில்
இல்லத்தரசிகளின் அரசன் V.S.P நல்லெண்ணெய்
V.S.P நல்லெண்ணெய்
SPECIAL GINGELLY FOOD OIL
சுத்தமான முறையில் உணவுக்கும், வைத்திய தேவைக்கும் விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.



தாயின்
அன்பைப்போல
நம்பிக்கையானது
V.S.P.
நல்லெண்ணெய்

உரிமையாளர் :
திருமதி பாஸ்கரன்



போலிகளைக் கண்டு ஏமாறாமல் V.S.P நல்லெண்ணெய் வாங்கும் போது பரிமளா ஸ்ரோர்ஸ் எனும் பெயரைப் பார்த்து வாங்கவும், சந்தேகம் இருப்பின் எமது தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும் : பரிமளா ஸ்ரோர்ஸ்
முட்டாஸ் கடைச் சந்தி, K.K.S வீதி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 4135, 021 222 9165

குடும்பத்தின்
ஆரோக்கியத்துக்கும்
மகிழ்ச்சிக்கும் காரணம்
V.S.P நல்லெண்ணெய்

திருகோணமலையில்
நியூ சிறி விநாயகர் சுப்பர் மார்க்கட்
160, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை
T.P : 077 304 4462

மட்டக்களப்பு வாழ் மக்களின் நன்மை கருதி
சண்முகா ஏஜென்சி
159, திருமலை வீதி, மட்டக்களப்பு
H.L : 077 990 4636
T.P : 065 222 2139
065 222 5380

கொழும்பில் விற்பனையாளர்
மகாராஜா பூட்சிற்றி
18/3, Dr.E.R.Cooray, Mawatha, Wellawatta, Colombo - 06
T.P : 011 236 0926, 011 465 4444

வவுனியாவில் விற்பனையாளர்
சுகந்தன்ஸ்
13A. மன்னார் வீதி, வவுனியா
T.P : 024 222 3348, 077 020 9495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாள்களுடன் ஒருவர் கைது

ஏழாலை தெற்குப் பகுதியில் நபரொருவர் இரண்டு வாள்களுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

(அ-ம-27)

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 07 . 1935



இறப்பு 13 . 01 . 2023

## திரு. பர்னாந்து யோசேப் அன்ரனி

(ஓய்வுபெற்ற பதில் நீதவான். சட்டத்தரணி. ஓய்வுபெற்ற அதிபர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இல.44. பலாலி வீதி. யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. பர்னாந்துயோசேப் அன்ரனி 13.01.2023 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பர்னாந்துயோசேப். ஞானாதிக்கம் ஆகியோரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும். திருமதி பரமேஸ்வரி அன்ரனி (ஓய்வுபெற்ற உப அதிபர். யா/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும். வசந்தி (ஆசிரியை. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி). வரதராஜன் (ஜேர்மனி). வாசுகி (ஆசிரியை. யா/சென் தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை). வசந்தகுமாரி (அமெரிக்கா) (முன்னாள் மேலதிக மாவட்ட பதிவாளர். நல்லூர் .கரவெட்டி). மஞ்சுளா (ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ் சென்ற தெய்வேந்திரகுமாரன் மற்றும் வாணி (ஜேர்மனி). அன்ரன் இராஜசேகரன் (மின் இணைப்பாளர்). அருளேந்திரன் (அமெரிக்கா). நித்தியலிங்கம் (ஆசிரியர். யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். ஹாஸ்மி (ஜேர்மனி). டிவியந். டிசாந். மவிதா (அமெரிக்கா) மகிரா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசையா (ஓய்வுபெற்ற புகையிரத அத்தியட்சகர்). பூவிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்). பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை). இராசரத்தினம் மற்றும் சிவஞானம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் இ.போ.ச). பரமானந்தம் (பிரான்ஸ்). பாலச்சந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.01.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 021 222 4863

தகவல்: குடும்பத்தினர்

(Cs 22830) (2-6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 11 . 1963



இறப்பு 12 . 01 . 2023

## திருமதி மல்லிகாதேவி திருஞானம்

புகையிரத நிலைய வீதி. சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி திருஞானம் கடந்த (12.01.2023) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதாரணியம் திருஞானம் அவர்களின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்ற வீரவாகுதேவர் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற வேதாரணியம் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற பரமேஸ்வரி. இராசரத்தினம் (சுவிஸ்). ரதிதேவி (பிரான்ஸ்). செல்வதேவி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். பாலசுதன் (பிரான்ஸ்). அகிலன் (பிரான்ஸ்). காலஞ்சென்ற பிரகாஸ் மற்றும் சோபிநாத் (பின்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும். மதுரா (பிரான்ஸ்). ஆகன்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும். காலஞ்சென்ற கருணாகரன். காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் விமலேந்திரன். சிவஞானம். திருநாவுக்கரசு. பத்மசிறி. ஆகியோரின் மைத்துனியும். விஜயகுமாரி. சிறிமாலினி. சிவநாயகி ஆகியோரின் சகலியும். காலஞ்சென்ற பகீரதன் மற்றும் சசிரதன் (ஜேர்மனி). வினோரதன் (U.K). சபேசன் (சுவீடன்). பாலேசன் (பிரான்ஸ்). மணிமேகலா (ஜேர்மனி). கல்கி. மதுரா ஆகியோரின் சிறியதாயாரும். சகானா (நோர்வே). சகாந்தன் (நோர்வே). திருக்குமரன். மாருதி. அயிராங்கன். சயிந். டிலக்சன். சதுர்சியா. நிசாந். கிருசாந் ஆகியோரின் பெரிய தாயாரும். அருமைநாதன். நிர்மலாதேவி. நவரத்தினம்-புவனேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
பாலசுதன் - பிரான்ஸ்
அகிலன் - பிரான்ஸ்
சோபிநாத் - பின்லாந்து)

(CS 22851) 1/6

# மரண அறிவித்தல்

## திருமதி இராசலிங்கம் விசாலாட்சி



**தோற்றம்:06.12.1934 மறைவு:14.01.2023**

வட்டு கிழக்கு சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் தந்தை செல்வாபுரம் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும். தேவாலய வீதி. சங்கானையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் விசாலாட்சி நேற்று (14.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி பத்தினி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான சிதம்பரம் செல்லி தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற இராசலிங்கம் (J.P) அவர்களின் பாசமிகு மனைவியும். நிர்மலாதேவி (கனடா). ரவீந்திரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர். தபாலகம் - தெல்லிப்பளை). ஸ்ரீதரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் தபாலகம் - தெல்லிப்பளை). ஸ்ரீபாஸ்கரன் (லண்டன்). ரவிச்சந்திரன் (ஓய்வு நிலை உத்தியோகத்தர் அன்புலன்ஸ் சாரதி. யாழ். போதனா வைத்தியசாலை). நிரஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும். கணேசலிங்கம் (கனடா). அருந்தவச்செல்வி. இரத்தின வதனா. சுகந்தினி (லண்டன்). பிரேமலதா. பகீரதன் (மந்திகை வைத்தியசாலை பரிசாரகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தேவாலய வீதி. சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (15.01.2023) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவாலய வீதி, சங்கானை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவர் வாழ்விலும் சுபீட்சம் உண்டாகட்டும்



## இந்து குருமார் அமைப்பு வாழ்த்து

தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் பொங்கல் பண்டிகை உழவர்களின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்த திருவிழாவாக உள்ளது. இந்தத் திருநாள் அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி மற்றும் வளத்தை கொண்டு வரவேண்டும் - இவ்வாறு இந்து குருமார் அமைப்பு தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது: தமிழர்களால் கொண்டாடப்படும் பல பண்டிகைகளில் மதத்துடன் தொடர்புபடுத்தி சொன்னாலும், அதன் உள்ளே இன்றும் உயிர்ப்புடன் தமிழர்களின் இயற்கையான மெய்யியல் வழிபாடு பொதிந்துள்ளதை தைத்திருநாள் பண்டிகையில் காணலாம்.

சூரியபகவான் மகர ராசிக்கு பிரவேசம் செய்யும் காலமாக காணப்படுகிறது. இக் காலப்பகுதியை மகர சங்கராந்தி என அழைப்பர். அன்பு, நேசம், நல்லிணக்கத்தால் பல்வேறு இனங்களை பிணைக்கும் இந்தத் திருநாள் அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி மற்றும் வளத்தை கொண்டு வரவேண்டும். அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பெற்று சுபீட்சமான இன்ப வாழ்வும் வளர்ச்சியும் அமைய பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து, இந்து குருமார் அமைப்பின் சார்பில் மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் பகிர்ந்து மகிழ்கின்றோம் - என்றுள்ளது.

# அரசியல் தீர்வுகளுக்கான பேச்சுகள் ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது

## பொங்கல் வாழ்த்துரையில் யாழ். ஆயர் தெரிவிப்பு



அண்மைக்காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகள் ஜனாதிபதி ரணிலுக்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் திரும்பவும் ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கதொன்று - இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

அவர் அனுப்பிவைத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது: பொங்கல் விழா ஒரு நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் ஒரு விழா. தமிழ் மக்கள் கொண்டாடும் இந்த நன்றியின் பெருவிழாவை உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் மக்கள் 2023ஆம் ஆண்டில் கொண்டாடும் வேளை இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

இந்த நன்றியின் பெருவிழாவை இறைவன் - இயற்கை, அயலவர் என்ற மூன்று நிலைகளில் கடைப்பிடித்துக் கொண்டாட நாம் அழைக்கப்படுகிறோம். இறைவன் நம்மைப் படைத்து பாதுகாத்து அன்றாடம் பராமரித்து வழி நடத்தி வருகிறார். எமது அன்றாட அனைத்துத் தேவைகளிலும் தேடல்களிலும் அவரே முதலாகவும் முடிவாகவும் இருக்கிறார். இறைவனின் இந்த அளப்பெரிய மாபெரும் செயலுக்காக இறைவனுக்கு நன்றி சொல்லுவோம். இயற்கையைப் பகைத்து நாம் வாழ முடியாது. எம்மோடு வாழும் மனிதர்கள் அனைவரும் இறைவனின் படைப்புக்கள். அவர்கள் எம்மோடு வாழ இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் அனைவரோடும் நல்ல உறவை பேணுங்கள். அவர்கள் அனைவரையும் அவர்கள் நிலைகளில் வைத்து நன்கு புரிந்து கொள்ளுங்கள். அவர்களின் மனித குணங்களோடு அவர்களை அன்போடு ஏற்றுக் கொள்ளுங்கள். வாழும் குறுகிய காலத்தில் அனைத்து மனிதர்களையும் மகிழ்வியுங்கள். இலங்கை நாடு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று இவ்வாண்டு 75 ஆண்டுகள் நிறைவாகின்றன. பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில், முழு வளர்ச்சி அடையாத நாடாக இலங்கை நாடு இருக்கிறது எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. மூன்று தசாப்த காலப்போர் நிகழ்ந்து ஏறக்குறைய 13 ஆண்டுகளாயும் இன்னும் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வு ஏற்படவில்லை என்பது வேதனையானது. அண்மைக் காலத்தில் திரும்பவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகள் ஜனாதிபதி ரணிலுக்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கதொன்று. இந்தப் பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில், நிரந்தர தீர்வையும் ஏற்படுத்தவேண்டும் என்றும், தமிழ் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்பட வேண்டுமெனவும் தமிழ் மக்கள் பெயரால் அன்புடன் வேண்டுகிறோம்.

# இல்லங்கள்தோறும் இன்பம் பொங்கட்டும்



இல்லங்களிலெல்லாம் பால் பொங்கநல்லோர் தம் உள்ளங்களிலெல்லாம் இன்பம் பொங்க வைக்கும் நற்தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை வரவேற்றிடுவோம்.

இவ்வாறு வல்லை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு, இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள பொங்கல் வாழ்த்துச்செய்தியில் மேலும் உள்ளதாவது:

கிராமங்களின் வயல்களில் எல்லாம் செந்நெல்லை சாய்ந்துக் களிநடனம் புரியும் காட்சியைக் கண்டு உழவர் பெருமக்கள் உள்ளங்களிலெல்லாம் கரைகாணாத மகிழ்ச்சி பொங்கி வழிகிறது.

அவர்கள் வயல்களில் இறங்கி சேற்றிலே கால் வைத்து முற்றிய செந்நெல் கதிர்களை அறுவடை செய்தால் தான் நகரத்திலுள்ள மக்கள் எல்லோரும் சோற்றிலே கைவைக்க முடியும்.

'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். எத்தனை பிரச்சினைகள் தொல்லைகள் இருந்து வந்தாலும் தை மாதம் பிறந்தால் அவை அத்தனையும் விலகி மகிழ்ச்சி கிட்டும்.

இந்நாளில் மக்கள் எல்லோரும் வாசலிலே வண்வண்ண கோலமிட்டு செங்கரும்புகளை நிறுத்தி வைத்து புதுப்பானை வைத்து பொங்கலிட்டு மகிழ்ந்திடுவோம்.

இல்லங்களிலெல்லாம் பால் பொங்க உள்ளங்களிலெல்லாம் இன்பம் பொங்க நற்தமிழர் திருநாளாம் பொங்கலை பூரிப்புடன் வரவேற்றிடுவோம்- என்றுள்ளது.

# இம்முறையாவது விடிவு வரட்டும்!



இந்த அகிலத்தை ஆளும் ஆதவனுக்கு நன்றி செலுத்தும் இந்த நன்னாள், இயற்கையே கடவுள் என்று வாழ்ந்த எம்முன்னோர்காளல் எமக்குச் சொல்லித்தரப்பட்டது. வெறுமனே தைப்பொங்கல் நன்றி செலுத்துதல் என்பதற்கு அப்பால், தமிழ் ஆண்டுப் பிறப்பும் இன்றுதான் ஆரம்பிக்கின்றது.

அதனால்தான் எம்மத்தியில் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கை ஆழ ஊடுருவி இருக்கின்றது. இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்தார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது: எமது மக்களைப் பொறுத்தவரையில் அந்த நம்பிக்கை பொய்த்துப்போனதாகவே கடந்த காலங்கள் அமைந்திருக்கின்றன. பெரும் எதிர்பார்ப்போடும், நம்பிக்கையோடும் தைமகளை வரவேற்றாலும், இறுதியில் கிடைப்பது என்னமோ விரக்தியும் ஏமாற்றமும்தான். இந்தத் தொடர்கதை முற்றுப் பெறாதா என்ற ஏக்கம் உண்டு.

இந்தத் தையாவது எங்களுக்கு விடிவைத் தரவேண்டும். காலச் சூழல் மாறியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி வதைத்தாலும், எங்கள் உரிமை பிரச்சினைகளை பேசித் தீர்க்கலாம் என்ற வெளிச்சம் தூரத்தில் மங்கலாகத் தெரிகின்றது. அந்த வெளிச்சம் நிரந்தர ஒளியாய் மாறி தமிழர்களின் வேணவாக்களை இந்த ஆண்டிலாவது பூர்த்தி செய்யவேண்டும் என்று இந்தப் பிரபஞ்சத்தையே இயக்கும் சூரியக் கடவுளிடம் இரஞ்சிக்கேட்கின்றேன்- என்றார்.

# இன வேறுபாடுகளைக் களைந்து சமத்துவத்தைக் கொண்டுவரட்டும்

## பொங்கல் வாழ்த்துரையில் சபாநாயகர் தெரிவிப்பு

மலர்ந்துள்ள தைப்பொங்கல் இன வேறுபாடுகள் இன்றி, பொங்கலை முழு நாட்டுக்கும் பகிரக்கூடிய கருணையுள்ளம் ஏற்படும், ஒத்துழைப்பு, சமத்துவம், செழிப்பு மற்றும் நோய் நொடிகளின் ஆபத்துக்களிலிருந்து மீண்ட நாளைய தினத்தின் தொடக்கமாகட்டும்- இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

இலங்கை தமிழர்களும் உள்ளிட்ட உலகளாவிய தமிழ் மக்கள் உற்சாகத்துடன் ஒன்றுசேர்த்து கொண்டாடும் 2023ஆம் ஆண்டின் முதலாவது விழா தைப்பொங்கல் விழாவாகும். மலரும் தைப்பொங்கல் தினம் வளமானதும் மகிழ்ச்சியானதுமான ஆன்மிக திருப்தியுடன் கூடிய விழாவாக அமைய வேண்டுமென வாழ்த்துக்களை கூற விரும்புகின்றேன்.



விளைச்சலை விருத்திசெய்வதற்கு கதிரவன் செய்த பணிகளுக்கும், அதனை மேலும் வளமாக்குவதற்கான மழையின் பங்களிப்புக்கும், பசுக்களுக்கும் நன்றி செலுத்துவதும் இந்தத் தைப்பொங்கல் விழாவின் பிரதான நோக்கமாகும். தமிழ் மக்களின் பாரம்பரிய நாட்காட்டிக்கு அமைய ஜனவரி மாதம் தை மாதம் என்று அழைக்கப்படுகின்றது. தைப்பொங்கல் விழா இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும் கொண்டுவரும் பல முக்கியமான செய்திகள் உள்ளன. என்னைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டில் எம்மால் நடந்த தவறுகளிலிருந்து மீண்டு, புத்தாண்டை புதிய எதிர்பார்ப்புக்களுடன் அடைவது மிகவும் முக்கியமான ஒரு வழக்கமாகும். - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

கூட்டுக்கு வைச்சிட்டினம் பெரிய வேட்டு– இனி
கும்பிட்டுக் கூத்தாடிக் கேக்கப் போயினம் வோட்டு
நம்பி நாம் ஏமாந்தமெண்டால் சொல்லுவினம் சாட்டு
வாசலுக்கு வந்தால் கலையுங்கோ அடியைப் போட்டு

- கொரோனானந்த சுவாமிகள்

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | தை 1 | ஞாயிற்றுக்கிழமை | (15.01.2023) | சிகரம் : 132



# மீன் கரைஞ்சாலும் சட்டிக்குள் இல்லை?

○ நிலாந்தன்

தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள். தேசியம் என்பது ஒரு மக்கள் கூட்டத் தைத் திரளாகக் கூட்டிக் கட்டுவது. தேசிய அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் திரளாகக் கூட்டிக் கட்டும் அரசியற் செய்முறைதான். இந்த அடிப்படையில் சிந்தித்தால் கடந்த சில நாட்களாக நடந்து வருபவை நிச்சயமாகத் தேசத்தைத் திரட்டும் அரசியல் அல்ல.



தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்று முடிவெடுத்ததன் உள்நோக்கம் பங்காளிக் கட்சிகளை வெளியே தள்ளுவதுதான். வீட்டுச் சின்னத்தைக் கைவிட்டால் பங்காளிக் கட்சிகள் வெல்லமுடியாது என்று தமிழரசுக் கட்சி நம்புகின்றது. கடந்த பொதுத் தேர்தல் அந்த நம்பிக்கையைத் தோற்கடித்து விட்டது. எனினும் தமிழரசுக் கட்சி அப்படி நம்புகிறது. எனவே பங்காளிக் கட்சிகளை வெளியே தள்ளியதன் மூலம், தமிழரசுக் கட்சி அந்தக்கட்சிகளுக்கு ஒரு சவாலை முன்வைக்கின்றது. வீட்டு சின்னம் இல்லாமல் வென்று காட்டுங்கள் என்பதே அந்தச் சவால்.

ஆனால் அந்தச் சவாலை அவர்கள் வெளிப்படையாகச் சொல்லாமல், தந்திரமாக ஒரு கணிதபூர்வமான காரணத்தை முன்வைக்கிறார்கள். உள்ளூராட்சி மன்றங்களில் கலப்புத் தேர்தல் முறைமை காரணமாக வெற்றி வாய்ப்புகள் குறைவதைத் தடுப்பதற்காக இவ்வாறு பங்காளிக் கட்சிகளைத் தனியே போட்டியிடுமாறு கேட்டதாக அவர்கள் காரணம் கூறுகிறார்கள். அதன்படி பிரிந்து நின்று வாக்கு கேட்டு, அவரவர் தங்கள் தங்கள் பலத்தை நிரூபித்தபின் ஒன்றாகச் சேர்ந்து உள்ளூராட்சி மன்றங்களை நிர்வாகிக்கலாம் என்பதே தமிழரசுக் கட்சி கூறும் விளக்கம்.

ஆனால், தமிழரசுக் கட்சி கடந்த 13 ஆண்டுகளாகக் கூட்டமைப்புக்குள் இருந்த ஆயுதப்போராட்ட மரபில் வந்த கட்சிகளை அகற்றி வருகிறது என்பதே உண்மை. இந்த அடிப்படையில் கடைசிவரை நின்று பிடித்த பங்காளிக் கட்சிகளை வெளியே தள்ளிவிட்டிருக்கிறார்கள்.

இங்கு வெளித்தள்ளப்பட்டிருப்பது பங்காளிக் கட்சிகள் மட்டுமல்ல ஒரு விதத்தில் மாவை. சேனாதிராசாவுந்தான். கட்சிக்குள் அவருடைய தலைமை ஸ்தானம் மேலும் பலவீனமடைந்திருக்கிறது என்று தெரிகிறது. கடந்த பல மாதங்களாக பங்காளிக்கட்சிகள் மற்றும் கூட்டமைப்பில் இருந்து ஏற்கனவே விலகிய கட்சிகள் என்று ஐந்துக்கும் குறையாத கட்சிகள் இணைந்து செயற்பட்டு வந்தன. இந்த ஒருங்கிணைப்புக்குள் மாவையும் அவ்வப்போது வந்து போனார். அதனால்தான் விக்னேஸ்வரன் மாவையின் தலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று அறிக்கைவிட்டிருந்தார். அதே காலப்பகுதியில் பங்காளிக் கட்சிகள் இணைந்து கூட்டமைப்பின் தலைவருக்கு ஒரு கடிதத்தை எழுதின. பரந்துபட்ட அளவில் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி அவ்வாறான பரந்த தளத்திலான ஐக்கியம் ஒன்றைக் கட்டியெழுப்பத் தயாரில்லை என்று தெரிகிறது. எனவே பங்காளிக் கட்சிகள் வெளித்தள்ளப்பட்டிருக்கின்றன. மாவை சேனாதிராசா, இனி கட்சிக்கு வெளியே சேர்க்கைகளை வைத்துக் கொள்ளமுடியாது.

இது ஒரு நாள் நடக்கும் என்பது பங்காளி கட்சிகளுக்குத் தெரியும். சம்பந்தருக்குப் பின்னர்தான் அப்படி நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சம்பந்தர் உடலாலும், முடிவெடுக்கும் திறனாலும் தளரத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணிக்குள், இரு தசாப்தங்களுக்கும் மேல் அவர் தலைமை தாங்கிய கூட்டு கலைந்துவிட்டது. ஆனால் அதற்குரிய விளக்கத்தை ஒரு தலைவர் என்ற முறையில் அவர் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள்வரையிலும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கவில்லை. இதுவும் தமிழ் அரசியலின் சீரழிவைக் காட்டுகிறது.

கடந்த 13 ஆண்டுகளாக தொடர்ச்சியாக உடைந்து வந்த கூட்டமைப்பு இனி ஒரு கூட்டாக இருக்காது. அதேசமயம் விலகிச் சென்ற தரப்புக்கள் ஒரு புதிய கூட்டை உருவாக்கப்போவதாக அறிவித்திருந்தன. அந்த ஒருங்கிணைப்புக்குள் ஜனநாயகப் போராளிகள் கட்சி, மணிவண்ணன், ஐங்கரநேசன், ஆனந்தி சசிதரன், போன்றவர்களை உள்ளீர்த்து ஒரு மிகப்பெரிய கூட்டைக் கட்டியெழுப்பினால் அது தமிழரசுக் கட்சிக்கு தலையிடியாக மாறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பின்படி அப்படி ஒரு பெரும் கூட்டுக்கான வாய்ப்புக் குறைவு என்றே தெரிகிறது.

புதிய கூட்டின் சின்னம் எது என்பதிலும், அதன் செயலாளர் யார் என்பதிலும் விக்னேஸ்வரனோடு ஏனைய கட்சிகளால் உடன்பட முடியவில்லை. விக்னேஸ்வரன் தனது கட்சியின் சின்னமாகிய மான் சின்னத்தை விட்டுக் கொடுக்கத் தயார் இல்லை. அதேசமயம் புளொட் இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் செயலாளராக இருக்கும் கட்சியின் சின்னத்தை ஏனைய கட்சிகள் வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

அதை விக்னேஸ்வரனும் மணிவண்ணனும் ஏற்கவில்லை. மணிவண்ணன் விக்னேஸ்வரனின் கட்சியில் சேர்ந்து விட்டார். கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பில் மணிவண்ணனும் விக்னேஸ்வரனும் ஒரு தரப்பாகவும் ஏனைய கட்சிகள் மற்றொரு தரப்பாகவும் பிரிந்து நின்றதாகத் தெரிகிறது. ஒரு பொது முடிவை எட்டாமல் விக்னேஸ்வரன் இடையிலேயே எழுந்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

சில சமயம் விக்னேஸ்வரன் ஒரு பொது முடிவுக்கு உடன்பட்டிருந்தாலும்கூட புதியகூட்டு தமிழரசுக் கட்சிக்கு சவாலாக மேலெழும் ஒரு புதிய வளர்ச்சிக்குத் தலைமை தாங்கத் தேவையான தலைமைப் பண்பு அவருக்குண்டா? என்ற கேள்வி உண்டு. ஏனென்றால் தன் சொந்தக் கட்சியையே பலப்படுத்தாத ஒரு தலைவர் அவர். அவருடைய கட்சிக்குள் பெருமளவுக்கு அவர் மட்டும்தான் தெரிகிறார். இப்பொழுது மணிவண்ணனையும் இணைத்திருக்கிறார்.

அவர் கட்சிக்குள் கலந்து பேசி முடிவுகளை எடுப்பதில்லை என்று கட்சி முக்கியஸ்தர்கள் குறைபடுகிறார்கள். கட்சிக்குள் மட்டுமல்ல, கடந்த பல மாதங்களாக ஒருங்கிணைந்து செயற்பட்டு வரும் புதிய கூட்டுக்குள்ளும் அவர் முடிவுகளைக் கலந்து பேசி எடுப்பதில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. மணிவண்ணனை கட்சிக்குள் இணைக்கும் முடிவும் அவ்வாறு கலந்து பேசி எடுக்கப்படவில்லை என்ற விமர்சனம் உண்டு.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் அவருக்கு ஒரு தனிச்சிறப்பான ஆணையை வழங்கினார்கள். வீட்டுச் சின்னத்துக்கு வெளியே வந்தாலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் ஓர் ஆணை அது. ஆனால் அந்த மக்கள் ஆணையை ஒரு பெரும் கட்சியாக நிறுவனமயப்படுத்த அவரால் முடியவில்லை. இவ்வாறு தன் சொந்தக் கட்சியையே கட்டியெழுப்ப முடியாத ஒருவர் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதும், உள்ளதில் பலமானதுமாகிய, தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு புதிய கூட்டை எப்படிக் கட்டியெழுப்புவார் என்ற கேள்விக்கு விடை முக்கியம்.



மேலும் புதிய கூட்டுக்குள் ஜனநாயகப் போராளிகள் கட்சியை இணைப்பதற்கும் விக்னேஸ்வரன் இணங்கவில்லை. அதற்கு அவர் கூறிய காரணம், ஏற்கனவே கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் ஜனநாயகப் போராளிகள் கட்சி உள்ளீர்க்கப்படவில்லை என்பதனால், முதலில் ஏற்கனவே ஒருங்கிணைந்து செயற்பட்ட கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வந்தபின், ஜனநாயகப் போராளிகள் கட்சியையும் இணைப்பது தொடர்பாகச் சிந்திக்கலாம் என்று காரணம் கூறியுள்ளார்.

காரணம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்புக்குப் பின் யார் ,யார் ஒன்றுபட்டிருக்கிறார்கள்? யார் ,யார் பிரிந்து நிற்கிறார்கள்? என்று பார்த்தால், முன்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள்

18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## யாவருக்கும் சௌபாக்கியம் தரும் அறுவடைத் திருநாள்

வழி பிறக்கும் தை மாதத்தில், நாம் விதைத்த நம்பிக்கையின் விதையின் பலனால் கிடைக்கும் செழிப்பான விளைச்சலை அன்புடனும் சந்தோஷத்துடனும் அறுவடை செய்திடுவோம். மகிழ்ச்சிகரமான வங்கி அனுபவத்தினை நாம் உங்களுக்கு வழங்குகிறோம்.

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் மகிழ்ச்சியும்,
முடிவில்லா நன்மைகளும் கூடிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

# குறைந்த விலையை விட குறைவு

அதிக விற்பனையுடன் சிறந்த அறுவடை இயந்திரம்

Browns WORLD
**SUMO**

விலை
ரூபா **3,599,000/-**
இலிருந்து மேல்




Browns Agriculture

0761 831 343 - சிந்துஜன் | [illegible] | 0773 457 988 - துஷான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதியை மறுதலிக்கும் கனடாவின் வியூகம்

அ.நிக்ஸன்

வடக்கு – கிழக்குத் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற போரின்போது திட்டமிட்டு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காகக் கனடா அரசு, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் இலங்கைப் படை அதிகாரிகள் உள்ளிட்ட நான்கு பேருக்கு விதித்துள்ள தடை தொடர்பாக ஈழத் தமிழர்கள் மகிழ்ச்சியடைய எதுவுமில்லை.

தடைவிதிக்கப்பட்டதால், தனிப்பட்ட முறையில் ராஜபக்ச குடும்பத்துக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது என்று கூடக் கூற முடியாது. ஏனெனில் ராஜபக்ச குடும்பத்தின் உள்ளூர் பௌத்த தேசிய அரசியல் செல்வாக்கை அது உயர்த்தியுள்ளதாகவே கருத முடியும். கடந்த காலங்களில் கூட இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களை ராஜபக்ச குடும்பம் அவ்வாறுதான் நன்கு பயன்படுத்தியது. ஆகவே கனடா விதித்த தடை இலங்கை அரசு (Sri Lankan State) என்ற கட்டமைப்புக்கும் இலங்கையின் இறைமைக்கும் (Sovereignty) அபகீர்த்தி என்றோ, போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல் மற்றும் மனித குலத்துக்கு எதிரான படுகொலைகளுக்குப் பொறுப்புக் கூறப்படும் என்றோ கருத இடமில்லை.

ஈழத்தமிழர்கள் பிரச்சினை என்பது வெறுமனே மனித உரிமை மீறல் விவகாரமல்ல. அது எழுபது ஆண்டுகால அரசியல் விடுதலைப் போராட்டம்.1958 ஆம் ஆண்டில் இருந்து இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்பு இடம்பெற்று வருவதற்கான ஆதாரங்கள் உண்டு. ஈழத்தமிழ் அமைப்புகள் அவ்வாறுதான் கூறுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதையை செயலாளர் நாயகம் பான்கீ மூன் 2010 இல் அமைத்த நிபுணர்குழு அறிக்கை 1948 இல் இருந்து இனப்பிரச்சினை நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ளது. கனடாவில் உள்ள பல புலம்பெயர் அமைப்புகளும் இன அழிப்பு வரலாற்றை அவ்வாறுதான் உறுதிப்படுத்தியுமுள்ளன. ஆகவே இதன் பின்னணியில் கனடா அரசு விதித்த தடை எந்த அடிப்படையில் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலையைச் சர்வதேச அரங்கில் நியாயப்படுத்தும் என்ற கேள்விகளே விஞ்சிக் காணப்படுகின்றன. ராஜபக்ச குடும்பத்துடனும் குறிப்பிட்ட சில இராணுவ அதிகாரிகளுடனும் மாத்திரம் ஈழத்தமிழர்களின் எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டம் சுருக்கப்பட்டுள்ளது. அத்துடன் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை, பொறுப்புக்கூறல் போன்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் எந்த ஒரு தீர்மானத்துக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே கட்டுப்பட்டதாகவும், ஏற்றுக்கொண்டதாகவும் இல்லை. ஆக, அமெரிக்க – இந்திய அரசுகள் தமக்குரிய புவிசார் அரசியல் நோக்கில் முடிந்தவரை ஜெனிவாத் தீர்மானங்கள் மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தனவே தவிர, ஈழத்தமிழர் நலன் சார்ந்தது அல்ல என்பதே வெளிப்படை.

கலப்புப் பொறிமுறை விசாரணை என்றும், இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் எனவும் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்கள் பரிந்துரைத்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், இலங்கை அதற்கு உரிய பொறுப்பு மிக்க பதிலை வழங்கவில்லை. பகிரங்கமாக மறுத்திருந்தது அல்லது நிராகரித்திருந்தது. இலங்கைப் போர்க்குற்றவாளிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது விசாரணை நடத்தும் யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் (Universal Jurisdiction) முறையை ஜெனிவா அறிமுகப்படுத்தியபோதும், அதனைக் கூட இலங்கை ஏற்கவில்லை, விரும்பவுமில்லை. முடிந்தவரை போர்க்குற்ற விசாரணை தேவையில்லை என்றும், அந்த விசாரணையை இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் உள்ளகப் பொறிமுறை மூலம் நடத்த முடியுமெனவும் இலங்கை ஜெனிவாவில் தன்னிலை விளக்கமளித்திருந்தது. இந்த இடத்தில் அமெரிக்காவைப் பொறுத்தவரை ஏதேனும் ஒரு விசாரணைப் பொறிமுறைக்கு இலங்கை உட்பட வேண்டுமென அழுத்தம் கொடுத்திருந்தது. ஆனால் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் போன்றவை பற்றி இந்தியா வெளிப்படையாக எதுவுமே கூறவில்லை. இன்றுவரையும் இந்தியா அந்த விவகாரத்தில் மௌனமாகவே உள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தவிர வேறு எதனையும் இந்தியா ஜெனிவாவில் பேசவேயில்லை.

ஆகவே குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கையைக் காப்பாற்றுகின்ற போக்குகளே ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் நீட்சியாகக் காணப்பட்டு வருகின்றன. அதுவும் 2015 ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் அரசாங்கம் அமைந்த காலத்தில் இருந்து இந்த ஆண்டு வரை இலங்கை தப்பித்துக் கொள்ளக்கூடிய சாதகமான சூழல் ஜெனிவாவில் நிலவுகின்றது. இவ்வாறான நிலையில் கனடா , ராஜபக்சக்களுக்குத் தடை விதித்தன் நோக்கம் இயல்பாகவே புரிகின்றது. குறிப்பாக இலங்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களைத் தாம் நிறைவேற்றுவதாகக் காண்பிக்கும் ஒரு ஏற்பாடக மாத்திரமே கனடா விதித்த தடையை அவதானிக்க முடிகின்றது.




## கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குத் தடை நீக்கப்படுமா?

அத்துடன் இலங்கைப் போர்க் குற்றவாளிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது குறித்த நாடுகள் விசாரணை செய்யவேண்டும் என்ற யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் என்ற முறைக்கு அமைவாக கனடாவுக்குள் இவர்கள் நால்வரில் எவரேனும் சென்றால், அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படும். ஆகவே அந்த விசாரணையைத் தடுக்கும் நோக்கிலும் தடையுத்தரவை கனடா விதித்தமைக்குக் காரணம் எனலாம். அதாவது மஹிந்த, கோத்தா ஆகியோர் கனடவுக்கு வந்தால் அவர்கள் மீது விசாரணை நடத்தி இராஜதந்திரச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும் ஆபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கில் கனடா இந்தத் தடையை விதித்திருக்கின்றதென்றால், அதில் மாற்றுக் கருத்தில்லை.

ஈழத்தமிழர் நலன்சார்ந்து கனடா செயற்பட வேண்டுமெனக் கருதியிருந்தால், போர்க்காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறியிருக்காமல், இன அழிப்பு நடந்தது என்று விபரித்திருக்க வேண்டும். அதற்கான வரலாற்று ஆவணங்களைக் கனடாவில் உள்ள ஈழத்தமிழ் அமைப்புகளிடமே கோரியிருக்கலாம். ஆனால் கனடா அரசு அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாமல் வெறுமனே ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில். அமெரிக்கா மற்றும் இலங்கை தொடர்பான கருக்குழு நாடுகள் (Core Group) போன்றவற்றின் விருப்பங்களுக்கு ஏற்ப தடை விதித்தி ருக்கின்றது. இலங்கை விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் செயற்படும் ஜேர்மன் தலைமையிலான கருக்குழு நாடுகள், போர்க் குற்ற விசாரணை மற்றும் மனித உரிமை மீறல் விவகாரங்களில் மென்போக்கையே கடைப்பிடித்திருக்கின்றன. அதற்குப் பங்கம் ஏற்படாமலேயே கனடாவும் செயற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்தத் தடை குறித்த நான்கு பேரையும் காப்பாற்றியுள்ளது எனலாம்.

கனடாவுக்குச் சென்றால் நிச்சயம் விசாரணை நடக்கும் என்பதால் குறித்த நான்கு பேரும் கனடவுக்குப் பயணிப்பதை இனிமேல் இயல்பாகவே தவிர்த்துக் கொள்வர். கனடாவைத் தொடர்ந்து வேறு சில ஐரோப்பிய நாடுகளும் தடை விதிக்குமானால், குறித்த நான்கு பேரும் தடை விதிக்காத நாடுகளுக்குக் கூடப் பயணம் செய்வதை இயல்பாகவே தவிர்த்துக்கொள்வர். அதாவது பாதுகாப்பாக உங்கள் நாட்டிலேயே இருங்கள் என்ற செய்தியை ராஜபக்சக்களுக்குக் கனடா சொல்லியிருக்கிறது.

ஆகவே ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூறுகின்ற போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து இலங்கையைக் காப்பாற்றும் ஒரு உத்திதான் கனடாவின் தடை என்பது மற்றுமொரு புரிதல். உண்மையில் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை தொடர்பான ஆர்வம் கனடாவுக்கு இருக்குமானால், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கனடாவுக்குச் செல்ல விதிக்கப்பட்டிருக்கும் தடையை அந்தநாடு நீக்க வேண்டும். அவ்வாறு தடை நீக்கப்பட்டு கனடாவுக்குள் பிரவேசித்து அங்கு வாழும் புலம் பெயர் ஈழத்தமிழர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குக் கனடா அனுமதி வழங்குமா?

கனடா அரசின் பார்வையில் மஹிந்த, கோத்தா ஆகியோர் போர்க்குற்றவாளிகள், மனித உரிமை மீறியவர்கள் என்ற கருத்து உறுதியாக இருக்குமானால், தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கனடாவுக்குப் பயணிக்க அனுமதிக்க வேண்டுமல்லவா? சுமந்திரன், சாணக்கியன் கனடாவுக்குள் செல்ல முடியுமென்றால், கஜேந்திரகுமாருக்கு அனுமதி மறுப்பதன் பின்னணி என்ன? அவர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாத ஒருவர். தமிழ்த் தேசிய அரசியலை ஜனநாயக வழியில் முன்னெடுத்துச் செல்கிறார். ஆகவே அவ்வாறான ஒரு அரசியல் பிரதிநிதி கனடாவுக்குச் சொல்ல ஏன் தடை விதிக்க வேண்டும்? கஜேந்திரகுமார் முன்வைக்கும் அரசியலில் கனடாவுக்கு பிரச்சினை உண்டென்றால், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை தொடர்பாகக் கனடா அரசின் நிலைப்பாடென்ன? இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துச் செல்லக் கூடிய தமிழரசுக் கட்சியின் அரசியல் அணுகுமுறையை கனடா விரும்புகின்றதா? ஆகவே தடை நீக்கம் எதனை வெளிப்படுத்துகின்றது? 2012 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்கா ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முன்வைத்த தீர்மானம் முதல் இன்று வரை அமெரிக்க – இந்திய அரசுகள் இலங்கை தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுத்திருந்ததோ, அதற்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவே இந்தத் தடை அமைந்துள்ளது

ஈழத்தமிழர் தொடர்பாக நேர்மையான அரசியல் பார்வை கனடா அரசுக்கு இருந்திருக்குமானால், குறித்த நான்கு பேருக்கும் தடை விதித்த அன்றைய தினமே கஜேந்திரகுமார் கனடாவுக்குப் பயணிக்க முடியும் என்றும் அறிவித்திருக்க வேண்டும். அல்லது தனிப்பட்ட முறையில் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். (கஜேந்திரகுமார் கனடாவுக்குச் செல்ல முடியாது என்ற தடை பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதல்ல) ஆகவே புவிசார் அரசியல் – புவிசார் பொருளாதாரத்தை மையமாக் கொண்டு 'அரசுக்கு அரசு' என்ற அணுகுமுறையில் இராஜதந்திர வியூகங்கள் வகுக்கப்பட்டுக் காய் நகர்த்தப்படுகின்றதே தவிர, போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நலன் கருதியல்ல என்பது இங்கு பகிரங்கமாகிறது.

அமெரிக்கா, கனடா போன்ற மேற்குலக நாடுகளும் ஐரோப்பாவும் மற்றும் இந்தியாவும், தத்தமது புவிசார் அரசியல் வியூங்கள்-நலன்களுக்காக -பாதிக்கப்பட்ட சமூகங்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகளையும் அதன் நியாயங்களையும் தொடர்ச்சியாக மறுதலித்துக் கொண்டே வருகின்றன. பாலஸ்தீனம், மற்றும் ஈழத்தமிழர் விவகாரங்கள் சிறந்த உதாரணங்கள். உலகில் விடுதலை கோரிப் போராடுகின்ற தேசிய இனங்களைப் பிரித்தாளுவது, தமக்குரியவாறு கையாளுவது மற்றும் தேசிய இனங்களை ஒடுக்குகின்ற அரசுகளைப் பாதுகாப்பது போன்ற ஒழுக்கமற்ற அரசியல் , சர்வதேசத்தில் தற்போது மேலோங்கி நிற்கின்றது.

இந்த உலக ஒழுக்கமற்ற வஞ்சக அரசியல் செயற்பாடுகளின் பின்னால் உள்ள ஆபத்துக்களைப் புரிந்து கொள்ளாமல், அதனைச் தமக்குச் சாதகமாகக் கருதிப் புலம்பெயர் நாடுகளில் உள்ள சில ஈழத்தமிழ் அமைப்புகள் ஆதரவு கொடுக்கின்றன. அமெரிக்கா, இந்தியா போன்ற மேற்கு நாடுகளின் பேச்சுக்களை நம்பி இலங்கையில் முதலீடுகளைச் செய்யவும் சில புலம்பெயர் அமைப்புகள் ஆர்வம் காட்டுகின்றன. ஆகவே தனிப்பட்ட முறையில் ராஜபக்ச குடும்பத்துக்கும் இலங்கைப் படைகளின் ஒரு சில அதிகாரிகளுக்கும் மாத்திரம் தடை விதிக்கப்படுவதால் ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு என்ற கட்டமைப்பு இன அழிப்பில் ஈடுபடவில்லை என்ற தவறான கற்பிதம் உலகில் தோற்றம் பெறும். அத்துடன் குறிப்பிட்ட ஒரு சில சிங்கள ஆட்சியார்கள்தான் ஈழத்தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என்று உலகம் பேசக் கூடிய ஆபத்துக்களும் உண்டு. எனவே கனடா அரசு விதித்துள்ள தடை ஈழத்தமிழர்களுக்கான சர்வதேச நீதியை முற்றாக மறுப்பதற்கான ஆரம்பம் என்றே பொருள்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உருத்திரபுரத்தில் நாகரமைத்த புராதனமான கோயில்கள்

பேராசிரியர் சி.பத்மநாதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே அம்பாறைத் தேர்தல் தொகுதி தவிர்ந்த இடங்கள் பலவற்றில் மிக அண்மைக் காலத்தில் நடைபெற்ற கள ஆய்வுகளின் விளைவாக, ஆதிவரலாற்றுக் காலத்திலே (கி.மு.300- கி.பி.400) தமிழ்மொழியின் செல்வாக்கு மேலோங்கிய நிலையில் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

வவுனியா அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அரும்பொருட்கள் மூலமாகவும் இந்தக்கருத்து உறுதியாகின்றது. அங்குள்ள சின்னங்களிலே தமிழைத் தவிர்ந்த வேறெந்த மொழியின் அடையாளங்களும் இல்லாமை எல்லோரதும் சிந்தனைக்கு உரியதாகும். ஆனால், அங்கு பௌத்தம் தொடர்பான சின்னங்களைத் தெரிவுசெய்து, அவற்றைக் காட்சிக்கு வைத்துள்ளனர். உன்னதமான கலைவனப்புடைய துர்க்கை அம்மனின் படிமம் ஒன்றுதான் அங்குள்ள சைவசமயம் சார்ந்த வடிவமாகும்.

வன்னியிலே காணப்படும் பௌத்த சின்னங்கள் எல்லாம் அங்கு வாழ்ந்த சிங்கள மக்களின் அடையாளங்கள் என்ற தவறான கருத்தினை ஹியூ நெவில் (Hugh Neville) முன்னிலைப்படுத்தினார்.

புரிந்துணர்வில்லாது அவர் சொன்னவை சுருதிப் பிரமாணமாகக் கொள்ளப்பட்டன. அது வரலாற்று ஆசிரியர்களுக்கும் அரச சார்புடைய தொல்லியல் நிறுவனங்களில் உள்ளவர்களுக்கும் வலிமையான நம்பிக்கையாகிவிட்டது. ஆனால் அவருக்கு முன்பு நீரப்பாசனமுறை பற்றி ஆய்வுகள் செய்த ஹென்றி பார்க்கர் (Henry Parker) வேறு விதமான கருத்தை வெளிப்படுத்தினார். தமிழ் பேசும் நாகரே மண்மலைக் குளத்தைக் (முத்தையன்கட்டு) கட்டினார்கள் என்றும் வன்னியில் வாழ்ந்த பௌத்தர்கள் தமிழராய் இருக்கக்கூடும் என்னும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பார்க்கர் பதிவு செய்துள்ள கருத்துகள் மிக அண்மைக் காலத்திலே கள ஆய்வுகளின் மூலம் கிடைத்த விபரங்களால் உறுதி பெறுகின்றன. தமிழ்ப் பிராமி வரிவடிவங்களிலே தமிழ்ப் பெயர்கள் பொறித்த பல நூற்றுக்கணக்கான தொல்பொருட் சின்னங்கள் கிடைத்துள்ளன. அவை வழிபாட்டுச் சின்னங்கள், பாவனைப் பொருட்கள் என இரு வகைப்படும். அவை அனைத்தும் நாகரோடு தொடர்புடையவை. நாகசிற்பங்களிலும், சிவலிங்கம், நந்தி, மயூரம் முதலானவற்றிலும் புத்தர்பாதம், புத்தர் படிமம் போன்றவற்றிலும் மணிணாகன் என்ற பெயரை எழுதுவது வழக்கம். வழிபாட்டுக்குரிய தெய்வங்களையும் அவற்றோடு தொடர்புடைய சின்னங்களையும் நாகர் மணிணாகன் என்றே குறிப்பிட்டனர். அதுபோல நாகர் கோட்டம், சைவக்கோயில், பௌத்தப் பள்ளி, சேதியம் போன்ற வழிபாட்டு நிலையங்களை மணிணாகன் பள்ளி என்று குறிப்பிட்டனர். இந்தப் பெயர்கள் எழுதிய சின்னங்கள் வன்னி மாவட்டங்களிற் செறிந்து காணப்படுகின்றன.

பாவனைப் பொருள்களில் மேல்வரும் இரு சிறிய வசனங்களை எழுதுவது அவர்களின் வழமை:

**'வேள் ணாகன் மகன் வேள் கண்ணன்'**
**'வேள் கண்ணன் மகன் வேள் ணாகன்'**

உடைமைப் பொருள்கள், கட்டுமானங்களின் தூண்கள், சுவர்கள், அத்திபாரங்கள், தூண்தாங்கு கற்கள், குளக்கட்டுகள், கிணற்றுக் கட்டுகளை அடுத்துள்ள கற்பாறைகள், மலைக் குகைகள் போன்றவற்றில் இவற்றைக் காணலாம்.

அம்மி, குளவி, ஆட்டுக்கல், உரல், செக்கு போன்றவற்றிலும் இவற்றைக் காணலாம். ஈமக் கல்லறைகளிலும் அவற்றில் இடப்பட்ட பானை, சட்டி, குடம் போன்றவற்றிலும் இவற்றைக் காணமுடிகின்றது. எழுத்துப் பொறித்த நாகரின் பாவனைப் பொருள்களிலும் வழிபாட்டுச் சின்னங்களிலும் நாக வடிவங்களை அமைப்பதும் நாகரின் வழமையாகும். உருத்திரபுரத்திலுள்ள நாகரின் பண்பாட்டுச் சின்னங்களை கள ஆய்வு செய்யும் வாய்ப்பு பொன்று அண்மையில் எமக்குக் கிடைத்தது. அதற்கான ஏற்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் செய்தார்.

அன்றைய தினம் எமக்குப் போதிய நேர அவகாசம் இன்மையால் சிவன் கோயில் வளாகத்திலுள்ள தொல்பொருட்கள் சிலவற்றையே பார்வையிட முடிந்தது. அங்கு 18 நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு சிவன் கோயிலும் பௌத்தப் பள்ளியும் இருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன.

கோயிலுக்குரிய பரந்த அளவிலான நிலத்தில், ஓரிடத்திலே புத்தர் படிமம் உள்ளதென்ற காரணத்தால் அதனைச் சுற்றியுள்ள ஒரு துண்டு நிலத்தை பாதுகாப்புத்தலமாகத் தொல்பொருள் திணைக்களத்தினர் வரையறை செய்து, அதற்கு எல்லையிட்டுள்ளனர். இலங்கையிலுள்ள மிகத் தொன்மையான தொல்பொருட் சின்னங்களிற் பெரும்பாலானவை சமயச் சார்புடையவை; அவை பௌத்தம், சைவசமயம், நாகவழிபாடு என்பன பற்றியவை. அவற்றைப் பாதுகாப்பது தொல்பொருள் திணைக்களத்தினரின் பொறுப்பும் பணியும் ஆகும். சிவன் கோயிலின் கட்டுமானங்கள் நவீன காலத்துக்குரியவை. அவை 20 ஆம் நூற்றாண்டிற் காடுகளை வெட்டி, மீள்குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட பின் உருவாக்கப்பட்டவை. ஆனால், அது ஏறக்குறைய 1800 வருடங்களுக்கு முன் சிவலிங்க வழிபாடு நடைபெற்ற இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. மூலஸ்தானத்தில் இருக்கும் சிவலிங்கமும் அக்காலத்திற்கு உரியதாகும். ஆவுடையாரில், நாகரின் வழமைக்கு ஏற்ப பெயர் இடப்பட்டுள்ளமை இக்கருத்துக்கு ஆதாரமாகின்றது. அத்துடன் அக்கோயிலிற் பயன்பாட்டிலுள்ள சந்தனக் கல்லிலும் நாகர் பற்றிய தமிழ்ச் சொற்கள் தமிழ் வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன. புதிய கோயிலைக் கட்டுவதற்கு நிலத்தை அகழ்வு செய்த பொழுது இந்தச் சந்தனக் கல் கிடைத்திருக்க வேண்டும். கோயில் வளாகத்தில் பரவலாக எழுத்துப் பொறித்த தூண் துண்டங்கள் காணப்படுகின்றன. அவை ஆதியான சிவன்கோயிலின் கட்டுமானப் பகுதிகள் என்று கொள்ளத்தக்கவை.

## பௌத்தப் பள்ளியின் அடையாளங்கள்

தொல்லியல் திணைக்களத்தினர் தங்கள் பாதுகாப்புத் தலம் என அடையாளப்படுத்திய நிலத்திற்கு வெளியே அதற்கண்மையிலுள்ள ஒரு மரத்தின் கீழே சில செங்கற்களும் தூண்துண்டங்களும் காணப்படுகின்றன. அவற்றைச் சுத்தம் பண்ணி, நீரினாற் கழுவிய பின் அவற்றிலே தமிழ்ப் பிராமி எழுத்துகள் தெரிந்தன; தமிழ்ப் பெயர்களும் வசனங்களும் தெரிந்தன, அவை நாகர் பற்றியவை. நாகரின் கல்லறைகளிற் காணப்படும் இரு வசனங்களும் இவற்றிலே பதிவாகி உள்ளன.

சுடுமண் கற்கள் சதுரமானவை. அளவிற் பெரியவை, ஆதிவரலாற்றுக் காலத்திலே தமிழகத்தில்பயன்படுத்தியவற்றைப் போன்றவை அவற்றின் வரிவடிவங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியவை. இவற்றைப் போன்ற கற்கள் மட்டக்களப்பில் மாவடிவேம்பு என்னும் ஊரின் கிழக்குக் கரையோரமாக அமைந்த வில்லுக்காட்டிலும் உள்ளன. அங்கு, அவை நாகரின் குடியிருப்பொன்றின் அழிபாடுக்கிடையே அடையாளங் காணப்பட்டன.

அவற்றிலும் வழமைப்படி தமிழ்ப் பெயர்களும் வசனங்களும் எழுதப்பட்டுள்ளன. எம்மால் அவதானிக்க முடிந்த சில உருப்படிகளில் மணிணாகன் பள்ளி என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது. சிவன் கோயில்களையும் நாகர் கோட்டங்களையும் பௌத்தப் பள்ளிகளையும் மணிணாகன் பள்ளி என்று நாகர் குறிப்பிட்டனர். தாந்தாமலையில் நாகர் அமைந்த பௌத்தப்பள்ளியில் அந்தப் பெயர் பொறித்த கற்றூண்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சிலவற்றில் நாகரின் குலமரபுச் சின்னமாகிய நாகத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. உருத்திரபுரத்திலுள்ள தூண்துண்டம் ஒன்றிலே தமிழில் வாசகம் எழுதப்பட்டிருப்பதோடு நாகபந்த வடிவமும் செதுக்கப்பட்டுள்ளது. நாகபந்த வடிவங்கள் பலவிதமான கோலங்களில் அமைந்திருக்கும். அவை வெவ்வேறான இடங்களில் வெவ்வேறான கோலத்திலே செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்குள்ள கற்றூணில் ஒரு சோடியான பாம்புகள் தலை நிமிர்த்திப் படமெடுத்த கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. செங்கட்டி ஒன்றில் மணிணாகன் பள்ளி என்று குறிப்பிடும் கட்டுமானம் நாகரினால் அமைக்கப்பட்டது என்பது இதனால் மேலும் தெளிவாகின்றது.

மணிணாகன் பள்ளி என்ற பெயர் மகாவம்ச ஆசிரியருக்கு அறிமுகமான ஒன்றாகும். மணிநாகபர்வத விகாரம் என்பதை மஹல்லக நாகன் (பி.பி.13614) என்ற அநுராதபுரத்து அரசன் அமைப்பித்தானென்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது (34:89). சூளநாக விகாரம் என்ற வேறொரு விகாரத்தையும் அவன் கட்டுவித்தான் (மகாவம்சம்). அது சூளநாக(ன்) என்னும் இளவரசன் ஒருவனின் பெயரால் வழங்கியது (34:90). அதேபோல மணிநாக (பர்வத) விகாரம் என்பது மணிநாக(ன்) என்ற சிறப்புப் பெயரையுடையவரோடு தொடர்புடையது என்று கருதலாம். புத்தர் பெருமானை மணிநாகன் என்றே நாகர் குறிப்பிட்டனர். குசலான் மலையிலும் வேறிடங்களிலும் மணிநாகன் என்ற பெயர் எழுதிய புத்தர்பாத வடிவங்கள் உள்ளன. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் கிடைத்த பல புத்தர் படிமங்களில் மணிணாகன் என்னும் பெயர் அமைந்துள்ளது.

புத்தவிகாரம் என்பதை மணிணாகன் பள்ளி என்று நாகர் குறிப்பிட்டனர். விகாரம், பள்ளி என்பன ஒரே பொருள் குறிக்கும் இருவேறு மொழிச் சொற்கள். விகாரம் என்பது தமிழியிலே தற்பவமாக வந்த சமஸ்கிருத/பிராகிருத மொழிச் சொல். 'அபயாஸ்ரய வளநாட்டு வெல்காமப் பள்ளி வெல்கம் வேரகமான ராஜராஜப் பெரும் பள்ளி புத்தர்க்கு' என வரும் கல்வெட்டுக் குறிப்பினால் இவ்விளக்கம் தெளிவாகின்றது. எனவே மணிணாகன் பள்ளி என்ற தமிழ்ப் பெயரை மணிணாக விகாரம் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது என்பது உறுதியாகின்றது. நாகரின் வழமைகளின் அடிப்படையில் மட்டுமே மணிநாகபர்வத விகாரம் பற்றிய மகாவம்சக் குறிப்பினைப் புரிந்துகொள்ள முடியும். அந்த விகாரத்தை அமைப்பித்த மஹல்லக நாகன் நாகர்குலத்து அரசன் என்பதும் குறிப்பிடற்குரியது.

இதுவரை கவனித்தவற்றின் முடிவுகளை கீழ்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

உருத்திரபுரத்துச் சிவன்கோயில் வளாகத்தைச் சூழ்ந்த பகுதிகளிலே தமிழ்மொழி பேசும் நாகரின் குடியிருப்புகள் இருந்தன. அவற்றின் காலம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்டது. அவர்கள் சிவலிங்க வழிபாட்டுக்குரிய கோட்டத்தினையும் அதற்கு அண்மையில் ஒரு பௌத்தப் பள்ளியினையும் அமைத்திருந்தனர்.

அவை இரண்டிலும் தமிழ்ப்பிராமி வரிவடிவங்களில் எழுதிய தமிழ்ச் சொற்களும் வசனங்களும் செங்கட்டிகள், கற்றூண் போன்ற தொல்பொருள் சின்னங்களிற் காணப்படுகின்றன. பிராகிருத மொழி வழங்கியமைக்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அங்குள்ள இரு சமய நிறுவனங்களும் தமிழ் மொழி பேசும் மக்களின் வரலாற்று/பண்பாட்டுச் சின்னங்களாகும்.

அவை 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலம் முதலாக வாழ்ந்த தமிழ் மொழி பேசும் நாகரின் அடையாளங்களாகும்.

இந்நாட்களிற் போல தொன்மைக் காலத்திலே, குறிப்பாக நாகர் சமூகத்தில், நாகவழிபாட்டினர், சைவர்கள், பௌத்தர்கள் என்று மக்களை வேறுபடுத்தி, வகைப்படுத்தும் வழக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. கி.மு.9 ஆம் நூற்றாண்டு முதலாகத் தென்னிந்தியப் பிரதேசங்களிலிருந்தும் வந்து, இலங்கையிற் பரவிய நாகர் நாகவழிபாடு, சைவசமய வழிபாடு என்பவற்றை அறிமுகப்படுத்தினார்கள். அத்துடன் பௌத்தம் பரவிய காலம் முதலாக அதனையும் பின்பற்றத் தொடங்கினார்கள். வெடுக்குநாறி மலையிலே பரந்து காணப்படும் கல்வெட்டுகளும் வழிபாட்டுச் சின்னங்களும் தக்க உதாரணங்களாகும். அங்கு தமிழ் மொழிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. தமிழ்மொழிக் கல்வெட்டுகள் நாகரைப் பற்றியவை; பிராகிருத மொழிக் கல்வெட்டுகள் பௌத்த சங்கத்தாருக்கு வழங்கிய தானங்கள் பற்றியவை. அவற்றோடு நாகரின் வழிபாட்டுச் சின்னங்களான நாகக்கல், சிவலிங்கம் போன்றனவும் அங்குள்ளன. மேலும் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களாகிய நினைவுத் தூண்களும் மலைப்பாறையில் வெட்டிய குழிகளும் அங்குள்ளன. நாகர்மூலமே பெருங்கற்காலப் பண்பாடு இந்நாட்டிற் பரவியதென்பதும் குறிப்பிடத்தக்கது.

தொல்பொருட்சின்னங்களைப் பரந்த மனப்பான்மையோடும் அறிவியல் நோக்கிலும் புரிந்துகொள்ள வேண்டும். தலத்தில் வாழுகின்ற மக்களின் நலன்களைப் பாதிக்காத வகையிலும் அவர்களின் ஆதரவோடும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும். நல்லிணக்கம் ஏற்படும் வகையில் இவற்றைப் பாதுகாப்பது அரசின் கடமையும் பொறுப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் சேவை

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வட்டார ரீதியாக பொதுமக்களுக்கான சோலைவரி அறவீடு, ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளல், வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் பெற்றுக்கொள்ளல் ஆகிய நடமாடும் சேவைகள் நடைபெறவுள்ளன.

20 ஆம் வட்டாரத்துக்குட்பட்ட ஜே/214 பிரிவு மக்களுக்கு சுவாமி ஆபிரகாம் சனசமூக நிலையத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையும் ஜே/213 பிரிவு மக்களுக்கு காளிகாதேவி சனசமூகநிலையத்தில் 18 ஆம் திகதி புதன்கிழமையும் 18 ஆம் வட்டாரத்துக்குட்பட்ட ஜே/218 பிரிவு மக்களுக்கு ஐக்கிய வாலிபர் சனசமூகநிலையத்தில் 19 ஆம் திகதி வியாழக்கிழமையும் ஜே/217 பிரிவு மக்களுக்கு முற்போக்கு இளைஞர் சனசமூகநிலையத்தில் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 19 ஆம் வட்டாரத்துக்குட்பட்ட ஜே/219 பிரிவு மக்களுக்கு கலைவாணி சனசமூகநிலையத்தில் 23 ஆம் திகதி திங்கட்கிழமையும் முற்போக்கு முன்பள்ளியில் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 21 ஆம் வட்டாரத்துக்குட்பட்ட ஜே/212 பிரிவு மக்களுக்கு நீலியம்பனை கோயில் வளாகத்தில் 25 ஆம் திகதி புதன்கிழமையும் 12 ஆம் வட்டாரத்துக்குட்பட்ட ஜே/ 215 பிரிவு மக்களுக்கு முதலியவேள் சனசமூகநிலையத்தில் 26 ஆம் திகதி வியாழக்கிழமையும் ஜே/ 216 பிரிவு மக்களுக்கு கும்பளாவளவு பிள்ளையார் கோயில் அருகில் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் குறித்த நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளன.(ஒ-14)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எதிர்காலத்திற்கு பிரவேசியுங்கள்

## SLIC விற்பனைக் குழுவில் இணைந்துகொள்வதற்கு walk-in interview வாரமொன்று

**உங்கள் எதிர்கால வாழ்க்கை வெற்றிகரமானதொரு தொழிலால் பிரகாசித்திடவும், உங்கள் கனவுகளை நிறைவேற்றிக்கொண்டு எதிர்காலத்தை ஒளிமயமாக்கி கொள்வதற்கும் இதுவே மிகச்சிறந்த தருணம்.**

நீங்களும் 2023 ஜனவரி 23 முதல் 27 வரை காலை 9:00 முதல் மாலை 4:00 மணி வரையில் நாடு முழுவதும் உள்ள SLIC கிளைகளினூடாக எமது விற்பனை குழுவில் இணைந்து உங்கள் எதிர்கால தொழில் வாழ்க்கைக்குள் அடியெடுத்து வையுங்கள்.

**அனுகூலங்கள்**

- எல்லையற்ற வருமானம்
- விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்திலிருந்து பணி புரியும் வாய்ப்பு
- ஒன்லைனில் பணி புரியும் வாய்ப்பு
- வெளிநாட்டு சுற்றுலா மற்றும் மேலதிக சலுகைகள்
- விசேட பயிற்சி பட்டறைகள்

**தகைமைகள்**

க.பொ.த (சா/த) கணிதம் மற்றும் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி மற்றும் வயது 18-40 ற்கு இடைப்பவராக இருத்தல்

Company Registration Number - PB 289

Sri Lanka Insurance
www.srilankainsurance.com

மேலதிக விபரங்களுக்கு
0112 357 357 ஐ அழையுங்கள்

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com







**S.பிரவீன்**
தரம் - 4
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்




**பு.ஜீவேந்திரன்**
தரம் - 07
யா/இந்துக் கல்லூரி



**பா.ஆதேஷ்**
தரம் - 3C
யா/இந்து ஆரம்பப் பாடசாலை



**ச.விவிதன்**
தரம் - 6C
கிளிநொச்சி மத்திய கல்லூரி.

# யாழ்ப்பாண வரலாறு

**1505–1948 வரை**

ந.பரமேஸ்வரன்

**1911,பெப்ரவரி**
மானிப்பாயைச் சேர்ந்த பிரபல புகைப்படக் கலைஞர் லோட்டன் புகைப்படம் அச்சிடும் தாள்(photo print paper) ஒன்றைக் கண்டுபிடித்து அதற்கு அதற்கு காப்புரிமை பெற்றார். லோட்டன் பிரித்தானியர் காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற புகைப்படக்கலைஞர். லோட்டன் எடுத்த புகைப்படங்களை இப்போதும் கொழும்பு, கண்டி அருங்காட்சியகங்களில் காணலாம். மானிப்பாயில் லோட்டன் ஸ்டூடியோ 1980 களின் ஆரம்பம் வரை இயங்கி வந்தது.மானிப்பாயில் லோட்டன் வாழ்ந்த வீதிக்கு லோட்டனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**1911, மார்ச் 10**
இலங்கையில் ஐந்தாவது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.வடமாகாண சனத்தொகை 369,651(யாழ்ப்பாணம் 40,441)

**1911, ஏப்ரல் 10**
நாய்களைப் பதிவுசெய்யும் சட்டம் வடமாகாணத்தில் அமுலுக்கு வந்தது.

**1911, ஜூலை 17**
யாழ்ப்பாணத்தில் திருமணச் சட்டம் தேசவழமையில் உள்ளபடி அமுலுக்கு வந்தது.

**1911, செப்ரெம்பர்**
மானிப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் யாழ்ப்பாணத்தில் தேநீர்ச்சாலை ஒன்றை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தேநீர்ச்சாலை இது தான்.தேநீர்ச்சாலையில் இனிப்பு வகைகளையும் விற்பனை செய்த காரணத்தால் இவர் மிட்டாய்க்கடை வல்லிபுரம் என அழைக்கப்பட்டார். இந்த இடம் இப்போதும் முட்டாசுக்கடைச்சந்தி என அழைக்கப்படுகிறது. கீரிமலைக்கேணியையும் , யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் கங்கா சத்திரத்தையும் கட்டுவித்தவர் இவரே.

**1911, டிசம்பர் 11**
உரும்பராய் இந்துக்கல்லூரி ஆரம்பம்.

**1911, டிசம்பர் 13**
சட்டமன்றத்துக்கு இலங்கைப் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.
இந்தத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரே (கற்றவர்கள் மட்டுமே) வாக்களித்தனர். (என்ன அடிப்படையில் வாக்காளர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பது தெரியவில்லை) சேர்.பொன். இராமநாதன் 664 மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டினார். திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்ட வாக்குகள் எண்ணப்படவில்லை. இவற்றையும் சேர்த்திருந்தால் இராமநாதன் ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டியிருப்பார் எனக் கருதப்பட்டது.

**1911, டிசம்பர் 16**
யாழ்ப்பாண நகரசபைக்கு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் திரு. A.கதிரவேலு, S.தம்பாப்பிள்ளை,S.கதிரேசு ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**1911, டிசம்பர் 18**
சேர்.பொன். இராமநாதன் சட்டபைக்கு (LEGISLATIVE COUNCIL) கற்ற இலங்கையர்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். சட்டபையில் ஒவ்வொரு இனத்தினதும் பிரதிநிதிகள் இருந்தனர். தமிழ்ப் பிரதிநிதி,கண்டிச் சிங்களப் பிரதிநிதி,கரையோரச் சிங்களப் பிரதிநிதி, முஸ்லிம் பிரதிநிதி, ஐரோப்பியப் பிரதிநிதி என்போரை விட மேலதிகமாக 'கற்ற இலங்கையர்களின் பிரதிநிதியாக' (educated Ceylonese Member) சேர்.பொன். இராமநாதன் நியமிக்கப்பட்டார்.

**1911 ,டிசம்பர் 25**
மருத்துவர் சரவணமுத்து காலமானார். இவர் MD பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது. லண்டனிலுள்ள Durham பல்கலைக்கழகத்தில் இவர் MD பட்டம் பெற்றிருந்தார்.

**1912, பெப்ரவரி**
யாழ்ப்பாணக்கல்லூரி பேராசிரியர் அலன் எபிரகாம் (ALEN ABRAHAM) லண்டனிலுள்ள ROYAL ASIATIC SOCIETY யில் வானசாஸ்திர புலமைப்பரிசில் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டார். இந்த கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.(யாழ்ப்பாணக்கல்லூரி பிரித்தானியார் ஆட்சியில் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை மேற்கொண்டு வந்த படியால் யாழ்ப்பாணக்கல்லூரி யில் கற்பித்தவர்கள் பேராசிரியர்கள் என்றே அழைக்கப்பட்டனர்)

**1912, மார்ச்**
J.N. திரைவீரசிங்கம் சட்டசபைக்கு மேலதிக தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

**1912, மே 26**
ஏழு ஆயுள் தண்டனைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர். பிரித்தனியார் ஆட்சியில் ஆயுள் தண்டனைக்கைதிகளை அந்தமான் தீவுக்கு அனுப்பும் நடைமுறை அமுலில் இருந்தது.

**1912, டிசெம்பர் 03**
யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக திரைப்படம் காண்பிக்கப்பட்டது. இலங்கை திரைப்படக் கம்பனியைச் சேர்ந்தவர்கள் (Ceylon Biocope Company) யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்தில் திரைப் படங்களை காண்பித்தனர். இந்தத் திரைப்படங்கள் எங்கு காண்பிக்கப்பட்டன என்பது தெரியவில்லை; ஏனெனில் அந்தக்காலத்தில் திரையரங்குகள் எதுவும் இருக்கவில்லை. இதனால் ஏதாவது மண்டபத்திலா அல்லது திறந்த வெளியிலா திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன என்பது தெரியவில்லை.

**1913, ஜனவரி 20**
இராமநாதன் கல்லூரி ஆரம்பம்.
பிரித்தனியார் ஆட்சியில் பெண்கள் கல்வி கற்பது அரிதாகவே காணப்பட்டது.கிறிஸ்தவ மிஷனரிப் பாடாலைகளே பெண்களுக்கு கல்வி புகட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. கிறிஸ்தவ மிஷனரிப் பாடாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பினால் அவர்கள் தமது பிள்ளைகளை மதம் மாற்றி விடுவார்கள் என்ற அச்சம் யாழ்ப்பாணப் பெற்றோரிடையே காணப்பட்டது. இதனால் யாழ்ப்பாணப் பெற்றோர் தமது பெண்பிள்ளைகளைக் கல்வி கற்க அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் சேர்.பொன். இராமநாதன் இந்துப் பெண்கள் இந்து சமயச் சூழலில் கல்வி கற்பதற்காக மருதனார்மடத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து, வீடு வீடாகச்சென்று பெற்றோரிடம் பெண் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புமாறு பிரசாரம் செய்தார். 1980 வரை இராமநாதன் கல்லூரி மாணவிகளின் சீருடை முழுப் பவாடை சட்டை (கீழ் வகுப்பு) பாவாடை, தாவணி (இடை நிலை வகுப்பு) சேலை( உயர் தர மாணவிகள்) என்றே காணப்பட்டது. *(வரலாறு தொடரும்)*

# மீன் கரைஞ்சாலும்...

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி)*

யாவும் ஒன்றாகிவிட்டன.இதில் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவரின் கட்சியும் அடங்கும். அதேசமயம் ஆயுதப் போராட்ட மரபில் வராத அரசியல்வாதிகள் விலகி நிற்கிறார்கள். இவ்வாறாக தமிழ்த்தேசியப் பரப்பில் இப்பொழுது மொத்தம் நான்கு கூட்டுக்கள் அல்லது நான்கு சேர்க்கைகள் மேலெழுந்திருக்கின்றன. சிலசமயம் எதிர்காலத்தில் இவற்றுட் சில தங்களுக்கிடையே ஒரு புதிய ஒருங்கிணைப்புக்கு போகமுடியும்.

ஆனால் இப்போதுள்ள களநிலைவரத்தின்படி ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால், தமிழ் வாக்குகள் கட்சிகளால் சிதறடிக்கப்படும் ஆபத்தே அதிகம் தெரிகிறது. முன்னைய தேர்தல்களின்போது ஒரு பழமொழி கூறப்படுவதுண்டு. "மீன் கரைஞ்சாலும் சட்டிக்குள்தான் இருக்கிறது" என்று. ஆனால் இனி அப்படிக்கூற முடியாது. கடந்த பொதுத்தேர்தல் கற்றுத்தந்த பாடம் அது. கடந்த பொதுத்தேர்தலின்போது கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தது. வீட்டுச் சின்னத்துக்கு வெளியே போனால் வெல்ல முடியாது என்ற மாயை உடைக்கப்பட்டது.ஆனால் அதேசமயம் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணி ஒரு பலமான கூட்டாக உருத்திரளவில்லை. அதனால் கூட்டமைப்பு இழந்த ஆசனங்களில் மூன்றை அரச சார்புக் கட்சிகள் வென்றன. அதாவது மீன் சட்டிக்கு வெளியே போய்விட்டது. இனிமேலும் அதுதான் நிலைமை என்று தெரிகிறது.தமிழ் மக்கள் தேசமாகத் திரள்வதற்குப் பதிலாகக் கட்சிகளாக சிதறப் போகிறார்களா?அதுவும் இப்படிப்பட்ட உடைவுகள் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றன?

அரசாங்கம் தமிழ்ப் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கும் ஒரு காலகட்டம் இது. அதே சமயம் கனடாவில் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் ஒரு திருப்பகரமான வெற்றியைப் பெற்றிருக்கும் காலகட்டமும் இது பேச்சுவார்த்தைக் காலங்களில் பேரத்தைக் குறையவிடக்கூடாது. பேரம் குறையக்கூடாது என்றால், தமிழ்மக்களைப் பொறுத்தவரை, தேசத் திரட்சியைப் பலப்படுத்த வேண்டும்.ஆனால் எந்த ஒரு தமிழ்க் கட்சியிடமும் அந்தத் தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருபுறம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நீதிக்கான போராட்டத்தில் மேலும் ஒரு வெற்றியைப் பெற்றிருக்கும் அதே காலப்பகுதியில் தாயகத்தில் உள்ள கட்சிகளோ தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுவதற்குப் பதிலாகக் கட்சிகளாக, வாக்காளர்களாகச் சிதறடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்




## தலைகள் உருளும்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் வெகுவிரைவில் மாற்றம் வரவுள்ளதாம். புதிய செயலாளராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றனவாம்.

மகேஷ் சேனாநாயக்க தற்போது கிழக்கு தீமோரில் இருக்கின்றார். அவர் அங்கு ஆலோசகராகச் செயற்பட்டு வருகின்றார்.

இந்த நிலையில் மகேஷ் சேனாநாயக்கவை தொடர்புகொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, இது சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடியுள்ளாராம்.

இதன்போது பதவியேற்க பச்சைக்கொடி காட்டியுள்ள மகேஷ் சேனாநாயக்க, 'கப்டனை மட்டும் மாற்றிப் பயனில்லை, முழு அணியையும் மாற்ற வேண்டும்' எனக் கூறினாராம். அதாவது பாதுகாப்புதுறை முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்துள்ளாராம். ஆக அவர் பாதுகாப்புச் செயலாளரானால் பாதுகாப்பு துறையில் முக்கிய பதவிகளில் அதிரடி மாற்றங்கள் வரக்கூடும்.

நல்லாட்சியின்போதே மகேஷ் சேனாநாயக்க இராணுவத் தளபதியாக செயற்பட்டார். ஓய்வின் பிறகு கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிக்கலில் மைத்திரி

உளவுத் தகவல்கள் முன்கூட்டியே கிடைத்தும் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு தவறிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அது விடயம் சம்பந்தமாகக் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார். தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு அவர் 10 கோடி ரூபா இழப்பீட்டை தனது சொந்த பணத்திலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்குள் வழங்க வேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்பை அவர் நிறைவேற்றத் தவறினால், நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலும் சிக்க வேண்டிவரும். அது மட்டுமல்ல சொத்துகளும் முடக்கப்படும் அபாயம் உள்ளது.

இவ்வாறு இடியப்பச் சிக்கலில் சிக்கியுள்ள மைத்திரிபால சிறிசேன தொடர்பில் அரசியல்வாதிகளும் தற்போது அவதானம் செலுத்தியுள்ளனராம். அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வீட்டில் சுதந்திரக்கட்சி யில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள உறுப்பினர்கள் ஒன்றுகூடினராம்.

இதன்போது என்னதான் இருந்தாலும் மைத்திரி எமது தலைவர், அவருக்குப் பக்கபலமாக இருக்கவேண்டும் எனக் கலந்துரையாடியுள்ளனராம். உதவிகள் தேவைப்பட்டால் அதை வழங்க வேண்டும் எனவும் பிரஸ்தா பிக்கப்பட்டதாம். இதற்கிடையில் மைத்திரி தரப்பை இணைத்துக்கொண்டதால் 'ஹெலிகொப்டர்' கூட்டணிக்கு கத்தோலிக்க வாக்குகள் முழுமையாக கிடைக்காமல்போகும் என இந்தக்கூட்டணியில் உள்ளவர்கள் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனராம்.

## வேகுமா பருப்பு?

வடக்கை பின்புலமாகக் கொண்ட தொழிலதிபர்கள் எனக்கூறிக்கொள்ளும் சிலர், அரசியல் செயற்பாடுகளுக்காக மலையகம் நோக்கி பறந்துவந்துள்ளனராம். மக்களுக்கு உணவுப் பொதி, சத்துணவு வேலைத்திட்டம் உள்ளிட்டவற்றை கடந்த சில மாதங்களாக செய்துவந்த அவர்கள், தற்போது உள்ளாட்சித் தேர்தலில் தமது பிரதிநிதிகளையும் நிறுத்தவுள்ளனராம்.

இதில் சிலர் பிரதான கட்சிகளின் அமைப்பாளர்களாகவும் வந்துள்ளனர். வடக்கில் வேகாத தமது அரசியல் பருப்பை, பணத்தை வைத்து மலையகத்தில் வேக வைக்கலாம் என்பதே அவர்களின் நினைப்பாம்.

தேர்தலுக்காக தற்போது தடல் புடலான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றனவாம். பணம் பத்தையும் செய்யும் அல்லவா….!

அதேவேளை உள்ளாட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து 'தொலைபேசி 'சின்னத்தில் போட்டியிட தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது. அரசாங்கத்துடன் கூட்டு வைத்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சேவல் சின்னத்தில் தனித்து போட்டியிடவுள்ளது. இது தொடர்பில் எதிர்வரும் 17 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.


## ஜீவனுக்கு அமைச்சு

அமைச்சரவை மறுசீரமைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் பதவிகளை ஏற்பதற்கு தயாராகுமாறு சம்பந்தப்பட்ட எம்.பிக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சுப் பதவி இ.தொ.கா.வின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு வழங்கப்படவுள்ளது. அமைச்சு பதவியை ஏற்பதற்கு காங்கிரஸின் தேசிய சபையும் அனுமதி வழங்கியுள்ளதாம்.

அத்துடன், காஞ்சன விஜேசேகரவிடமிருந்து மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு பறிக்கப்படவுள்ளது. சுகாதார அமைச்சுப் பதவியிலும் மாற்றம் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# 117 சொற்சிலம்பம் போட்டி



அனுப்புபவர் பெயர்:....................................................

முழுமையான தபால் விலாசம்: ....................................

..............................................................................

கையொப்பம்:.............................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. இறந்தோருக்காக மாதந்தோறும் செய்யும் நிகழ்வு 4. பாக்குத்தரு மரம் 7. ஒரு கருவி 8. வணக்கத்துக்குரியவர் 9. சடப்பொருள்களின் நிலைகளுள் ஒன்று 12. திறை 13. இதற்கு அடைக்கும் தாழ் உண்டோ? 15. அழகு 17. ஒருநேர அளவீடு 18. பௌர்ணமி தினத்துக்கு சிங்களப் பெயர் 19. போத்தல் 21. வேலியில் போடப்படுவது 23. தொண்டன், பெரியவரை விழிப்பது இப்படி 24. பச்சடி.

### மேலிருந்து கீழ்

1. அழுக்கு 2. சிற்றன்னை 3. சூரியன் 4. விழி 5. நொண்டி 6. ஆதிமனிதனின் வீடு 8. சம்மதச் சொல் 10. ஒரு வரிசையில் அமைக்கப்பட்ட சொற்கள் 11. இன்ப அனுபவம் 13. இல்லாமல் செய்தல் 14. மைந்தன் 16. நோய் 17. தும்பு 19. தோலில் போர்த்துவது 20. சிரசு 22. ஏது?

### சொற்சிலம்பம் போட்டி 116 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விவரிப்பு 5. தாதா 7. பூச்சி 8. கபடம் 10. திசை 11. வாழ்க்கை 12. யமன் 15. பரிதி 16. சுவாசம் 18. கசிப்பு 20. தனிமை 21. புரதம் 23. தினை 24. விலை 25. போர்

**மேலிருந்து கீழ்**

1. விபூதி 2. பச்சையரிசி 3. ரிசி 4. புகழ் 5. தாடகை 6. தாம் 9. பக்கவாதம் 11. வான் 13. மதிப்பு 14. அம்மையார் 15. பகவதி 17. சனி 19.புரவி 22. தலை

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.117**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
20.01.2023 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி இலக்கம் 116 இல் வெற்றி பெற்றோர் விபரம்

| 1 ஆம் பரிசு | 2 ஆம் பரிசு | 3 ஆம் பரிசு | 4 ஆம் பரிசு | 5 ஆம் பரிசு |
|---|---|---|---|---|
| **ந.யநோஜி** | **நி.அர்ச்சனா** | **மா.மகாலிங்கம்** | **தி.செல்வராணி** | **சி.பாலசுந்தரம்** |
| அம்மன் கோயில் வீதி, சங்கத்தானை. | கண்ணன் ஆலய வீதி, கிளிநொச்சி. | கைதடி மேற்கு, கைதடி | பருத்தித்துறை வீதி, நல்லூர் | சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதுங்களைக் கூட சேதனப்பசளை ஆக்கிய விவசாயி!

நேர்கண்டவர் : ப.சிவதர்சினி
(விவசாய விரிவாக்கக் கற்கைகளுக்கான
பட்டப்பின்படிப்பு
பேராதனைப் பல்கலைக்கழகம்.)

இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் விவசாயத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஒருகாலத்தில் சேதனப் பசளைகளைப் பயன்படுத்திப் பயிர் செய்தமக்கள் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப சேதனப் பசளைப் (Organic fertilizer) பாவனைகளைக் கைவிட்டு அசேதனப் பசளைப் (Artificial fertilizer) பாவனை களுக்குப் பழக்கப்பட்டனர்.
நீண்டகால அசேதனப் பசளைப் பாவனையில் மூழ்கியிருந்த விவசாயிகள் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பை உடனடியாக முகங்கொடுக்க முடியாமல் தடுமாறி னர். பலர் தமது தோட்டச்செய்கைகளைக் கைவிட்டனர். ஆனால் ஒருசிலரே இதனைச் சவாலாக எடுத்து மாற்றுவழி களில் முயற்சித்தனர்.
அவ்வாறு தனது சொந்த முயற்சியினால் தன்னிடம் இருந்த வளங்களைக்கொண்டு சேதனப்பசளைகளைத் தயாரித்து 'சேதனப்பசளையே போதும் எமது விவசாயத்துக்கு' என இன்றுவரை ஏனைய விவசாயிகளுக்கு முன்மாதிரியாக வெற்றிநடைபோட்டுக் கொண்டிருக்கிறார் கோப்பாய் பிரதேசப் பிரிவுக்குட்பட்ட விவசாயி கணபதிப்பிள்ளை சத்தியமூர்த்தி. அவருடன் 'சஞ்சீவி' வாசகர்களுக்காக ஒரு நேர்காணல்.

**கே: எவ்வளவு காலமாக விவசாய நடவடிக்கை களில் நீங்கள் ஈடுபட்டு வருகின்றீர்கள்?**

**ப:** கடந்த எட்டு வருடங்களாக நான் விவசாயம் தான் செய்கிறேன். விவசாயம்தான் என்னுடைய தொழில். மொத்தமாக 20 பரப்பு தோட்டக்காணி இருக்கின்றது. இந்த விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பித்தான் என் குடும்பம் உள்ளது. தோட்டத்தில் தென்னை, வாழை ஆகியவற்றை பிரதான பயிராகவும் பயறு, உளுந்து, பூசணி போன்றவற்றை ஊடுபயிராகவும் செய்கிறேன்.

**கே: ஆரம்பத்தில் இருந்தே நீங்கள் விவசாய நடவ டிக்கைகளுக்காக சேதனப் பசளையைத்தான் பயன்படுத்தி வருகிறீர்களா? அல்லது பின்னர்தான் அவ்வாறு சேதனப் பசளைக்கு மாறினீர்களா?**

**ப:** 2020 ஆம் ஆண்டுக்கு முதல் நானும் அசேதனப் பசளையைத்தான் பயன்படுத்தினேன். அப்போது அசேதனப்பசளை (யூரியா) எங்கும், எப்போதும் கிடைக்கக் கூடியமாதிரி இருந்தது. அதுவும் ஒரு மூடை 2000 ரூபாவுக்கு வாங்கலாம். ஆனால், எப்போது எங்கள் நாட்டில் கொரோ னாத் தொற்று தொடங்கியதோ அன்றுமுதல் இப்போது வரை அசேதனப் பசளையைப் பெற்றுக்கொள்வ தென்பது கடினமானதாகவே உள்ளது. முன்னர் 2000 ரூபா விற்ற யூரியா மூடையை இப்போது 15 ஆயிரம் ரூபாவுக்கு கூட வாங்கமுடியாத நிலை. இதனால் நான் கடந்த இரண்டு வருடங்களாக அசேதனப்பசளைகளுக்குப் பதிலாக சேதனப் பசளை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். அது எனக்கு வெற்றியைத்தான் கொடுத்தது அந்தநேரத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை யால் அசேதனப்பசளை தடைப்பட்டதைத் தொடர்ந்து என்னைப்போல விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்கின்றவர்கள் பெரும்சிரமப்பட்டனர்.
ஆனால், எங்கள் நாட்டில் சேதனப் பசளையை உருவாக்கக்கூடிய வளங்கள் இருக்கும்போது ஏன் நாம் அடுத்த நாட்டிலிருந்து அசேதனப்பசளையை எதிர்பார்க்க வேண்டுமென யோசித்தன் விளைவாகவே சேதனப்பசளைத் தயாரிப்பதில் ஈடுபட்டேன்.

**கே: சேதனப்பசளை தயாரிப்பது தொடர்பான தொழில்நுட்ப அறிவை எவ்வாறு, எங்கே பெற்றுக்கொண்டீர்கள்?**

**ப:** சேதனப்பசளைகளைத் தயாரிப்பது தொடர்பாக தொழில் ரீதியாக முறையாக நான் ஒன்றும் கற்றுக்கொள்ளவில்லை, நானே யூடியூப் வழி யாக வீடியோ மூலம் அவற்றைத் தயாரிப்பது தொடர் பான சில செயன்முறைகளைக் கற்று, என்னிடம் இருக்கும் மூலப்பொருட்களைக்கொண்டு சேதனப்பச ளைகளைத் தயாரித்து பயிர்ச்செய்கைகளின் போது பயன்படுத்தி வருகின்றேன்.
நான் சேதனப்பசளையாக பல்வேறு விதமான பொருட் களைப் பயன்படுத்துகிறேன். நெல்லை விதைப்பதற்கு முதற் கட்டமாக அந்நிலத்தில் பயறை விதைத்து 60 - 0 கிலோவை அறுவடை செய்வேன். அந்தப் பயறு இரண்டாம் கட்டமாக பூக்கத் தொடங்கியதும், உழவு மிசினைக் கொண்டு எல்லாவற்றையும் மடக்கி உழுத பின்னர் அது பசளையாக அந்த மண்ணில் இருக்கும். அந்தப் பயறின் கழிவை நிலப்பசளையாகப் பாவிப் பாம். ஏனென்றால் பயறின் வேர் முடிச்சுகளிலும், இலை முடிச்சுகளிலும் நைட்ரஜன் உள்ளது.
இந்தச்செயன்முறை மூலம் பயிருக்கு கொடுக்கப்பட வேண்டிய பிரதானமாக தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து என ஒவ்வொரு வகையான நுண்ணூட்டங்களையும் என்னால் கொடுக்கக்கூடியதாக உள்ளது. இதை விட பயிருக்குக் கொடுக்கவேண்டிய 18 வகை நுண்ணூட்டங்கள் உண்டு. இவ்வா றான நுண்ணூட்டங்களைப் பெறுவதற் காக குறிப்பாக போரான் சத்துக்காக (அதிகளவான மழை பெய்கின்றபோது பயிர்களின் வேர்களில் ஏற்படும் பங்கசு களை நீக்கி, பாதிப்புக்களை நீக்கி அந்தப் பயிர்களுக்கு புத்தூக்கிகளைக் கொடுப் பது போரான் சத்து) இயற்கையாகக் கிடைக்கக்கூடிய எருக்கலைத் தாவரத்தின் இலையைத் துண்டுதுண்டாக வெட்டி ஐந்து நாள் பரலுக்குள் ஊறவிட்டுக் கிடைக்கின்ற சத்து நீரை வயலுக்குப் பாய்ச்சுவேன்.



பயிர்கள் வளர்ந்து வரும்போது ஐந்து நாளைக்கு ஒரு முறை கட்டம் கட்டமாக இயற்கைப் பசளை போடுவேன். மணிச்சத்து, சாம்பல் சத்து பயிர்களுக்கு கிடைப்பதற்காக வாழைச்சருகுகளை ஒன்றாகக் குவித்து ,அதற்கு தண் ணீர் பாய்ச்சி ,அதன் மேல் பொலித்தீனை மூடி அதற்கி டையில் மாட்டெரு, ஆட்டெரு, கோழியெரு என்பவற்றைப் போட்டு தண்ணீர் பாய்ச்சி, மூடி உக்க வைத்து, இயற் கையான முறையில் நிலத்துக்கு அடிப்பசளையைத் தயாரித்துப் பயன்படுத்துவேன். அந்தப்பசளை வழியாகப் பயிர்களுக்குப் பொட்டாசியம் கிடைக்கும்போது அங்கு அதிகளவான விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கே: அப்படியானால் உங்கள் சேதனப்பசளைத் தயாரிப்புக்கான மூலப்பொருள்களை உங் கள் தோட்டத்திலேயே பெற்றுக்கொள்கி றீர்கள். அவை போதுமானவையா?**

**ப:** ஆம். நான் என் தோட்டத்தில இந்தமுறை நட்ட 5000 வாழைக்கன்றுகளில் சுமார் 4000 வாழை கள் மண்டூஸ் புயலால் பாதிக்கப்பட்டன. அவ்வாறு முறிந்த பிஞ்சு வாழைக்குலைகள் , இலைகள், தண்டுகள் என எல்லா வற்றையும் நான் என்னுடைய சேதனப்பசளைத் தயாரிப்புக் காகப் பயன்படுத்தி வருகிறேன். நெல்லை விதைக்க முதல் அந்த நெல்லை விதை நேர்த்தி செய்வேன். அதாவது உப் பைக் கரைத்து செறிவாக்கிய தண்ணீருக்குள் நெல்லைக் கொட்டினால் சத்தற்ற நெற் கதிர்கள் தண்ணீரின் மேல் மிதக் கும் அவ்வாறு மிதக்கும் நெல்லை வடிகட்டி அகற்றிவிட்டு அந்தப் பாத்திரத்துக்குள் அமிழும் நெல்லை சத்துகள் நிறைந்த 'பஞ்சகவ்வியம்' எனச் சொல்லப்படும் மாட்டினுடைய பால், தயிர், நெய், சாணம், சலம் ஆகிய ஐந்து வகையான பொருட்களைக்கொண்டு செய்யப்பட்ட கரைசலினுள் நுண் ணங்கிப் பெருக்கத்துக்காக சிறிதளவு வாழைப்பழமும் சேர்த்து, மூன்று நான்கு தடவைகள் கழுவிவிட்டு விதைக் காகப் பயன்படுத்துறேன்.
சேதனப் பசளையைப் பயன்ப டுத்தி செய்யப்பட்ட பயிர்கள் பச் சைப் பசேலெனவும் அசேதனப் பசளையைப் பயன்படுத்தி செய் யப்படுகின்ற பயிர்கள் மஞ்சள் நிறத் தன்மையுடனான பச்சை நிறமாகத் தோற்றமளிப்பதைக் காணலாம். பயிர்களுக்கு நைட்ர ஜன் செறிவைக் கூட்டுவதற்காக ஜீவாமிர்தம், பஞ்சகவ்வியம், மீன மிலம் (மீன்களது கழிவுகள், குஞ் சுமீன்கள் என்பவற்றின் பயிர்க ளுக்கு அயன், கல்சியம் சத்துக் களை வழங்குவதற்காக செய்யப் படும் கரைசல்) என்பவற்றை ஓர ளவு பெரிய மட்பாண்டத்தினுள், ஆவரம் பூக்களையும் போட்டு தயாரிக்கப்படும் கரைசல் ஐம்பது கிலோ யூரியாவுக்குச் சம மானது. மேலும், 10 கிலோ வாழைப்பழம், 10 கிலோ தக்காளிப் பழம், 10 கிலோ பூசணிக்காய், சர்க்கரை என்பவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பீப்பாவுக்குள் ஊறவிட்டு அதன் விளை வாகக் கிடைக்கும் சாற்றினை மழைநீரோடு சேர்த்து வயலுக் குள் பாய்ச்சுவேன் அல்லது தண்ணீர் இறைக்கும் போதும் இப்பதார்த்தத்தினை தண்ணீரோடு சேர்த்து வயலுக்குள் பாய்ச்சுவேன்.
மாட்டுச் சாணத்தினை ஒருவருடத்துக்குச் சேமித்து வைத்து, நோய்ப் பீடைத்தாக்கங்களால் பயிர்கள் பாதிக்கப்படும்போது, பயிர்களின் மேல் தெளிப்பதன் மூலம் பயிர்களுக்கு ஏற்படும் நோய்த்தொற்றுக்களைத் தவிர்த்து வருகிறேன். தேமோர் கரைசல் (தேங்காய் பால், தயிர், இளநீர் போன்றவற்றை பாத் திரத்தினுள் வைத்து மூடி 21 நாட்கள் புளிக்க வைத்து தயாரித்த கரைசலைப் பயிர்கள் பூத்து காய்க்கின்ற பருவத்தில் பயன்ப டுத்துவேன்.) இஞ்சி, வேப்பங்கொட்டை, கள்ளி தாவரச்சாறு கள் போன்றனவும் சேதனப்பசளையாகவும் பூச்சி விரட்டி யாகவும், பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுத்துவதுண்டு.

**கே: நீங்கள் சேதனப்பசளைத் தயாரிப்பு மற்றும் பாவனையின்போது எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்கிறீர்கள்;?**

**ப:** அசேதனப்பசளையை அரைமணி நேரத்தில் தூவி விட்டுச் சென்றுவிடலாம். ஆனால் சேதனப் பச ளையை ஒருதடவை பயிர்களுக்கு அடிப்பதற்கு இரண்டு மணித்தியாலத்தை செலவிடவேண்டியிருக்கும். இவ்வாறு ஐந்து நாட்களுக்கு ஒருமுறை சேதனப்பசளையை பயிர்க ளுக்கு அடிக்க வேண்டியிருக்கும். பொதுவாக சேதனப்பச ளையைத் தயாரிக்கும்போது உற்பத்திச் செலவு அதிகரிக்கி றது. ஆனால் அதனைத் தயாரிப்பதற்கான ஊர் மாடு, கோழி போன்ற வளங்கள் எங்களிடமே இருந்தால் செலவு குறையும். இயற்கை விவசாயத்துக்குப் பிரதானமானது ஊர் மாடு. ஏனென்றால் ஜேசி போன்ற மாடுகளுக்கு மாஸ் வைத்து வளர்ப்பார்கள் . இதனால் அவற்றின் பால், சாணம், சலத்தில் சரியான நுண்ணூட்டச் சத்துக்கள் இருக்காது. ஆனால், ஊர் மாடுகள் மேய்ச்சல் நிலங்களில் எல்லா வகையான புல்லினங்களையும் மேய் கின்றபோது அந்தமாடுகளின் சாணம், சலம், பாலில் நுண்ணூட்டச் சத்துக்கள் ஒப்பீட்டளவில் ஜேசி மாடுகளை விடவும் அதிகமாகவே காணப்படும்.
இயற்கைப் பசளையைப் பயன்படுத்துவ தில் ஒரு சிக்கலும் உண்டு. சாணத்தில் புல்லுக் கொட்டைகளும் சேர்வதால் பயிர் களுக்கு நடுவில் புல்லுச் செடிகள் முளைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமா கவே உள்ளன. அவ்வாறு முளைக்கும் செடிகளைத் தனியாக பிடுங்கும் போது செலவும் நேரவிரயமும் ஏற்படும். அத்து டன் சேதனக்கரைசல் சுவா சிக்கக்கூட முடியாத அளவுக்கு நாற்றமடிக்கும். எனவே அதற்கேற்றவகையான ஆடைக ளைப் போட்டுக்கொண்டே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஆனாலும் அவை தான் பயிர்களுக்கு நல்ல ஊட்டத்தைக் கொடுக்கும். இயற்கை விவசாயத்துக்கான மூலப்பொருட்களில் சில கட்டுப்பாடுகளும் உள்ளன. நாட்டுச்சக்கரையைப் பெறுவதென் பது கஷ்டம் தான். ஆனால் இருக்கும் வளத்தை வைத்துக்கொண்டு சேதனப்பசளை தயாரிக்கலாம். விவசாயிகள் காலப்போக்கில் தங்களது நேரச்சுகத் துக்காக அசேதனப்பசளையைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். எமது முன்னோர்கள் விவசா யத்துக்கு சேதனப் பசளையைத்தான் பயன்படுத்தி னார்கள். அந்தப்பயிர்கள் இரசாயனக் கலவைக ளின்றிய, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த, ஆரோக்கிய மான விளைச்சல்களை மக்களுக்குக் கொடுத்தன. அவற்றைச் சமைத்துண்ட மக்கள் உடல் ஆரோக்கி யத்துடன் நீண்டகாலம் வாழ்ந்தார்கள்.
அந்தக்காலத்தில் மாட்டுச்சாணத்தில் மெழுகிய வீட் டில் படுத்தெழும்பியவர்கள், நோய்நொடிகள் இல்லா மல் வாழ்ந்தார்கள். எப்போது நாங்கள் விவசாயத் தில அதிகம் அசேதனப்பசளையைப் பயன்படுத்தத் தொடங்கினமோ அன்றுமுதல் மனிதகுலத்துக்கு பிடித்தது பீடை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## கோப்பாய் ஆசிரிய கலாசாலை தைப்பொங்கல் விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 15

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தைப்பொங்கல் விழா, கலாசாலை நுண்கலை மன்ற ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை முற்றத்தில் நடைபெற வுள்ளது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலை மையில் நடைபெறும் விழாவில் பிர தம விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசி ரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பெருந்தலைவருமாகிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை கலாசாலையில் அமைந் துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆல யத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு பொங்கல் வழிபாடு நடைபெறும் என்றும் கலாசாலை அதிபர் அறிவித் துள்ளார். (ஓ-14)

## சத்திய சாயி சேவா நிலைய தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 15

திருநெல்வேலி சத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் தைப்பொங் கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத னைத் தொடர்ந்து ஆண்டுப் பொதுக் கூட்டம், வேதபாராயணம், விசேட பஜனை, மங்களாராத்தி என்பன இடம் பெறும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஓ-14,66)

## இரத்தினக்கல், தங்க ஆபரண ஒருநாள் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 15

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதி காரசபையானது யாழ்.மாவட்டத்தில் உள்ள இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண விற்பனை நிலையங்கள், தங்க ஆபரண வியாபாரிகள் என்போ ருக்கான 2023/2024 ஆம் ஆண் டுக்கான அனுமதிப்பத்திரத்தையும் பதி வுச்சான்றிதழையும் வழங்குவதற்காக ஒருநாள் நடமாடும் சேவையை எதிர் வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யாழ்.வணிகர் கழ கப் பணிமனையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. (ஓ-14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ பா. துவாரகன்

# மருத்துவர் கிறீனிடம் காணப்பட்ட பன்மைத்துவம்

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 16

## சில குறிப்புக்கள்

யாழ்ப்பாணத்தில் பத்து ஆண்டுகள் மிஷன் பணியை நிறைவு செய்த மருத்துவர் கிறீன் அமெரிக்காவுக்குத் திரும்பியமையை 1858. 07.24 அன்று வெளிவந்த நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை கிறீன் இந்தியாவிலிருந்து திரும்பியதாகச் செய்தி வெளியிட்டது என்று கடந்தவாரம் பார்த்தோம். யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவரை இந்தியாவிலிருந்து திரும்பியதாகப் பத்திரிகை குறிப்பிட்டதற்குப் பல காரணங்கள் உண்டு.

யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கென்று அமெரிக்க மருத்துவ மிஷனரிகள் தமது மிஷன் பயணத்தை ஆரம்பிக்கவில்லை. அமெரிக்க மருத்துவ மிஷனரிகள் இந்தியாவுக்குத்தான் வந்தார்கள். ஆனால் அவர்கள் இந்தியாவில் செயற்படுவதற்கு கிழக்கிந்தியக் கம்பனி ஆரம்பத்தில் அனுமதிக்காததால் அருகேயிருந்த யாழ்ப்பாணத்துக்கு வந்து மிஷன் பணியாற்றினர்.

அன்று ஈழமும்(Ceylon), இந்தியாவும் சூரியன் மறையாத பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தன; ஈழம் என்பது இந்தியப் பெருநிலப்பரப்பின் ஓர் அங்கமாக பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆட்சி நிருவாகத்துக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது. தற்போதும் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க இலங்கை மிஷன் (American Ceylon Mission) தென்னிந்தியத் திருச்சபையின் (Church of South India) நிருவாகத்தின் கீழேயே இயங்கி வருகிறது. யாழ்ப்பாணம் என்பது இந்திய கலாசாரத்துக்கும் செல்வாக்குக்கும் உட்பட்ட நிலம். எனவே மேற்கூறிய காரணங்களால் யாழ்ப்பாணத்தில் 11 வருடங்கள் மருத்துவராகக் கடமையாற்றி அமெரிக்கா சென்றவரை இந்தியாவிலிருந்து சென்றார் என்று நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டிருக்கலாம்.




மருத்துவர் கிறீனிடம் பயின்ற 1ஆவது மற்றும் 2ஆவது அணி மாணவர்களிற் சிலர்

### கிறீனிடம் மிளிர்ந்த சான்றாண்மை


மருத்துவர் கிறீன் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த போது யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவ முறையே மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது. மேலைத்தேச மருத்துவத்தை அறிமுகப்படுத்த வந்த கிறீன் யாழ்ப்பாணத்தில் பன்னெடுங்காலமாக மருத்துவப் பணி செய்து வந்த சித்தமருத்துவர்களைப் பற்றியும், அவர்களது மருத்துவமுறையைப் (உள்நாட்டு வைத்தியம்) பற்றியும் பின்வரும் கருத்தைக் கொண்டிருந்தார்.


"மேலைத்தேச ஆங்கில மருத்துவத்தைப் பரப்புவதற்கு வருகின்ற மருத்துவ மிஷனரிகள் உள்நாட்டில் பின்பற்றப்படும் கீழைத்தேச வைத்தியமுறையைப்பற்றி ஆராய்தல் வேண்டும். அத்துடன் சுதேச வைத்தியர்களையும் (Native Physicians) அறிந்திருத்தல் வேண்டும். அவர்களுடன் நல்லுறவைக் கொண்டிருப்பதுடன் தேவைப்படும் போது ஆலோசனை செய்தல் வேண்டும். சுதேச வைத்தியர்களுடன் வெளிப்படையான தொடர்பாடலைப் பேணுவதுடன் தாராளமனதுடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் வேண்டும். இவ்வாறு சுதேச வைத்தியர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளும் போது மருத்துவ மிஷனரிகள் தாம் உயர்வானவர்கள் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்காமல் சுதேச வைத்தியவர்கள் தங்களது மருத்துவமுறையையும் அனுபவத்தையும் பகிரும் போது பொறுமையாகக் கேட்க வேண்டும்.

கிறீன் சுதேச மருத்துவர்களுக்கும் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் கொடுத்த உயர்ந்த இடத்தை. முக்கியத்துவத்தை அவரது மொழிபெயர்ப்பு நூல்களில் வழங்கிய சொற்கள் மூலமும் அறிந்து கொள்ளலாம். கிறீன் 1872 இல் மொழிபெயர்த்து வெளியிட்ட 'மனுஷவங்காதிபாதம்' நூலின் தமிழ் மொழிபெயர்ப்பில் வைத்தியர் என்ற சொல்லுக்குப் பதிலாக பண்டிதர் என்ற பதத்தை வழங்கியதை இங்கே பார்க்கலாம். "மனுஷவங்காதிபாதம்: இது கிறே, ஓர்ணர், ஸ்மிது, வில்சன் என்ற பண்டிதருடைய நூல்களிலிருந்து தனல் வி சப்மன் வைத்தியனால் மொழிபெயர்க்கப்பட்டு அமெரிக்க லங்கை மிஷனைச் சேர்ந்த சமுல் பி கிறீன் வைத்தியனால் நடத்தித் திருத்தப்பட்டது" கிறீன் ஆங்கில மருத்துவ நூலாசிரியர்களை பண்டிதர் என்றும் தன்னை வைத்தியன் என்று குறிப்பிடுவதும் நோக்கற்பாலது.

கிறிஸ்தவத்தை, கிறிஸ்துவினது நற்செய்தியை எடுத்துச் சென்று கீழைத்தேசத்தில் அறிவிக்க வேண்டும் என்பது அமெரிக்க மிஷனரிகளது நோக்காக இருந்த போதிலும் பிற இனத்தவர்களது கலாசாரங்களை மதிக்கும் பண்பும் ஏற்றுக்கொள்ளும் தாராள மனப்பான்மையும் கல்வியை, மருத்துவ அறிவியலை அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உயர் மனப்பாங்கும் 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மருத்துவ மிஷனரியான கிறீனிடம் காணப்பட்டது.

மேனாட்டவர்களின் வருகையின் பின் நமது நாட்டவர்களின் நடையுடை பாவனைகள் மாற்றமடைந்தன. தேசிய உணர்வு அற்றவர்களாக மேனாட்டவர்களைப் பின்பற்றும் தமிழர்களின் நிலை கண்டு வருந்திய அமெரிக்கரான கிறீனது உள்ளக் கிடக்கை பின்வருமாறு இருந்தது. "வேட்டி காற்சட்டையாகவும், சால்வை மேற்சட்டையாகவும் தலைப்பாகை தொப்பியாகவும் தாவரபோசனம் மாமிச போசனமாகவும் குடிசை வீடாகவும் மாறுவதாகவே நான் கருதுகின்றேன். கிறித்துவர்களாகாமல் தேசியத்தை இழப்பவர்களையே நான் காண்கின்றேன். ஐரோப்பியர்களின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றும் இந்துக்களைக் காண்பதிலும் கிறித்துவ இந்துக்களைக் காணவே விரும்புகின்றேன்."




### கிறீன் தமிழில் மருத்துவம் கற்பித்தமைக்கான காரணம்!

கிறீன் 1848 ஆம் ஆண்டு மானிப்பாயில் மேலைத்தேச மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்த போது ஆங்கிலமே போதனா மொழியாக இருந்தது. கிறீன் தமிழிற் புலமை பெற்று மருத்துவக் கலைச் சொற்களை உருவாக்கியும் ஆங்கில மருத்துவ நூல்களை மொழிபெயர்த்தும் வந்தார். இருப்பினும் 10 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலமே போதனா மொழியாக இருந்தது. 1855 ஆண்டளவில் மாணவர்கள் தமிழில் குறிப்புக்களை எடுக்க ஆரம்பித்தபோதும் தமிழ் போதனா மொழியாகவில்லை. மேலைத்தேச மருத்துவத்தின் நன்மையை எல்லா மக்களும் அனுபவிக்க வேண்டும். என்று விரும்பிய கிறீன் தமிழிலே மருத்துவத்தை கற்பிக்க விரும்பினார். கிறீனது விருப்பம் இவ்வாறிருந்தது:

"நோயுற்றவரிடமிருந்து அழைப்பு வரும்போது குதிரையையும் வண்டியையும் எதிர்பாராமல் அதிகம் பணத்தை நினையாமல் தேசிய உடையில் கால்நடையாகச் சென்று சேவைசெய்வதற்கு உடன்படும் வைத்தியர்களை உருவாக்கலாமென நான் எதிர்பார்க்கின்றேன். "

ஆங்கில மொழி மூலம் கிறீனிடம் படித்து மருத்துவர்களானவர்கள் கிராமத்தை விட்டு விலகி . தூர இடங்களுக்கு அரசாங்க மருத்துவர்களாகச் சென்றனர். சிலர் மருத்துவசேவையையே விட்டு விலகி பிரித்தானிய சிவில் சேவையிலும் இணைந்து கொண்டனர். இவ்வாறு அதிக ஊதியம் கருதி தனது மாணவர்கள் அரச உத்தியோகத்தை நாடி வெளியிடங்களுக்குச் செல்வதும் மருத்துவத் தொழிலை விட்டு விலகி அரச உத்தியோகத்தை நாடுவதும். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் கிறீனுக்குக் கவலையை ஏற்படுத்தியது. இதனால் கிறீன் போதனா மொழியாகத் தமிழை மாற்ற விரும்பினார். கிறீனிடம் மருத்துவம் பயின்ற 4 ஆவது அணி (1855 - 1858) மாணவர்களுக்குத் தமிழ்மொழி மூலம் ஆங்கில மருத்துவத்தைக் கற்பதில் ஆர்வம் இருக்கவில்லை. மேலும் அவர்கள் அதிக ஊதியம் கிடைக்கும் தொழிலையே விரும்பினர். மாணவர்களிடம் காணப்பட்ட சலனத்தை உணர்ந்து. அவர்களுக்கு 10 நாட்கள் விடுமுறை அளித்து. தாம் மருத்துவர்களாக விரும்புகிறார்களா அல்லது வேறு தொழிலுக்குச் செல்ல விரும்புகிறார்களா என்பதையிட்டு ஒரு தீர்மானத்துக்கு வருமாறு கேட்டுக் கொண்டார். விடுமுறையின் பின் மாணவர்கள் மருத்துவத் தொழிலைத் தொடரச் சம்மதம் தெரிவித்தனர். கிறீன் ஆங்கிலமொழி மூலம் போதனையைத் தொடர்ந்தார்.

### 1859 இல் நிதிசேகரித்த மருத்துவர் கிறீனும் 2021 இல் நிதி வழங்கிய பேராசிரியர் ஜீவேந்திரா மார்ட்டினும்

1858 இல் அமெரிக்கா திரும்பிய கிறீன் மானிப்பாயிலிருந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும் மொழிபெயர்த்த மருத்துவ நூல்களை அச்சிடவும் ஏற்படும் செலவுகளுக்காக 1000 அமெரிக்க டொலரைத் திரட்டுவதற்கு விரும்பி விண்ணப்பக் கடிதம் ஒன்றைத் தயாரித்தார். 1859 இல் இதனை அச்சடித்து அதன் பிரதிகளை அமெரிக்காவிலிருக்கும் தாரளமனம் படைத்த தனவந்தர்களிடம் சேர்ப்பித்தார். கிறீனது இந்த விண்ணப்பக் கடிதத்திலே அமெரிக்காவிலிருந்த முன்னணிப் பேராசிரியர்களும் சத்திரசிகிச்சை வல்லுநர்களும் மதகுருமாரும் கையொப்பமிட்டிருந்தனர். போஸ்ரனிலும் நியூயோர்க்கிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கிறீனோடு தொடர்புடைய யாழ்ப்பாண மருத்துவ வரலாற்றில் ஏறத்தாழ 160 வருடங்களுக்குப் பின்னர் இதே போன்ற ஒரு நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து அமெரிக்காவில் வசிப்பவரும் ஹாவர்ட் மருத்துவக் கல்லூரியின் உணர்வழியியல் பேராசிரியருமான (Professor of Anaesthesia) மருத்துவர் ஜீவேந்திரா மார்ட்டின், M.D. அவர்கள் 2019 ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். கிறீனது மொழிபெயர்ப்பு நூல்களின் மூல அச்சுப் பிரதிகளைப் பார்வையிடுதற்காக யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அவர்கள் பேராசிரியர் மார்ட்டினுடன் என்னையும் வட்டுக்கோட்டையிலிருந்த ஆயர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். நூறு வருடங்களுக்கு முன் கிறீன் மொழிபெயர்த்த மருத்துவ நூல்களின் அச்சுப் பிரதிகளின் நகல்களை நாம் மீள நூலாக்கியிருந்தோம். இவற்றின் ஒரு தொகுதியை 2021 இல் அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தமைக்காக பேராசிரியர் மார்ட்டின் அவர்கள் யாழ்.போதனா மருத்துவமனையிலமைந்துள்ள மருத்துவ அருங்காட்சியக அபிவிருத்திக்காக 1000 அமெரிக்க டொலரை அன்பளிப்பாக சருவதேச மருத்துவக்குழு (IMHOUSA) ஊடாக வழங்கியிருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்கோணல் கடவுள்

○ இராகவன்



4

இந்தப் பிரச்சினையை நீங்கள் மேலுலகத்துக்குக் கொண்டுபோய் நியாயம் கேட்க முயற்சிக்கவில்லையா? என்று அவரிடம் மிக மெதுவாகக் கேட்டேன். பதிலேதும் வராததால் திரும்பிப் பார்த்தேன். அவர் மாயமாகிவிட்டிருந்தார். அவர் மட்டுமன்றி என்னைச் சுற்றித் தோன்றியதெல்லாமே மாயமாகிவிட்டிருந்தன. சட்டென்று என் திணிவு குறைந்து ஒரு காகிதம் போலாகிவிட்டேன். அப்போது சுழன்றடித்த காற்றில் மேலெழுந்து சுழன்று மிதந்து செல்லத் தொடங்கினேன். உண்மையில் அதுவொரு சுக அனுபவமாக இருந்தது. அது மிகக் குறைவான காலமே நீடித்தது. ஓரிடத்தில் பெருந்தீ மூண்டெரிய நான் அதை நோக்கித் தள்ளப்பட்டேன். இத்தோடு என் கதை முடிந்தது என கண்களை இறுக மூடிக் கொண்டேன். ஆனால், மறுகணமே பிறிதொரு சுழற்காற்றால் இடைமறித்துத் தள்ளப்பட்டேன். இப்போது நான் மிதந்து போய்க்கொண்டிருந்த இடத்தில் சிறுவர்கள் குழுமிநின்று 'ஆட்பட்டம் ஆட்பட்டம்' என என்னை அண்ணாந்து பார்த்து ஆரவாரம் செய்தனர்.

நான் அச்சொட்டாக அவர்களுக்கு மத்தியில் விழுந்துவிட்டேன். அவர்கள் பலத்த ஆரவாரத்தோடு என்னைத்தூக்கிக்கொண்டு மைதானத்தைச்சுற்றி வந்தனர். இப்போது சட்டென்று நான் பழைய நிலையடைந்து திரும்பவும் குதிரையில் போய்க்கொண்டிருந்தேன். சிறிது தூரங்கடந்த பின் பிரதான வீதி இரண்டாகப்பிரிந்தது.

நான் குதிரையை வலதுபுறம் திருப்ப வேண்டுமெனத் தீர்மானித்தேன். ஆனால் அது இடதுபுறந்திருப்பிவிட்டது. என்னதான் நடக்கிறதென்று பார்க்கலாம் என்று எண்ணித் தொடர்ந்து எதுவும் செய்யாமல் அதன் போக்கிலேயே விட்டுவிட்டேன். இன்னும் சற்றும் தூரம் கடந்த பின் ஒரு பெண் வீதியின் நடுவே நின்று கைகாட்டிக் குதிரையை மறித்தாள். குதிரை நிற்காதென நினைத்தேன். ஆனால் நின்றுவிட்டது. அவள் என் பின்னே பாய்ந்து ஏறிக்கொண்டாள். குதிரை மிதமான வேகத்துடன் புறப்பட்டது. அந்தப்பெண்ணிலிருந்து இஞ்சிவாசனை கமழ்ந்து கொண்டிருந்தது. அவள் தனக்கும் எனக்கும் இடையே ஒரு தலையணையை வைத்திருந்ததை உணர்ந்தேன். அந்தப்பெண்ணை சரியாகக் கவனிக்காததால் வசீகரமான முக அமைப்பைக் கொண்டிருக்கிறாளா? எனப் பார்த்து விடலாம் என தலையைத் திருப்பிப் பார்க்க முயன்றேன். ஆனால் தலையைத் திருப்ப முடியவில்லை. 'என்ன எனது முகத்தைப் பார்க்க வேண்டுமா?' என்றவள் பின்னிருந்து குசுகுசுத்தாள். நான் மெதுவாக தலையசைத்தேன். 'ம்.... இந்தா பார்த்துக்கொள்' என ஏதோவொன்றை முன்நோக்கி நீட்டினாள். அது ஒரு பாஸ்போட்சைஸ் போட்டோ. அதில் என் அபிமான நடிகை இரட்டைப் பின்னலை முன்னால் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள். நானதை அவளிடமே திருப்பிக் கொடுத்தேன். 'நான் எப்படிப் போட்டோவில் அழகாக இருக்கிறேனா?' எனக்கேட்டாள். 'நான் போட்டோவில் பார்த்தது என் அபிமான நடிகையை' என்றேன்.' ஓ! நீ எனது பரமரசிகனா? மிக்க மகிழ்ச்சி' எனச்சிரித்தவள் இப்போது என்னை நோக்கியபடி அமர்ந்திருந்தாள். சந்தேகத்துக்கு இடமில்லை. போட்டோவில் இரட்டைப்பின்னலை முன்னால் விட்டுச் சிரித்துக் கொண்டு இருந்தது அவளே தான். ஆனால் நான் அவளை என் அபிமான நடிகை என்று நம்பவில்லை. 'போட்டோவிலிருப்பது நீ தான். அது எனது அபிமான நடிகையின் போட்டோ தான். ஆனால் நீ என் அபிமான நடிகை இல்லை' என்றேன்."எனக்குத்தெரியும் நீ இப்பிடித்தான் சொல்வாய் என்று. நான் உனது அபிமான நடிகையென உறுதிப்படுத்திக் கொள்ள நீ ஏதாவது கேள்விகளைக் கேட்கலாம்' என்று சொன்னாள்.

'நீ கதாநாயகியாக அறிமுகமான திரைப்படம் எது? எனக்கேட்டேன். 'நீ பார்த்த நான் நடித்த முதல் படம் தான் நான் கதாநாயகியாக அறிமுகமான முதல் திரைப்படம்' என்றாள். 'நீ மார்புக்கச்சை அணியாமல் நடித்த திரைப்படம் எது? என அடுத்துக் கேட்டேன். 'நான் நடித்த எந்தப்படத்தை நீ மார்புக்கச்சையை நான் அணிந்திருக்கவில்லை எனக் கருதிப் பார்த்து இரசித்தாயோ அதுவே நான் மார்புக்கச்சை அணியாமல் நடித்த திரைப்படமாகும்' என பதிலளித்து விட்டுச்சிரித்தாள். எனக்குத் தொடர்ந்தும் அவளைக்கேள்வி கேட்கத் தோன்றவில்லை. அதைவிடத்தொடர்ந்து கேட்பதற்கு என்னிடம் கேள்விகளும் இருக்கவில்லை. அவள் இப்போது எனக்குப்பின்னால் இருந்தாள். 'நான் அடுத்ததாக நடிக்கவுள்ள திரைப்படத்தின் பெயரென்ன தெரியுமா? 'எனக்கேட்டாள். நான், 'தெரியாது' என்றேன். 'என்னப்பா எனது தீவிர ரசிகன் என்று சொல்கிறாய். என்னைப்பற்றிய தகவல்களை விரல் நுனியில் வைத்திருக்க வேண்டாமோ?' என்று சொல்லி கோழி கேருவதைப் போலச் சிரித்தாள். 'மன்னிக்கவும்! கடந்த சில நாள்களாய் திரையுலகத் தகவல்களைப் பெற அவகாசம் கிடைக்கவில்லை' என்றேன். "ம்..... பரவாயில்லை. என் வாயால் தான் அதை நீ கேட்டறிய வேண்டுமென விதியிருந்தால் அதை மாற்ற யாரால் முடியும்? சொல்கிறேன் கேள். நான் அடுத்ததாக நடிக்கவிருக்கும் திரைபடத்தின் பெயர் 'ஒரு நடிகை ஒரு ரசிகன்' எப்படியிருக்கு?" என்றாள். 'மிகச் சிறப்பு' என்றேன். " இது ஒரு நடிகைக்கும் ரசிகனுக்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றியது. இதிலே எனது தீவிர ரசிகன் ஒருவனை நடிக்க வைக்க இயக்குநர் விரும்புகிறார்.

அந்த ரசிகனைத் தேடித்தான் போய்க்கொண்டிருக்கிறேன். இத்திரைப்படத்தில் நீ நடிக்க விரும்பினால் நடிக்கலாம். என்ன நடிக்கிறாயா? அரிய வாய்ப்பைத் தவறவிடாதே. பின்னர் மன வருத்தப்படுவாய்" என்றாள். அதைக்கேட்டு நான் சிரித்து விட்டேன். இன்னமும் குதிரையில் தான் போய்க்கொண்டிருந்தோம். அவளுக்கு நான் சிரித்ததும் கோபம் வந்துவிட்டது. 'ஏன் சிரித்தாய்?' எனக்கேட்டாள். 'நான் இதுவரை திரைப்படத்தில் நடிப்பதாகக் கனவுகூடக் கண்டதில்லை. மற்றது நான் ஆரம்பித்திலேயே உன்னை எனது அபிமான நடிகையென நம்பவில்லை எனச்சொல்லிவிட்டேன். இவ்விரு காரணங்களினாலுமே சிரித்தேன். இதில் உள்நோக்கம் ஏதும் இல்லை.' எனச் சொன்னேன்.

இப்போது அவள் சிரித்தாள். நான் அதற்கென்ன காரணமெனக் கேட்கவில்லை. அவளே சொன்னாள்'இவ்வளவு நேரமும் நீ அந்த்திரைப்படத்தில் தான் என்னுடன் நடித்துக்கொண்டிருந்தாய். ஒத்துழைப்புக்கு மிக்க நன்றி' 'நான் எழுதிய திரைக்கதையில் இந்தக்காட்சி இடம்பெறவில்லையே' எனக் குதிரை தலையைச்சிலிர்த்துக்கொண்டே சொல்லியதும் அவள் என்னிடம் ' உனக்கு இவரை அறிமுகப்படுத்த மறந்துவிட்டேன். இவர்தான் இந்தத்திரைப்படத்தின் இயக்குநர். படப்பிடிப்புக்கு உடனடியாகக் குதிரை கிடைக்காததால் இவர் குதிரை வேடமேற்று நடிக்கிறார்' என்றாள்.

இப்போது குதிரை ஹெலிகொப்டராக மாறிப் பறக்கத் தொடங்கியது.' இது உண்மையில் ஹெலிகொப்டர் தானா? அல்லது யாராவது ஹெலிகொப்டராக நடித்துக் கொண்டிருக்கறாரா?' என்று அவளிடம் கேட்டேன். 'உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் கதைப்படி குதிரை ஹெலிகொப்டராக மாறுவதற்கான ஏற்பாடு எதுவும் இல்லை' என்றாள். 'தவிர்க்க முடியாத சில காரணங்களால், திரைக்கதையில் இதுபோன்ற சில அதிரடியான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றேன்' என்று ஒரு குரல் கேட்டது. அது இயக்குநரின் குரல் தான். அவர் தான் ஹெலிகொப்டரை இயக்கிக் கொண்டிருந்தார். 'உங்களுக்கு ஹெலிகொப்டரும் இயக்கத் தெரியுமா? எனக்குச் சொல்லவே இல்லையே? 'என்று அவள் கிசுகிசுத்தாள். அவள் இயக்குநருக்குப் பக்கத்தில் தான் இருந்தாள், நான் இவர்களுக்குப் பின்னால் இருந்தேன. 'இயக்குநர் என்றால் மாட்டு வண்டில் மட்டுமல்ல எல்லா வாகனங்களையும் இயக்கத் தெரிந்திருக்க வேண்டும். இயக்கத் தெரிந்திருந்தால் தான் அவரை இயக்குநர் என்று அழைக்கலாம் 'என்று இயக்குநர் கீச்சுக் குரலில் அவளுக்குப் பதிலளித்ததைக் கேட்டதும், எனக்குச் சிரிப்பு வந்தது.

திரைக்கதைப்படி இந்தக் காட்சியில், எனக்குச் சிரிக்க அனுமதி உண்டா என்பது தெரியாததால் சிரிப்பை அடக்கிக் கொண்டேன்.

'அப்போ மயக்குவதில் தேர்ந்தவரை மயக்குநர் என்று அழைக்கலாமா?' அவள் இயக்குநரிடம் கேட்டாள். அதற்கு அவர் பதில் ஏதுவும் சொல்லவில்லை. அப்போது நான் குறுக்கிட்டேன். 'மன்னிக்கவும் இந்தக் காட்சியில் நடித்துக் கொண்டிருப்பவர்களில், எவராவது சிரிப்பதற்கு அனுமதி உண்டா?' என்று கேட்டேன். 'இந்தக் காட்சியில் மட்டுமல்ல, இத் திரைப்படத்தில் இடம்பெறும் எந்தக் காட்சியிலும், நடிப்பவர்களுக்கு சிரிக்க அனுமதியில்லை' எனக் கண்டிப்பான குரலில் சொன்னார். தொடர்ந்து 'மன்னிக்கவும். இன்னும் ஒரேயொரு கேள்வி, இப்போது நாங்கள் சென்று கொண்டிருப்பது, மெய்யாகவே ஹெலிகொப்டர் தானா? அல்லது யாராவது ஹெலிகொப்டராக நடித்துக் கொண்டிருக்கிறார்களா? 'எனவும் கேட்டேன். 'நல்லதொரு கேள்வி, ஆனால் ஹெலிகொப்டர் என்று சொல்லக் கூடாது. உலங்குவானூர்தி என்றே குறிப்பிட வேண்டும். இல்லை என்றால் இத்திரைப்படத்துக் வரிவிலக்குக் கிடைக்காது என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இப்போது நாங்கள் சென்று கொண்டிருப்பது மெய்யாகவே உலங்குவானூர்தி அல்ல. இத்திரைப்படத்தில் வழமைக்கு மாறாக நான் இரட்டை வேடம் இட்டு நடிக்கின்றேன். முதல் வேடம் உலங்குவானூர்தி இயக்குநர். அடுத்த வேடம் உலங்கு வானூர்தி. எனவே இப்போது உலங்கு வானூர்தியாகப் பறந்து கொண்டிருப்பதும் நான் தான். எனக்குள்ளே தான் நீங்கள் இருவரும் நானும் அமர்ந்து போய்க்கொண்டிருக்கின்றோம். உங்களுக்கு கேள்விகளைக் கேட்க அனுமதியுண்டு. நீங்கள் இத்திரைப்படத்தில் சிரிக்கக்கூடாதே தவிர, கேள்விகளைத் தாராளமாகக் கேட்கலாம். தயங்க வேண்டியதில்லை.'

இப்போது அவள் கேட்டாள், 'நீங்கள் எனக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை மட்டும், நிவர்த்தி செய்தால் போதுமானது. முதல் காட்சியில் குதிரையாக வந்தீர்கள்? இப்போது உலங்கு வானூர்தியாகவும், இதை ஓட்டுபவராகவும் வந்திருக்கிறீர்கள். மொத்தமாக மூவேடங்களில் அல்லவா? நடிக்கின்றீர்கள்? ஆனால் இத்திரைப்படத்தில் இரு வேடங்களில் நடிப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்'

இதே கேள்வி எனக்குத் தோன்றியது. ஆனால் கேட்க மறந்து விட்டேன். நல்ல வேளை அவள் கேட்டு விட்டாள்.

'நல்லதொரு கேள்வி. நான் குதிரையாக வந்தது இத்திரைப்படத்தில் முதல் பாகமாகும். இப்போது நான் உங்களுடன் நடித்துக் கொண்டிருப்பது, இத்திரைப்படத்தில் இரண்டாம் பாகமாகும். அது தான் இரட்டை வேடம் ஏற்றிருப்பதாகச் சொன்னேன்' என்றார் சிரித்துக் கொண்டே. உலங்கு வானூர்தி இப்போது தாழப்பறந்து கொண்டிருந்தது. ஒரு கழுகு சமாந்தரமாகப் பறந்து வந்து கொண்டிருந்தது. அதன் மீது மணப்பெண் அலங்காரத்துடன், ஒருத்தி அமர்ந்து கொண்டிருந்தாள். 'யார் இது?' என்று அவள் கேட்டாள். 'சொல்ல மறந்து விட்டேன். இத்திரைப்படத்தில் இடம்பெறவிருக்கும் ஒரு பாடல் காட்சியின் பகுதி. தனது அபிமான நடிகை கழுகில் பறந்து வருவதாக கற்பனை செய்து பாடுகின்றான். இப்போது இந்தக் காட்சி இடம்பெறுகின்றது. அதில் அமர்ந்திருப்பது நீ தான். கழுகாக வருவது உனது ரசிகன் 'என்கிறார்.

'அப்போ எங்களுக்கும் இத்திரைப்படத்தில் இரட்டை வேடமா?' எனக் கேட்கிறாள்.

'இல்லை இல்லை. உனக்கு மட்டும் இத்திரைப்படத்தில் ஒரே ஒரு வேடம் தான். உனது ரசிகனுக்கு மட்டும் கழுகு, காற்றாடி, கழுதை, கிளி, வௌவால், விமானம்,எனப் பல வேடங்கள் வழங்கப்பட்டுள்ளன' என்கிறார்.

இப்போது நான் உலங்கு வானூர்தியின் வாசலுக்கு நேராக அமர்ந்திருக்கிறேன். அவள் எனக்குப் பக்கத்தில் இருக்கிறாள். அவர் எனக்கு இத்திரைப்படத்தில் பல வேடங்களை வழங்கியிருப்பது, அவளை சினத்துக்குள்ளாக்கி இருக்க வேண்டும். அதனால் சட்டென்று திரும்பி என்னை உதைத்துத் தள்ளினாள். நான் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. உலங்கு வானூர்திக்கு வெளியே தூக்கி வீசப்பட்டு, முழு வேகத்துடன் கீழிறங்கிக் கொண்டேன்.

(தொடரும்)

'நீ கதாநாயகியாக அறிமுகமான திரைப்படம் எது? எனக்கேட்டேன். 'நீ பார்த்த நான் நடித்த முதல் படம் தான் நான் கதாநாயகியாக அறிமுகமான முதல் திரைப்படம்' என்றாள். 'நீ மார்புக்கச்சை அணியாமல் நடித்த திரைப்படம் எது? என அடுத்துக் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.



**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.



**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.



**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.



**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.



**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.



**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.



**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.




# CARTIVATE MOTORS (PVT)LTD

## முதல் அதிஷ்டசாலியான வெற்றியாளரை தெரிவு செய்தனர்

Cartivate Motors (Pvt) Ltd., 2018ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாவதுடன் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்து நான்கு வருடங்களைக் கடந்து தமது வாடிக்கையாளர்களுக்காக உயர் தரத்திலான சேவைகளை வழங்கும் தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். தம் வசம் மூன்று காட்சியறைகள் இருப்பதுடன் அவற்றில் இரண்டு களுபோவில பிரதேசத்திலும் அடுத்தது பிரதேசத்திலும் கம்பனி இற்றைவரையில் உயர் தரத்திலான வாகன விற்பனையூடாக விசேட இடத்தைப்பிடித்துள்ளது.

Cartivate Motors (Pvt) Ltd., தமது சமூக ஊடகத்தின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட சீட்டிழுப்பினை கடந்த டிசெம்பர் 02ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தி நடாத்திய சீட்டிழுப்பின் பின் வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டார். சீட்டிழுப்பு ஜனவரி 09ஆம் திகதி களுபோவில இல. 29 இல் அமைந்த காட்சியறையில் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சல்மான் அப்சால் மற்றும் TVS லங்கா தனியார் கம்பனியின் பிரதான செயற்பாட்டு அலுவலர் கீதால் அன்டணி அவர்களால் மாத்தரையில் வசிக்கும் பிரியந்த எனும் அதிஷ்டசாலியான வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு TVS துவிச்சக்கர வண்டியும் அதன் திறப்பும் வழங்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த கஷ்டமான காலகட்டத்தில் மக்களை கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு. 'தனது கனவு வாகனம்' என்பதை உண்மைப்படுத்துவதற்காக Cartivate Motors (Pvt) Ltd., இவ்வாறான சீட்டிழுப்பினை அறிமுகப்படுத்தியது.



**Cartivate Motors (Pvt)Ltd.**
No: 29, Hospital Road, Kalubowila, Dehiwala.

உங்களுக்குத் தேவையான நவீன வாகனம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக எமது பேஸ்புக் கீழ்காணும் இன்ஸ்டாகிராம் மற்றும பக்கங்களில் பார்வையிடலாம்.

Web : www.cartivatemotors.lk
Email : cartivatemotors@gmail.com
Contact : 0777 591062
0777 900332

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023

மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுந்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப் படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகுகிறது.




நிகழவுள்ள சனிப்பெயர்ச்சியில், சிம்ம ராசி அன்பர்களுக்குக் கண்டகச் சனியாக வந்து அமரவுள்ளார் சனிபகவான். இதுவரையிலும் உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் மகரத்தில் இருந்த சனிபகவான், இப்போது 7ஆம் இடமாகிய கும்பத்துக்குப் பெயர்கிறார். இந்தக் காலகட்டத்தில் திருமண விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது. அதேநேரம் இந்த ராசி அன்பர்களுக்கு வீடு, வாகன யோகம் உண்டு.

சிலருக்குப் புதிய தொழில் தொடங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அமை யும். கடன் தொல்லைகள் தீர வழி பிறக்கும். வெளிநாடு செல்வதற்கு, இதுவரையிலும் இருந்த தடைகள் நீங்கும். பருவ வயதில் இருப்பவர்கள், புதிய அறிமுகங்கள் நட்புக்களிடம் கவனமுடன் பழக வேண்டும். பண விவகாரங்களில் ஏமாற்றம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். புதிய வாகனம் வாங்குவதும் மாற்றுவதும் சாதகமாகும். ஆலய வழிபாடுகள், ஆன்மிக சிந்தனைகள், பணிகள் உங்களுக்கு இந்தக் காலக் கட்டத்தில் கைகொடுக்கும்.

**பெண்களுக்கு:** ஏற்றத்தாழ்வுகள் உள்ள காலம். கர்ப்பிணிகள் மருந்து உட்கொள்ளல், பயணம், அன்றாட வேலைகளில் கவனமுடன் இருக்க வேண்டும். பூரம் நட்சத்திரக்கார பெண்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும்.



உத்திரம் நட்சத்திரக்காரர்களுக்குப் பணியி டத்தில் கவனம் தேவை. மகம் நட்சத்திரக்காரப் பெண்களுக்கு வாக்கில் கவனம் வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சற்றுக் குடும்பப் பொறுப்புகள், அலுவலகப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் முன்னேற்றம் உண்டு. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பெண் குழந்தைகளுக்கு மன உறுதி வேண்டும். அறிமுகம் இல்லாதவர்களிடத்தில் பழகும்போது எச்சரிக்கை தேவை முடிந்தவரை பெற்றோர்களுடன் இருப்பது நல்லது.

**உத்தியோகத்தர்களுக்கு:** பணியிடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். ஒருசிலருக்கு வெளியூர் மாற்றம் ஏற்படலாம். இது எதிர்பாராத ஒன்றாக அமைய உள்ளது. அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு, உயர் அதிகாரியிடம் பேசும்போது கவனம் வேண்டும். வேலை நேரங்களில் உங்களின் சிந்தனை மற்றும் செயலில் அதீத கவனம் இருந்தால் நன்மை ஏற்படும்.

**வியாபாரிகளுக்கு:** சிறுதொழில் செய்பவர்களுக்கு நல்ல சிறப்பான காலம் இது. ரியல் எஸ்டேட் மற்றும் எண்ணெய் வியாபாரம் செய்பவர் களுக்கு நல்ல லாபம் ஏற்படும். கூட்டுத்தொழில் புதியவர்களைச் சேர்ப்ப திலும் இணைந்து பணியாற்றுவதிலும் கூடுதல் கவனம் தேவை; அவர்களால் சிற்சில இழப்புகள் ஏற்படலாம். தொழில் விரிவாக்க நடவடிக்கைகளிலும் வேகம் கூடாது. தகுந்தவர்களிடம் ஆலோசனைப் பெற்று, அதன்படி செயல்படுவதால் வெற்றியும் லாபமும் கிடைக்கும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் வெற்றிலை மாலை சாற்றி ஆஞ்சநேயரை வணங்கவும். மாதம் ஒருமுறை அனுமனுக்கு வெண்ணெய்க் காப்பு சாற்றி, தயிர் சாதம் அன்னதானம் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

தெல்லிப்பழை வறுத்தலைவிளான் பகுதியில் டச்சு வீதியிலிருந்து 500m தூரத்தில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**075 099 0230** (CR 39040) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ். K.K.S புகையிரத நிலையத்தில் இருந்து 1 km தூரத்தில் 8 பரப்பு காணியும் K.K.S மயிலிட்டி கரையோர வீதியில் இருந்து 3 ஆவது காணியும் 12 பரப்பு விற்பனைக்கு உண்டு. (CR 39043)(3/6)

**074 014 7422**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உசன்.
பனங்காட்டில் 10 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
வாங்க விரும்புபவர்கள் தொடர்பு
கொள்ளவும். (CR 39044)(3/6)

**077 736 8685**

## விற்பனைக்கு

கடலட்டை பண்ணைக்குரிய பிளாஸ்ரிக் வலை (Plastic Net) Size No:-6, 1m x 15m றோல் விற்பனைக்குண்டு.
கரைவலை செய்வதற்குரிய 400 பாகம் நீள முள்ள வலையும், மடியும், காவிகளும் விற் பனைக்குண்டு.

**075 278 6033** (CS 22821) 4-6)

## வீடு விற்பனைக்குண்டு

கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கில் நல்ல
நிலையிலுள்ள
மேல்மாடி வீடு உடன்
விற்பனைக்குண்டு. (cs22828) (2-6)

**072 297 9032**

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் கோப்பாய்பொலீஸ் நிலையத் திற்கும் (கோண்டாவில் - இருபாலை) இராசபாதை சந்திக்கும் இடையில் இராசபாதை வீதியை முகப்பாக கொண்ட காணி விற்பனைக்குண்டு நேரில் வரவும்.

**076 945 8101** (CR 39041) (3/6)

## வேலை வாய்ப்பு

தேங்காய் எண்ணெய் ஆலைக்கு
வேலைக்கு ஆள்கள் தேவை.
ஆண்/ பெண்

**077 171 2336 ,**
**075 981 7124** (CS22839) 4-6)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹம்டன்
லேனில் இரண்டு அறை வீடு
4 ஆம் மாடியில்
விற்பனைக்குண்டு.
98 இலட்சம். (CR 39046)(3/6)

**071 484 0610**

## APARTMENT FOR SALE



களுபோவில Hospital RoadFacing கொண்ட
24 பேர்ச்சஸ் இல் 6 வீடுகளுடனான
முழு Apartment விற்பனைக்கு.

**0774271404**

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு புடைவை விற் பனையில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் உடன் தேவை.
வயது : 18 - 40 வரை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
பாடசாலை படிப்பை முடித்தவர்களும் கொள்ளலாம். (CR 39036)(3/6)

Contact number:
**0769790684 / 0773858332**

## அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான றோயல் நெய்



உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான "றோயல் நெய்" கொண்டு
தயாரித்த அறுசுவை உணவுகளுடன்
கொண்டாடி மகிழுங்கள்

Packed By:-
**Royal Industries®**
Marketed By:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: **021 2222 567**

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்



1960 ஆம் ஆண்டுமுதல் முன்னணியில் இயங்கும்

## சாரங்கா நகை மாடம்

## சாரங்கா நாணயமாற்று சேவை



அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று சேவை

WESTERN UNION MONEY TRANSFER
Ria MONEY TRANSFER

- வெளிநாட்டு நாணயங்களுக்கு கூடிய விலை வழங்கப்படும்.
- பழைய நகைகளுக்கு கூடிய விலை.
- வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**021 2226972, 021 222 8869**

**Hotline: 0773577212** (CR 38359) (3/6)



## உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு!

அதிநவீன சிகிச்சைகள் இருக்கையில் கவலை எதற்கு?

## பிரசாந்த் செயன்முறை கருத்தரிப்பு மையம்

PFIRC

இலங்கை மற்றும் வெளிநாடு வாழ் இலங்கையரின்
25 ஆண்டு கால நம்பிக்கைக்குரிய ஒரே மருத்துவமனை!



இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

- கருவுருவாவதில் சிக்கல்
- தொடர் கருச்சிதைவு
- விந்தணுக் குறைபாடு
- நீரிழிவுடன் கருத்தரிப்பு
- பிந்திய வயதில் கருத்தரித்தல்
- கர்ப்பப்பை கட்டிகள்

போன்ற பிரச்சினைகளுக்கு
அதிநவீன சிகிச்சைகள்
மூலம் தீர்வு!

INTERNATIONAL ACCREDITED CLINIC


## குழந்தைப்பேற்றுக்கான இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

ஜனவரி 29 ஆம் திகதி
ஞாயிற்றுக்கிழமை
கொழும்பு, வெள்ளவத்தை
ரோயல் மருத்துவமனையில்

புத்தாண்டிற்கான விசேட சலுகைகள்!!

விபரங்களுக்கு:
**0760155882, 0760155883**

டொக்டர்.
கீதா ஹரிப்ரியா
அவர்களை நேரில்
சந்தித்து
ஆலோசனை
பெறலாம்!



## பிரசாந்த் மருத்துவமனை தகவல் மையம்

ரோயல் மருத்துவமனை, 62, டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை
www.pfrcivf.lk | infopfrcsl@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகளை...

இராணுவ முகாமுக்கு முன்னால் முட்கம்பிகள் அமைத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் தொடர்பில் மக்கள் தெரிவித்ததாவது:- கடந்த 33 வருடங்களாக நாங்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு பல்வேறு இடங்களில் வசித்து வருகின்றோம். எங்களின் பூர்வீக இடங்களை 33 வருடங்களாக இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளது. போர் முடிவடைந்து 10 வருடங்களுக்கு மேலாகி விட்டது. தொடர்ந்தும் இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எங்களுடைய காணிகளை வைத்திருக்கின்றது. சொந்தக் காணிகள் எமக்கு இருக்கத்தக்கதாக நாங்கள் வாடகைக்கும் அயலவர்களின் கோடிகளுக்குள்ளுமே வசித்து வருகின்றோம். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வென்ற பேச்சை ஆரம்பித்திருக்கும் அரசாங்கம் அதற்குரிய நல்லெண்ணச் சமிக்ஞையாக எங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் - என்றனர். (அ-ம-23)

## ரணில்...

பின்னர் யாழ்ப்பாணத்துக்கு முதன்முறையாக இன்று வருகைதரவுள்ளார். இன்று காலை பலாலி வானூர்தி நிலையத்தில் வந்திறங்கும் அவர், நாகவிகாரையின் விகாராதிபதி, யாழ். ஆயர், நல்லை ஆதீன குருமுதல்வர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். அதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இல்லத்தில் மதிய உணவு விருந்துபசாரத்தில் பங்கேற்கவுள்ளார். பி.ப. 3 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் தேசிய தைப்பொங்கல் விழாவில் ஜனாதிபதி ரணில் கலந்துகொள்வார். அதனைத் தொடர்ந்து துர்க்கா மணிமண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளை முடித்துக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ். மாவட்டச்செயலகத்தில் காணி தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளார். இதில் கலந்து கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் குணரத்ன, முப்படைத்தளபதிகள் ஆகியோர் வருகை தரவுள்ளனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகள், வன உயிரிகள் திணைக்களம், வனவளத்திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளன. (அ-ம-ஒ-5-26)


**கொழும்பில் முதியோர் பராமரிப்பு சேவை**

உங்கள் பெற்றோர் அல்லது உறவினர்கள் அமைதியான சூழலில். தரமான உணவுடன் பராமரிக்கப் படுவார்கள்.

**077 712 4463**

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூர்ப் பகுதியில் வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.

**077 317 4416, 077 501 3103**

**வேலையாட்கள் தேவை**

பிரபல பெண்கள் விடுதிக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. விடுதி மேற்பார்வையாளர்கள் (பெண்)
2. விடுதி சுத்திகரிப்பாளர்கள் (பெண்)

Note:- * 35-50 வயதிற்குட்பட்டவர்கள்.
* அடையாள அட்டை பிரதி தேவை.

தொடர்புகட்கு: **076 378 4109**

**காணி விற்பனைக்குண்டு**

கட்டப்பிராய் (வட்டக்குளம் வைரவர் கோயிலுக்கு சற்று முன்பாக) பருத்தித்துறை வீதியிலிருந்து 50M உள்ளாக ஒழுங்கையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு:
**077 457 5044, 077 083 4173**

**இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்**

பிரிவு 45

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Psychology & Counselling
- Diploma in Political Science
- Diploma in Fisheries Science

ஆரம்பம் : 21.01.2023, 10.00 AM

**IPS** Thirunelvely.
T.P:- 021 432 0229
076 685 2529

**நிறைவாழ்வு மையம்**
**CENTRE FOR HOLISTIC HEALING**

**SUJANI'S பிரெஞ்ச் வகுப்புகள் -**
**Diploma in French**
**(Spoken French Grammer Including A1, A2)**
**Starts on 01.02.2023**
**Mc. Leod Hospital Premises, KKS Road, Inuvil.**
**078 352 6450, 077 917 7230, 077 364 4667**
(CS 22819) (2.6)

**வேலையாள்கள் தேவை**

யாழ். பல்கலைக்கழகத்தை அண்மித்து உள்ள மென்பான நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

(CS 22791) (4.6) **077 137 1617**

**வீடுகள் விற்பனைக்கு**

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் 2 வீடுகள் விற்பனைக்கு உண்டு.
இந்து மதகுருமார்கள், சைவ வாழ்க்கை முறையைப் பின்பற்றுபவர்களுக்கு மிகவும் பொருத்தமான சூழலில் அமைந்துள்ளது.

01. நான்கு அறைகள், இரண்டு hall, attached bathroom கொண்ட 1 3/4 பரப்புக் காணியில் அமைந்த 32 அடி வீடு.
02. மூன்று அறைகள் கொண்ட attached bathroom உடனான 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 32 அடிவீடு.

(CR/38971)

தொடர்புகளுக்கு: **076 400 3059**

**வேலையாள்கள் தேவை**


ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்குக் கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள்கள் தேவை.

- நிர்வாகத்தை நிர்வகிப்பவர் - 60.000/= - 70.000/=
- அனுபவமுள்ள வேலையாள் - 75.000/=
- EPF , ETF இருக்கிறது.
- ஞாயிறு விடுமுறைநாள்
- வருடந்தோறும் 10.000/= சம்பள உயர்வு
- விரும்புபவர்கள் நேரில் வந்து சந்திக்கவும்.

(CS/22834)4.6)

**077 067 4452**


## 19ஆவது ஆண்டு நினைவலைகள்



**அமரர் பேரானந்தம் உமாசுதன்**
(போட்டோ சுதன்)

மலர்வு
11.12.1974

உதிர்வு
15.01.2004

பாரினிலே எமைத் தவிக்கவிட்டு
பத்தொன்பது ஆண்டுகள் கடந்தனவே
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்று விட்டாயே
எம் நெஞ்சை விட்டு அகலாது உன் முகம்
உலகம் உள்ளவரை நீங்காது உன் நினைவு

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(CS 21546) 4-6)

## மரண அறிவித்தல்

மலர்வு 02 . 04 . 1931



உதிர்வு 07 . 01 . 2023

### திருமதி புனிதவதி ஆறுமுகம் (ராசாத்தி)

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி)

யாழ். வேலணை 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி ஆறுமுகம் (ராசாத்தி) கடந்த (07.01.2023) சனிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், Dr.யசோதரா (கனடா), Dr.சசிதரா (லண்டன்), Dr.சபேஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மரத்தினம், சண்முகரத்தினம், திலாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான திலகவதி, சண்முகநாதன், பத்மாவதி, கமலாதேவி மற்றும் இலட்சுமிதேவி (இந்திரா), தயாநிதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, கணேசலிங்கம், மகேந்திரநாதன் மற்றும் அகிலத்திருநாயகி, குணரத்தினம், காலஞ்சென்ற ஏகாம்பிகை மற்றும் பூமணி ஆகியோரின் மைத்துனியும், முரளிதரன், கிரிதரன், ஸ்ரீதரன், கலாதரா, வசுந்தரா, சுமித்ரா, Dr.சிவானுஜா, சேயோன், Dr.சிவப்பிரியா, Dr.சுபேந்திரன் ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும், குமரன், காந்தன், சயந்தன், Dr.வரதன் ஆகியோரின் அன்பு மாமியும், Dr. கிருஷ்ணி, Dr.திவ்வியா, சேயோன், விக்னேஷ், குமார், திஷான், பிரம்மன், நீரஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கிருஷ்ணா, அனவியின் செல்லப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 352 5432, 077 532 7181

தகவல்:
குடும்பத்தினர்

(cs 22836) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 11 . 1947



மறைவு 12 . 01 . 2023

### திருமதி சாரதாமணி பேரம்பலம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், பெரியமணல், காரைநகர் மற்றும் தெஹிவளை கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாரதாமணி பேரம்பலம் கடந்த (12.01.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும், வாசுகி (அவுஸ்திரேலியா), வாகீசன் (பிரதேச செயலகம் - சங்கானை), காலஞ்சென்ற சிவகௌரி மற்றும் செந்தாமரை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தா, புஸ்பலீலா ( ஆசிரியை - சென். ஜோன்ஸ் கல்லூரி), கவிதாசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கலைமகள், இராஜயோகன் மற்றும் சுசீலாதேவி, சறோஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அகிலேஷன், அக்ஷிதா, சுபஹரி ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, குகானந்தன், பத்மநாதன், ஜெயசோதி மற்றும் துரைராஜா (கனடா), கதிரவேலு ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் வீரபத்திரர் கோவிலடி, பங்களா லேன், மல்லாகத்திலுள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


வீரபத்திரர் கோவிலடி,
பங்களாலேன், மல்லாகம். (CS 22825) 4-6)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 627 1488**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது அருமை நண்பன் சுந்தரேசனின் (சுந்தர்)
(பழைய மாணவன், பரி.யோவான் கல்லூரி, 2001 A/L)
அன்புத் தந்தை

## சரவணமுத்து சுப்பிரமணியம்

அவர்கள் 08.01.2023 அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் எய்தி விட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் எமது நண்பனுக்கும்,அன்னாரின் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.

# மரண அறிவித்தல்

உதயம் 06 . 01 . 1933



மறைவு 13 . 01 . 2023

## திரு.முருகுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற பதவிநிலை உதவியாளர் அஞ்சல் திணைக்களம்)

மயிலிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முருகுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் கடந்த (13.01.2023) வெள்ளிக்கிழமை மயிலிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை பகவதி தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி தங்கம் தம்பதியரின் பட்சமுள்ள மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், இளங்கோ, பாமினி, நாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு தந்தையும், சேபாலி, சிவசுப்பிரமணியம், பாலரஜனி ஆகியோரின் அருமை மாமனாரும், மகிழ்நன், சரண், இலக்கியா, மதுவந்தி, அப்சரா, பவன் ஆகியோரின் பேரன்புக்குரிய பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் மயிலிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மயிலிட்டி,
காங்கேசன்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22844) 1/6

# மரண அறிவித்தல்



## திருமதி இலட்சுமி கந்தசாமி

கெற்பேலியைப் பிறப்பிடமாகவும், தனங்கிளப்பை வசிப்பிடமாகவும், தற்போது துர்க்கை அம்மன் கோயில் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இலட்சுமி கந்தசாமி கடந்த (13.01.2023) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதி களின் அன்பு மகளும், கந்தசாமியின் ( பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர்) அன்பு மனைவியும், சசிகரன் (பல்கலைக்கழக ஊழியர்), தயாபரன், லோஜினி, கோகுலன் (பிரான்ஸ்), கிருஷ்ணவேணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கருணேஸ்வரி, குகாஜினி, பாலேஸ்வரன், செல்விகா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 39048) 4/6

077 894 5857, 077 963 9617

# மரண அறிவித்தல்

மலர்வு 05 . 02 . 1940



உதிர்வு 11 . 01 . 2023

## திரு.செல்லையா சின்னராசா

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் இராஜவீதி கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லையா சின்னராசா அவர்கள் கடந்த (11.01.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரட்னாயக்கா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற செல்வக்குமார் மற்றும் சுயாதா, சசிக்குமார், சுமிதா, சிவா ஆகியோரின் அன்புத்தந்தையும், தர்மாம்பாள், பாஸ்கரன், ஜெயந்தி, சசிகுமாரன், தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜன், நிரோஜன், அனோயன், தஸ்மினா, சாருஜன், சாரகன், சாருஜா, சாரகா, அக்சையா, அபினயா, ஆரணி, கஸ்தூரி, அஜய், ஆயிஷா ஆகியோரின் அன்பப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

076 026 6903,
077 353 8626

தகவல்:
குடும்பத்தினர்

(CS 22841) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன அரசாங்கத்தின் டீசல் கிளிநொச்சியில் பகிர்வு




கிளிநொச்சி, ஜன. 15

சீன அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட டீசலை கிளிநொச்சி விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன கலந்து கொண்டு விவசாயிகளுக்கான டீசல் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். (ம-113)


டாக்டர் ஆவது உங்கள் கனவா ?

M.B.B.S 2023 INTAKE

உலக சுகாதார நிறுவனம்,பொதுநலவாய நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள். உள்நாட்டு அனுமதிக் கட்டணங்கள் மட்டுமே

FEB - DEPARTURE

பகுதியான கொலஷிப் கிடைக்கும்

உடனடி வேலைவாய்ப்பு UK,USA,Australia, Canada Min.Salary 5000 USD

பங்களாதேஷ் / மலேசியா

( 5 Years + 1 வருட பயிற்சியுடன்)

State Universities -
- கவர்ச்சிகரமான கல்விக் கட்டணங்கள்
- சிறந்த வசதிகளை கொண்ட விடுதிகள்

Local - 2018 O/L & 2021 A/L
( London - O/L 2019 / A/L 2022)
பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்

NEW MIGRATION OPPORTUNITY

Earn a dual Award Master of Business Administration (MBA) degree from Alzette University France / Perdana University Malaysia
- Duration - 12 months
- Flexible classes during Weekdays or Weekends
- Intake- March / July & November every year
- Option to study & work in Malaysia
- Graduation in France
- Affordable fees with easy monthly instalments

அழையுங்கள் : 0777348049 / 0757213200

Global Education Training & Services (GETS)
No. 315/A, Negombo Road, Kandana
Email : getslanka@gmail.com


## பொங்கல் விழா

சாவ., ஜன. 15

போக்கட்டி அ.த.க பாடசாலையின் பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக பத்தனை சிறீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவத்திரு சி.கா.கமலநாதன் கலந்துகொள்ள வுள்ளார். (ம-14-159)

## விளையாட்டுப் போட்டி

கிளி., ஜன. 15

பேரலைசி.சி.த.க பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கிளி வடக்கு, தெற்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.காந்தச்செல்வன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-14-159)


மங்கள இசை



ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி

லயஞான சுடரொளி K.P. செல்வநாயகம்

அவர்கள் தற்சமயம் இலங்கை வந்துள்ளார். உங்கள் மங்களகரமான நிகழ்வுகளிற்கு தனி தவிலாகவோ அல்லது குழுவாகவோ அழைத்து மகிழ தொடர்பு கொள்ளுங்கள்.

Viber / Whatsapp: 004917620983199

Logal : 077 176 8012 (NE 21549) (3/6)


## சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்.**

எமது பாடசாலையில் இயங்கிவரும் சிற்றுண்டிச்சாலையை எதிர்வரும் 01.03.2023 முதல் கேள்வி ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கேள்வி கோருவோர் எதிர்வரும் ஜனவரி 16ஆம் திகதி முதல் ஜனவவரி 31 ஆம் திகதி வரை பாடசாலை அலுவலகத்தில் ரூபா ஆயிரத்தினை (மீளளிக்க முடியாது) செலுத்தி விண்ணப்பத்தினைப் பெற்று பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்பாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ பாடசாலை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கோருகின்றோம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது கேள்விப் பணமாக ரூபா பத்தாயிரத்தினை (மீளளிக்க முடியும்) அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இக் கேள்வி ஒப்பந்தம் பாடசாலை அலுவலகத்தில் பெப்ரவரி 20ம் திகதி மதியம் 12.00 மணியளவில் திறக்கப்படும்.

**அதிபர்.**

(CR/39011)4,6)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

**தேவராசா ஆனந்தி**

மண்ணில் 07.09.1969

விண்ணில் 18.12.2019


திதி: தேய்பிறை சப்தமி

கானமிசைத்துக் களிப்போடிருந்த வாழ்விங்கிங்கே
ஆனந்தியெனும் குலவிளக்கு அணைந்திட
ஆனந்தமிழந்து அர்த்தம் தொலைந்து
வானிழந்து வீழ்ந்த வலியோடு உங்கள்
நினைவேந்தி வாழ்கிறோம் நித்தமும்

தொல்புரம் மேற்கு, சுழிபுரம். (cr 39038) (2/6)

பிரிவால் வாடும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் கோதண்டபாணி**

கோப்பாய் வடக்கு இலகடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி சோனெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கோதண்டபாணி நேற்று (14.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியரின் ஏகபுத்திரனும், காசிப்பிள்ளை காமாட்சி தம்பதியரின் மருமகனும், அமுதமணியின் அன்புக் கணவரும், கிருபாகரன் (முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்) நந்தராஜன் (அலுவலகப் பணியாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), சிறிசபேசன் (அலுவலகப் பணியாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதினி, பத்மரஞ்சினி, மோகனரூபி (ஆசிரியர்யா/திருக்குடும்ப கன்னியர் மடம், தேசிய பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிநயன், அகிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளை, நவரத்தினம், இராசையா, பொன்னையா, கந்தையா மற்றும் அன்னபூரணம், செல்வமணி, காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், இலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர். (CS 22852) 1/6

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்

**திரு. ம.நவநீதன்**

அவர்களின் அன்புத் தாயார்

**நாகம்மா மகாலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம் ஊழியர் நலன்புரிச்சங்கம்

(CR 39045) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோதமாக

## இறைச்சி விற்பனை: இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 15

அனுமதியின்றி மாட்டு இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உடுப்பிட்டி மற்றும் சாண்டாசந்தை பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடைகளில் நேற்று சனிக்கிழமை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் ஆகியோர் இணைந்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போது உரிய அனுமதி மற்றும் மாட்டிறைச்சி கொண்டு செல்வதற்கான வழித்தட அனுமதி இன்றி இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மாட்டு இறைச்சியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ம-14-9)

# உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்குப் பாடம் புகட்டுவர்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

உள்ளாட்சிமன்றத் தேர்தல் ஊடாக ரணில் ராஜபக்ச அரசுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன பெரமுனவும் அறிவித்துள்ளன. இரு கட்சிகளுக்கும் இடையிலான இணைவு என்பது புதிய விடயம் அல்ல. இது ஏற்கனவே திட்டமிட்ட ஒரு விடயமாகும். இந்த இணைவுக்காகவே ராஜபக்சக்கள் ரணிலை ஜனாதிபதியாக்கினர். எனவே, இந்த ரணில் - ராஜபக்ச ஆட்சியாளர்களுக்கு தேர்தல் ஊடாக மக்கள் சிறந்த பாடத்தைப் புகட்டுவார்கள்.

வரும்.... ஆனா வராது... என்ற நிலையிலேயே தேர்தல் உள்ளது. ஏனெனில் தேர்தலை ஒத்திவைப்பதற்காக பல வழிகளிலும் ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். எது எப்படி இருந்தாலும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதே நிலைப்பாட்டில்தான் தேர்தல் ஆணைக்குழுவும் உள்ளது. நீதிமன்றத்தில் சில மனுக்கள் உள்ளன. எனவே, உயர்நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை காத்திருப்போம்.

உள்ளாட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும். அடுத்தவாரம் எமது பட்டியல் கையளிக்கப்படும். 75 சதவீத இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியே வெற்றிபெறும் - என்றார். (ம)

நாமே...

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலுக்குப் பின்னர் 5 தமிழ்க் கட்சிகளும் பிற்பகல் 12.20 மணியளவில் புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

ரெலோ சார்பாக அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், புளொட் சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் அதன் தலைவர் ந.சிறிகாந்தாவும், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் அதன் தலைவர் சிவநாதன் நவீந்திராவும் (வேந்தன்) இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தம்மைப் பிரகடனப்படுத்தியுள்ள இந்தப் புதிய கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 'ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி' எனும் பெயரில் 'குத்துவிளக்கு' சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5 தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றாக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக, எமது இனத்துக்கான பலம் பொருந்திய கட்டமைப்பாக தோற்றம் பெறவேண்டும் என்ற கோரிக்கையை மறுதலித்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியாக உருவாக்குவதற்கு மறுப்புத் தெரிவித்தும் தானாகவே அதிலிருந்து வெளியேறியதால் மேற்கண்ட 5 கட்சிகள் தமிழ் மக்களின் நலன்களையும் நம்பிக்கையையும் காப்பாற்றும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருதரப்பு அரசுகளும் ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் வரலாற்றுபூர்வ வாழ்விடமான இணைந்த வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவமாக வாழ்வதை உறுதி செய்யும் வகையில், ஒற்றையாட்சி முறையை நிராகரித்து சமஷ்டி அடிப்படையிலான பூரண பொறுப்பு வாய்ந்த சுயாட்சியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மேற்கண்ட அரசியல் அமைப்புகள் தமது நோக்கங்களை வெற்றிகொள்ளும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி இயங்குவது என்று 5 தமிழ்க் கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

மேலும் இலங்கைத் தீவில் எமது மரபுவழித் தாயகத்துக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் சட்ட பூர்வமானதும், ஜனநாயக ரீதியிலானதுமான சகல உரிமைகளை நிலை நாட்டுவதையும் பேணிப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்தக் கூட்டமைப்பு செயற்படும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கிவரும் பல்வேறு கட்சிகள் 2001ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வருகின்றபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டமைக்கப்பட்ட அரசியல் நிறுவனமாக இல்லாமையினால், மேற்கூறிய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்டமைக்கப்பட்ட வலுவான அரசியல் சக்தியாக உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளன.

மேற்கூறிய அரசியல் கட்சிகளுக்கிடையில் எட்டப்பட்டிருக்கும் கருத்தொற்றுமையின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

1. மேற்கூறிய அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும்.

2. மேற்கண்ட கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய செயற்குழு ஒன்று அமைக்கப்படும்.

3. இந்தத் தேசியச் செயற்குழு, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிற்கான முழுமையான அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு, அதனை அடைவதற்கான அனைத்து வழிகாட்டல்களையும் நெறிமுறைகளையும் வகுத்துச் செயற்படும்.

4. செயற்குழுவிலும் செயற்குழுவால் அமைக்கப்படும் ஏனைய குழுக்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு சம உரிமைகளும் சம அளவான பிரதிநிதித்துவமும் வழங்கப்படும்.

5. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழுவின் ஏகமனதான முடிவுகளுக்கும் தவறும் பட்சத்தில் அதன் பெரும்பான்மை முடிவுகளுக்கும் அங்கத்துவக் கட்சிகள் கட்டுப்படும்.

6. மேற்கண்ட கட்சிகளையும் தேவையேற்படின் ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்துபட்ட வலுவான கட்டமைப்பாக உருவாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

7. தேர்தல் விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரிலும் அதன் சின்னமான குத்துவிளக்கையும் கொண்டு செயற்படும்.

8. இதற்கான நிரந்தர ஒரு கட்டமைப்பை சாத்தியமான விரைவில் உருவாக்கும்வரை இதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒவ்வொன்றிலிருந்தும் கட்சித் தலைவர்கள் உட்பட தலா மூவரைக் கொண்ட தேசிய செயற்குழு ஒன்று நிறுவப்படும்.

9. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளையும் இந்தச் செயற்குழுவே வழிநடத்தும்.

10. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களைக் கையாள்வதற்கும், ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய பிற பிரச்சினைகளைக் கையாள்வதற்கும் தேவையான நிபுணர் குழுக்களையும் ஏனைய உப செயற்குழுக்களையும் தேவை கருதி தேசிய செயற்குழு நியமித்துக்கொள்ளும்.

11. அங்கத்துவக் கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்டாலும் தத்தமது சுயாதீனத் தன்மையையும் தனித்துவத்தையும் பேணிக்கொள்ள உரித்துடையவை.

12. ஒவ்வொரு கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமை அமைப்பாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுடன், அங்கத்துவக் கட்சிகளையோ அல்லது கூட்டமைப்பின் கொள்கை, வேலைத்திட்டங்களை ஊடகங்களிலோ பொதுமேடைகளிலோ அல்லது சம்பந்தமில்லாதரப்பினரிடமோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ கருத்திடுவது தவிர்க்கப்படவேண்டும். இவை தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளையும் கண்காணிக்க ஒழுக்காற்றுக் குழு நிறுவப்படும்.

13. ஒரு கட்சியின் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி, உறுப்பினர்கள் மற்றொரு கட்சிக்குத் தாவினால் அதனை அங்கத்துவக் கட்சிகள் ஏற்கக் கூடாது.

14. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமானது கூட்டுத் தலைமைத்துவமாகவும் சுழற்சி முறையிலான தலைமைத்துவமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான முழுமையான யாப்பு உருவாகின்றபோது, இந்த விடயங்கள் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு உள்ளடக்கப்படும்' - என்றுள்ளது. (அ-ம-ஒ)


## மணப்பெண் தேவை

1. கொடிகாமம் - Jaffna Town, இந்து கௌரவ குலம் (V), ஆயிலியம், 1980, Lawyer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 32385
2. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), ரோகிணி, 1988, Senior Management Accountant Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 31457
3. மாவிட்டபுரம், இந்து, கௌரவகுலம் (V), கார்த்திகை, 1986, Electronic Eng, MBA, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 29544
4. Jaffna Town , இந்து, கௌரவகுலம் (V), சித்திரை, 1961, A/L , Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 28202
5. வடமராட்சி, இந்து, கௌவரகுலம் (V), சித்திரை, 1974, A/L, Machine Maintenance, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண்தேவை. பதிவெண் - 25446
6. சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (V), 1979, ரேவதி, Business, Germany citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31825
7. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1985, ரேவதி, Divorce (Nullified), Computer Engineering, Germany Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31625
8. வட்டுக்கோட்டை - மூளாய், இந்து, கௌரவகுலம் (V), கேட்டை, 1983, Charted Accountant, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 24770
9. கோப்பாய், இந்து, கௌரவகுலம் (V), 1984, சதயம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32160
10. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம் (V), 1990, விசாகம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32016
11. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1984, சுவாதி, BSc, Business Management, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31799
12. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம் (V), 1983, ரோகிணி, BSc (Hons) Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31305
13. கரவெட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1986, அத்தம், BSc (Hons) in quantity surveying, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 29720
14. மீசாலை, இந்து, கௌரவகுலம் (V), 1988, சதயம், MSc Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 29216

S.Sharma J.P, Astrologer, Whats app - 077 803 8193


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்...

கொழும்பில் நாளை திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய க.மகேசன், கடந்த முதலாம் திகதி முதல் பதவியுர்வுடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சின் செயலராகப் பொறுப்பேற்றுள்ளார். அவரின் வெற்றிடத்துக்கு இதுவரையில் யாழ். மாவட்டச் செயலர் நியமனம் மேற்கொள்ளப்படவில்லை. யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், பதில் மாவட்டச் செயலராகப் பணியாற்றி வருகின்றார். இந்த நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலராகப் பணியாற்றிய அ.சிவபாலசுந்தரன் யாழ். மாவட்டச் செயலராக நியமிக்கப்படவுள்ளார் என்று அறியமுடிகின்றது. (அ-ஓ-5)

## கூட்டமைப்பின்...

ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டிணைவில் உருவாகியுள்ள புதிய கூட்டணியானது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை தமது பதாகையில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தனித்து முகங்கொடுப்பதென சிபாரிசு செய்திருந்த நிலையில் அது தொடர்பிலான தீர்மானங்களை எடுப்பதற்காக பங்காளிகளுடன் கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வீட்டில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, தமிழரசுக்கட்சியின் மத்திய குழுவின் பரிந்துரையை முன்வைத்து உரையாடியபோது, பங்காளிக்கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் அவர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ செல்வதாக அறிவித்திருந்தார்கள். அப்போது சம்பந்தன், கூட்டமைப்பின் பெயரைப் பயன்படுத்துவது தொடர்பில் வினவியிருந்தார். அதனையடுத்து நடத்தப்பட்ட பேச்சுக்களில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை இருதரப்பினரும் பயன்படுத்துவதில்லை என்று இணக்கம் காணப்பட்டது. எனவே அந்தப் பெயரை வேறு தரப்புகள் பயன்படுத்தினால் அது தொடர்பில் நாம் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ-ம)

## தமிழகக்...

முதற்தடவையாக இலங்கையின் சுதந்திரநாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 11ஆம் திகதி இந்திய கலாசார மண்டபத்தின் திறப்பு விழாவுடன் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதன்போது தமிழகத்தின் பிராந்திய கிரிக்கெட் அணி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில், ரி-20 கிரிக்கெட் ஆட்டத்தில் அந்த அணி பங்குபற்றவுள்ளது. இதற்கான நிதி அனுசரணைகளை இலங்கை கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ-5)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 • 04 • 1942



இறப்பு 14 • 01 • 2023

## வைத்திலிங்கம் ஸ்கந்தராஜா (சிறி)

**(ஓய்வூதியர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்)**

வல்லை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் ஸ்கந்தராஜா (சிறி) நேற்று (14.01.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கானையைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜெயலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாயன்மார் கட்டு நல்லூரைச் சேர்ந்த திருநாவுக்கரசு (அப்பர்) மனோன்மணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சந்தானலட்சுமி (சாந்தா) அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்றவர்களான சங்கானையைச் சேர்ந்த கனகமணி, பாலசிங்கம், இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜிதன் (கிராம அலுவலர் - J/109 நல்லூர்), கிருஜா (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவித்ரா (கிராம அலுவலர்- J/120 கோண்டாவில்), தவேந்திரன் (இலங்கை வங்கி, சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்வின், வைஷ்ணவின், ஸஷ்மிகா, வைஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், விவேகானந்தன் (ஆனந்தன்), சுபத்திரா, யோகேஸ்வரி (சித்திரா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2023) திங்கட்கிழமை 45/20A, நாயன்மார் வீதி, நல்லூரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளுக்கு: 077 935 2639, 077 670 1597, 021 221 3661**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 22847) 1/6

# மரண அறிவித்தல்



## இளையதம்பி பொன்னம்பலம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பொன்னம்பலம் நேற்று முன்தினம் (13.01.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி -கனகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு கணவனும், பரமேஸ்வரன், வத்சலாதேவி, உமைபாலன், சிவபாலன், தமயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிர்தா, குணரட்ணம், சிவரஜனி, ரஜனி, காலஞ்சென்ற தவவிநாயகர் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், மகேஸ்வரி மற்றும் இராசையா, நல்லம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும், வர்சினி (லண்டன்), சிவாஜினி, கஜனி (பிரான்ஸ்) பிரவீனா (லண்டன்), ரிசாந்தி, குணாளினி, மிதிலன் (பிரான்ஸ்), ஜிதுஷன் (லண்டன்), பவித்திரா, திவியன், கவியா, துவாரகன், தெனிஷா, டிவாகர், டிலக்ஷனா ஆகியோரின் அன்பு பேரனும், கவிஷன், கிதுஷான், சஷ்வின், லக்ஷன், நிதேஷ், பிரணேஷ், அதிரா, ராகல்வியா, யாழ்அமுதன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**75/2, பலாலி வீதி, கந்தர்மடம்.**

**077 977 9777, 021 222 0054**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 22830) (3/6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# உணவகத்தில் தாக்குதல் நான்கு பேருக்குக் காயம்

கிளிநொச்சி, ஜன. 15

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுப் பகுதியில் உள்ள உணவகமொன்றில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில், நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தின் உரிமையாளர், அவரின் மனைவி, 16 வயதுடைய மகன் மற்றும் காசாளர் ஆகிய நால்வரின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-113)

## பணி நயப்பு விழா

கிளிநொச்சி, ஜன. 15

பளை மத்திய கல்லூரியில் கடமையாற்றிய அதிபர் க.உதயகுமாரன், இயக்கச்சி அ.த.க பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் சு.திருநாவுக்கரசு ஆகியோருக்கான பணி நயப்பு விழா, கிளிநொச்சி வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலையில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பளைக்கோட்ட அதிபர் ஒன்றியத் தலைவர் வ.ஜீவரத்தினம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா, பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.திலீபன் மற்றும் பளைக் கோட்ட அதிபர்கள் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். (ம-14-159)

### பொதி செய்பவர் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்துக்கு பொதி செய்பவர் தேவை.
வயதெல்லை - 21 - 40 இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(CS/48564)
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 4766
திங்கள் - வெள்ளி 9am - 5pm

### விற்பனைக்கு உண்டு

நெல்லு பாக் 105 x 65 cm தொகை விலையில் விற்பனைக்கு உண்டு. ஒன்றரை லட்சம் பாக் கையிருப்பில் உண்டு. தொடர்ச்சியாக விநியோகிக்கலாம்.
070 273 4440
(CS 22793) (4.6)

### வீடு, காணி விற்பனைக்கு

வியாபாரிமூலை, புலோலி மேற்கு பருத்தித்துறையில் நிலப்பரப்பு 4 குளி 5 அளவுடைய காணி வீட்டுடன் (ஓடு போடப்பட்டு கட்டி முடிவடையாத நிலையில்) விற்பனைக்கு உள்ளது. பருத்தித்துறை TOWN இலிருந்து அண்ணளவாக 3 1/2 km தூரத்திலுள்ளது. உண்மையாக வாங்குவதற்கு ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும். நியாயமான விலை (Market Price) கவனத்தில் கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: ஸ்ரீகுமார்
தொ.பே. இல:- 074 154 6142, 077 272 0595
Whats app:- +6143 170 8259
(NE/2154774.6)

### விற்பனைக்கு

08 அடி சுற்று 28 அடி உயரம் உடைய கோயில் கதவிற்கு உகந்த தறித்த வேப்பமரம் விற்பனைக்கு உண்டு.
(CS 22822)(3.6)
T.P : 076 307 8928

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியிலிருந்து 1/2 KM தூரம், பிரதான வீதியிலிருந்து இரண்டாவது காணி. 2 (இரண்டு) பரப்பு நல்ல தண்ணீர், நல்ல சூழல், சிவப்பு மண் விற்பனைக்கு உண்டு.
076 7558 606

### வீடு வாடகைக்குத் தேவை

3 பேரைக் கொண்ட வைத்தியர் குடும்பத்துக்கு நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி அல்லது கந்தர்மடம் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
(CS 22825) 4.6)
077 794 2679

### வேலை வாய்ப்பு

வலிகாமம் மேற்கில் இயங்கும் பல்பொருள் விற்பனை அங்காடிக்கு காசாளர் தேவை. கணினி அறிவுள்ள பெண்பிள்ளைகள் விரும்பத்தக்கது. மேலதிக விபரங்களுக்கு.
(cs 22832) (2.6)
071 246 0833, 072 277 0726

### கடை விற்பனைக்கு

இல.13, செம்மார் தெரு லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 25 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
பார்வையிடும் நேரம்:
காலை 9 மணி முதல் மாலை 6.00 மணி வரை.
தொடர்பு:- ஜெயம்
077 986 5457

### வேலையாள்கள் தேவை

கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல அரசி ஆலை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு)
(CS 22817)(4.6)
076 096 9734, 076 096 9735

### பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள வீட்டுக்குத் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்யப் பணிப்பெண் தேவை.
விபரங்களுக்கு:-074 141 6226

### மிக அவசரம் சிறுநீரகம் தேவை

B+ குருதி வகையைக் கொண்ட 33 வயதுடைய பெண் ஒருவருக்கு B+,B-,O+ அல்லது O- குருதி வகையைக் கொண்ட சிறுநீரகம் மிக அவசரமாகத் தேவை.
தொடர்பு: 077 8336 848

### A/L 2023, 2024

தரம்: 10,11
ஊடகக் கற்கை
தனிப்பட்ட குழு மற்றும் Zoom வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
இலங்கையின் எப்பகுதியில் இருந்தும் பங்குபற்றலாம்.
T.P.: 077 644 6514
தொடர்பு:Y.Kones

### உடனடி வேலைவாய்ப்பு

உணவு பொருள் விநியோக நிறுவனத்தில் Sales Rep ஆகப் பணியாற்ற ஆள் தேவை. மாத சம்பளம் + கமிசன் முன்னுரிமை.
(CS/22818)(4.6)
அழைக்கவும் :- 076 944 7737

### சமையல் தயாரிப்பாளர் தேவை

இலங்கை, இந்தியன் உணவு தயாரிப்பாளர் தேவை.
(CS/33049)(4.6)
தொடர்புகளுக்கு
076 679 5667

### பௌதிகவியல் & இணைந்த கணிதம் பிரத்தியேக வகுப்புக்கள் 2023/ 2024

English & தமிழ் மொழி மூலம்
A.Nithiyananthan (BSc, Dip. in Ed.)
...ளாள் ஆசிரியர்– யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (CS/22806)4.6
...6 799 9005/ 076 286 1394

### பணிப்பெண் தேவை

யாழ்.நகரப்பகுதியில் சமையல் மற்றும் வீட்டுவேலை செய்யக் கூடிய 30 - 55 வயதுக்குட்பட்ட பெண்ணொருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
077 737 4972, 077 737 4970

### A/L உயிரியல்

...023, 2024 A/L மாணவர்களுக்கு ...ரிப்பட்ட, குழுவகுப்புக்கள் (Personal / ...oup) பிரபல்ய முன்னணி ஆசிரியரி...ல் யாழ்ப்பாண நகரத்தை அண்மித்த ...ங்களில் நடத்தப்படுகின்றது.
077 386 7497

### AAT - கல்வி நிலையம் - சுன்னாகம் A/L - PHYSICS

- 2023 - ஈர்ப்புப்புலம் GRAVITATIONAL FIELD
  ஆரம்பம்: 16.01.2023; 6.00 pm -8.00pm
- 2024 - நிலையியல் (STATICS)
  ஆரம்பம்: 18.01.2023; 6.30 pm -8.00pm

(Zoom Class நடைபெறுகின்றது)
M.Kuganeswaran BSc (Hons) Dip.in Edu)
T.P.: 077 428 7373

### நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு, Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக்கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர் செய்யப்படும்.

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள், ஏமாற வேண்டாம். உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

உலகத்தரமிக்கது
வடமாகாணத்தில் முதன் முதலில்
12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்




(CS 48302)(3.6)

FINEX
இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
021 222 2363
northandeastengineering.com
North and East Engineering
55 Stanly Road,Jaffna, Srilanka.
077 524 4177, 077 232 3000



...ந்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org